





# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:207 | 11-02-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

11.02.2026 தை 28
புதன்கிழமை

சூரிய உதயம் 6.35

திதி:
இன்று காலை 11.16 வரை நவமி பின்பு தசமி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 12.09 வரை அனுஷம் பின்பு கேட்டை

யோகம் :
இன்று அதிகாலை 3.06 வரை துருவம் பின்பு வ்யாகாதம்.

கரணம் :
இன்று காலை 11.16 வரை கரசை பின்பு வணிசை.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று பிற்பகல் 12.09 வரை அசுவினி பின்பு பரணி

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30
இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30.
எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
காலை 10.30 – 12.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ஓம் பிர்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கோரி காங்கிரஸ் நோட்டீஸ்!

**புதுடெல்லி, பிப்.11:** : மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கோரி காங்கிரஸ் கட்சி நோட்டீஸ் வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த ஜன.28-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. பிப்.1-ம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ந்து பட்ஜெட் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பிப். 4 ஆம் தேதி அன்று பிரதமர் மோடி நன்றி தெரிவித்து உரையாற்றுவார் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் பிரதமர் மோடி அன்று அவைக்கு வரவில்லை.

இந்நிலையில், "பிரதமர் மோடியை நான்தான் வர வேண்டாம் என்று கூறினேன்" என்று அவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்தார். இதனால் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனங்களை எழுப்பின. குறிப்பாக காங்கிரஸ் கட்சி பெண் எம்.பி.க்கள் அவமதிக்கப்பட்டதாக கூறி கடுமையான விமர்சனங்களை முன்வைத்தது.

இந்நிலையில், மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை நீக்கக் கோரி அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கோரி காங்கிரஸ் கட்சி எம்.பி.க்கள் இன்று (பிப். 10) நோட்டீஸ் வழங்கியுள்ளனர். இதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 119 எம்.பி.க்கள் கையெழுத்திட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேச அனுமதிக்கப்படவில்லை, 8 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டது, எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்கள் மீதான அவதூறு ஆகியவற்றுக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஓம் பிர்லா கூறியது என்ன? முன்னதாக சபாநாயகர் ஓம் பிர்லா, ''மக்களவையில் சில எம்பிக்கள் முறையற்ற முறையில் நடந்து கொண்டனர். குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரை நிகழ்த்த பிரதமர் மோடி மக்களவைக்கு வருவதாக இருந்தார். அவர் வருவதற்கு முன்பாக, காங்கிரஸ் பெண் எம்பிக்கள் பிரதமர் இருக்கையைச் சுற்றி வளைத்திருந்தனர்.



பிரதமரின் உரையின்போது, காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சி எம்பிக்கள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்யலாம் என்று எனக்கு முன்கூட்டியே தகவல் கிடைத்தது. அரசியல் கருத்து வேறுபாடுகள் நாடாளுமன்ற அவைக்குள் கொண்டுவரப்பட்டதில்லை.

ஆனால், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில எம்பிக்கள், பிரதமரின் இருக்கைக்குச் சென்று எதிர்பாராத ஒரு சம்பவத்தை நிகழ்த்தக்கூடும் என எனக்கு நம்பகமான தகவல் கிடைத்தது.

அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் அது தேசத்தின் கண்ணியத்துக்கு கடும் சேதத்தை ஏற்படுத்தி இருக்கும். அதனால்தான், நடாளுமன்றத்துக்கு வர வேண்டாம் என பிரதமரை நான் கேட்டுக்கொண்டேன். நேற்று நடந்தது நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு கரும்புள்ளி'' என தெரிவித்திருந்தார் என்பது நினைவுகூரத்தக்கது.

## "கேசவ விநாயகத்துக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இல்லை"

**திருப்பூர், பிப்.11:**

"கேசவ விநாயகம் அரசியல்வாதி அல்ல. அவர் ஒரு பிரச்சாரகர். கேசவ விநாயகம் குறித்த வீண் சர்ச்சைகள், விவாதங்கள் முடிவுக்கு வரும் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது" என பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக அமைப்பு பொதுச் செயலாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள கேசவ விநாயகத்துக்கு ஆர்எஸ்எஸ் அமைப்பில் 'சத்பாவ்' (சமுதாய நல்லெண்ணம்) எனும் புதிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அண்ணாமலை உள்ளிட்டோர் கேசவ விநாயகத்தை மாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தியதாக தகவல் வெளியானது. இந்தப் பின்னணியில்தான் கேசவ விநாயகம் குறித்து அண்ணாமலை பேசியிருக்கிறார்.

இது குறித்து திருப்பூரில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "கேசவ விநாயகம் நீண்ட காலமாக பாஜவில் சிறப்பாக பணியாற்றியவர். நல்ல மனிதர், கடுமையாக உழைக்க கூடியவர், மிக எளிமையாக வாழக்கூடியவர். அவர் ஆரஎஸ்எஸ் பிரச்சார பணியில் இருக்கிறார். ஆர்எஸ்எஸ் இயக்கத்தில் இருந்து பாஜவுக்கு கொடுக்கப்பட்டார். பின்னர் பாஜவில் இருந்து திரும்ப பெறப்பட்டு, அவருக்கு வேறு பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

கேரளா, கர்நாடகா, தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் பாஜக அமைப்பு பொதுச் செயலர்கள் இல்லை. கேசவ விநாயகம் அரசியல்வாதி இல்லை. அவர் ஒரு பிரச்சாரகர். ஆர்எஸ்எஸ் நூற்றாண்டு கொண்டாட்டம் தொடர்பான பணிகள் நடந்து கொண்டிருக்கிறது.

கேசவ விநாயகத்தின் வேலை முடிந்து விட்டது. அவருக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இல்லை.



அவர், அவரது வேலையை செய்கிறார், நான் என் வேலையை செய்கிறேன். சிறப்பாக பணியாற்றியதற்காக அவருக்கு நன்றி தெரிவித்தோம். கேசவ விநாயகம் குறித்த வீண் சர்ச்சைகள், விவாதங்கள் முடிவுக்கு வரும் என நம்புகிறேன்" என்றார்.

## மத்திய அமைச்சர் அமித்ஷா பிப். 14-இல் காரைக்கால் வருகை

**புதுடில்லி, பிப்.11:**

மத்திய உள்துறை அமைச்சா அமித்ஷா பிப். 14-ஆம் தேதி காரைக்கால் வருகிறாா. அங்கு நடைபெறும் பாஜக பொதுக்கூட்டத்தில் பேசுகிறாா.

இதுகுறித்து புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தலைவா ஆா. செல்வம் செவ்வாய்க்கிழமை செய்தியாளா்களிடம் கூறியதாவது:

மத்திய உள்துறை அமைச்சா அமித் ஷா வரும் 14-ஆம் தேதி தனி விமானம் மூலம் தில்லியிலிருந்து திருச்சியில் வந்து, பின்னா அங்கிருந்து ஹெலிகாப்டா மூலம் காரைக்காலுக்கு வருகிறாா.



காரைக்கால் சந்தை திடலில் அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும் பாஜக பொதுக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறாா.

இதையடுத்து அங்கு தனியாா விடுதியில் பாஜக நிா்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொள்ளும் அமித்ஷா, அன்று மாலை 4.30 மணிக்கு ஹெலிகாப்டா் மூலம் திருச்சி செல்கிறாா் என்றாா் செல்வம்.

## கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை: தேதியை அறிவித்த தி.மு.க.

**சென்னை, பிப்.11:**

தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான களப்பணிகளில் கட்சித் தொண்டர்கள் சுற்றிச் சுழன்று பணியாற்றி வருகின்றனர். வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்த நடவடிக்கை நிறைவடைந்திருக்கிறது.

தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான குழு அமைக்கப்பட்டு, அக்குழுவினர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் அறிந்து வருகின்றனர். இதுவரையிலும் 75,000 கோரிக்கைகளும் பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன.

வரும் 17-ம் தேதி தமிழ்நாடு அரசின் இடைக்கால நிதி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர்ந்து அதன் மீதான விவாதம் நடைபெற இருக்கிறது.

கட்சித் தலைவரால் விரைவில் அமைக்கப்படவுள்ள தி.மு.க. தொகுதி பங்கீட்டுக் குழுவானது சட்டப்பேரவை அலுவல்கள் நிறைவடைந்தவுடன், பிப்ரவரி 22-ம் தேதி முதல் தோழமை கட்சிகளுடன் தொகுதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என தெரிவிக்கப்படுகிறது.

தொகுதி பங்கீட்டுக் குழு தொடர்பாக காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் இந்த அறிவிப்பை தி.மு.க. வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தவெக நிர்வாகிகள் மீது தாக்குதல்; விஜய் கண்டனம்!

**சென்னை, பிப்.11:**

தமிழக வெற்றிக் கழகத்தினர் மீது ரௌடிகள் தாக்குதல் நடத்தியதாக கட்சித் தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "சென்னை, பாரிமுனைப் பகுதியில் கள ஆய்வில் ஈடுபட்ட தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மீது, 100-க்கும் மேற்பட்ட ரௌடிகள் அராஜக தாக்குதல் நடத்தியிருப்பது கடும் கண்டனத்துக்கு உரியது.

இந்தத் தாக்குதலில், நான்கு மாதக் கர்ப்பிணி உள்பட நிர்வாகிகள் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர், அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் நான்கு பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

படுகாயம் அடைந்த கழகத் தோழர்கள் ஆறு பேரும் விரைவில் குணமடைய விழைகிறேன். தமிழக வெற்றிக் கழகத்திற்கு மக்களிடையே பெருகி வரும் செல்வாக்கைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள், மக்களிடையே



நன்மதிப்பைப் பெற்றுள்ள நம் கழகத் தோழர்கள் மீது இவ்வாறான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இது ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயலாகும். திமுகவின் தோல்வி பயத்தையே இது காட்டுகிறது. இந்த அராஜகத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு, வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக மக்கள் தக்க பாடம் புகட்டப் போவது நிச்சயம்" என்று குறிப்பிட்டுள்ளார்.






## அமைச்சர் துரைமுருகன் மருத்துவமனையில் அனுமதி!

**சென்னை, பிப்.11:**

திமுக அமைச்சரும், அக்கட்சியின் பொதுச்செயலாளருமான துரைமுருகன் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வயது மூப்பு காரணமாக அவருக்கு அவ்வப்போது ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளுக்காகத் தொடர் மருத்துவப் பரிசோதனைகள்



மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்காக அடிக்கடி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு வருகிறார்.

இந்நிலையில் இன்று வீட்டில் தவறி கீழே விழுந்ததில் காயம் அடைந்துள்ளார். இதனைத்தொடர்ந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



## திருக்குறள் குறள்-527

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள**



காக்கை (தனக்கு கிடைத்ததை) மறைத்து வைக்காமல் சுற்றத்தைக் கூவி அழைத்து உண்ணும். ஆக்கமும் அத்தகைய இயல்பு உடையவர்க்கே உண்டு.

## சிந்திக்க ஒரு நொடி



நம்பிக்கை வைத்தவன்
துரோகம் செய்து
விட்டான் என்று
புலம்பாதே....
நீ வைத்த நம்பிக்கை
தான் துரோகியை
உனக்கு அடையாளம்
காட்டி இருக்கு

**உஷா முத்துராமன்**

## மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி நன்றி தெரிவிக்கும் விழாவில் முதல்வர் ஸ்டாலின்



சென்னை மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெற்ற அகில இந்திய கிறிஸ்துவ உயர்கல்வி சங்கம் மற்றும் மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி இணைந்து நடத்திய நன்றி தெரிவிக்கும் விழாவில், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், மாணவியர்களுடன் முதல்வர் ஸ்டாலின் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

## பத்ரகாளியம்மன் கோவிலில் பக்தர்கள் நீண்ட கியூவில் நின்று தரிசனம்



திருநள்ளாறு அருகே அம்பகரத்தூரில் உள்ள பிரசித்திப்பெற்ற பத்ரகாளியம்மன் கோவிலில் நேற்று ஏராளமான பக்தர்கள் நீண்ட கியூவில் நின்று தரிசனம் செய்தனர்.

## செங்குளம் இசக்கியம்மன் ஆலயத்தில் கொடைவிழா



**நெல்லை, பிப் .11:**
திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி வட்டம் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம் கபாலிபாறை பநீ செங்குளம் இசக்கியம்மன் ஆலயத்தில் வருடாந்திர கோவில் கொடை விழா நேற்று (10-2-2026) செவ்வாய்க்கிழமை வெகு விமர்சையாக நடைபெற்றது.

முன்னதாக கபாலிபாறை பநீ கன்னிவிநாயகர் பநீ வடக்குவாச்செல்வி அம்மன் கோவிலில் இருந்து தொட்டில்பிள்ளை எடுப்பு மற்றும் பால்குட ஊர்வலம் மேளதாள வாத்தியங்களுடன் புறப்பட்டு செங்குளம் சென்றடைந்தது. அதன் பிறகு தொட்டில்பிள்ளை வாங்கும் நிகழ்வு.. சுதை சிற்ப ரூபம் மாற்றும் வைபவத்துக்குப்பின் சிறப்பு அபிஷேகம் அலங்காரத்துடன் பக்தர்களுக்கு இசக்கியம்மன் காட்சிதந்து அருள்பாலித்தார்.

அன்னதானத்துடன் மதியக்கொடை இனிதே நிறைவேறியது. மாலை பாயாசம் வைத்து பக்தர்கள் படையல்.. இரவு வில்லிசை... நள்ளிரவு உபதெய்வங்களுக்கான அசைவ படையலுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

**தகவல்:-அரும்பூர். க. குமாரகுரு, மயிலாடுதுறை**

## ஸ்ரீ கால பைரவருக்கு தேய்பிறை அஷ்டமி சிறப்பு வழிபாடு



**கடலூர், பிப்.11:**
கடலூர் மாவட்டம் மேல் புவனைகிரி ஈஸ்வரன் கோவில் தெருவில் அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீகாலபைரவருக்கு தேய்பிறை அஷ்டமி முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், சந்தனம், இளநீர், வெட்டிவேர், பஞ்சாமிர்தம், தேன், வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, சந்தனத்தினால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சீர்காழி தென்பாதி அங்காள பரமேஸ்வரி கோயிலில் மகா சிவராத்திரி விழா கொடியேற்றம்

**சீர்காழி, பிப்.11 :**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகரம் தென்பாதி தாலுக்கா அலுவலகம் எதிரில் நீதிமன்ற சாலையில் பரம்பரை தனியார் ஆலயமாகவும் புராதனமாயும் விளங்குகின்ற ராஜராஜேஸ்வரி என்கின்ற அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மையின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு விக்கேஸ்வரர் பூஜையுடன் 10 -ம் தேதி மதியம் கொடியேற்றம் நடைப்பெற்றது.

இந்த விழாவில் பக்தர்கள் அலகு காவடி எடுத்து ஊர்வலமாக வந்தனர். அபிஷேக ஆராதனை நடைப்பெற்று அன்னதானம் வழங்கப்பட்டது. 11-ம் தேதி பாவாடை ராயன் பூஜை , 12-ம் தேதி அகோர வீர புத்திர் மயான ருத்ரர் பூஜை , பரிவார தேவதைகள் விழா, 13-ம் தேதி அஷ்டலட்சுமி பூஜை , 14-ம் தேதி சிவசக்தி திருக்கல்யாணம் , திருவிளக்கு பூஜை நடை பெற உள்ளது.



தினமும் இரவில் அம்பாள் வீதியுலா நடைபெறும். வரும் 15-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மகா சிவராத்திரி விழாவையொட்டி காலையில் காவடி ஊர்வலம் , பகலில் அபிஷேக ஆராதனை, மாலையில் மாவிளக்கு ஏற்றுதல், இரவு அம்பாள் யாளி வாகனத்தில் அமர்ந்து பேச்சி ரூபம் எனும் ஆகம வேஷத்துடன் அக்னி கொப்பரை கரகம் முதலானதுடன் முக்கிய வீதி வழி சென்று சீர்காழி நகர மயானம் அடைந்து திருவிளையாடல் முடிந்து மறுநாள் அதிகாலை ஆலயம் திரும்புதல் நிகழ்ச்சி நடை பெற உள்ளது.

16-ம் தேதி திங்கள்கிழமை சந்தனகுடவிழா, மாலையில் அம்பாளின் துவார பாலகிகளான காளிகள் சகிதம் உப்பனாற்றங்கரை யிலிருந்து சந்தனம், பால், பன்னீர் குடங்களை பக்தர்கள் சுமந்து ஊர்வலமாக எடுத்து வந்து அம்பாளுக்கு அபிஷேகம் செய்து ஆசி பெறுதல், 17-ம் தேதி சர்ப்ப நாயகி அம்மன் பூஜை , 18-ம்தேதி கும்ப பூஜை, 19-ம் தேதி விடையாற்றி கஞ்சி வார்த்தல் , கொடி இறக்குதல், ஊஞ்சல் உற்சவம், அம்பாள் எதாஸ்தானம் அமருதல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

விழா ஏற்பாடுகளை ஆலய உரிமை மற்றும் பரம்பரை டிரஸ்டி ஸ்தானீகம் எம்.ஆர் ஜீவானந்தம் செய்து வருகிறார்.

## மில்லத் கல்லூரி பொன்விழா கொண்டாட்ட நிறைவு விழாவில் பொன்விழா மலர்




சென்னை மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரி பொன்விழா கொண்டாட்ட நிறைவு விழாவில் பொன்விழா மலரை அமைச்சர்கள் கோவி.செழியன், மா.சுப்பிரமணியன், மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வெளியிட்டனர். உடன், கல்லூரி தாளாளர் தாவூத் மியாகான், ராயல் கிங்ஸ் குழும தலைவர் சிராஜீதீன் உள்ளனர்.

## அரசு கல்லூரி மாணவியருக்கு பாராட்டு



**அறந்தாங்கி, பிப்.11:**
ஆவுடையார் கோயில் அருகே பெருநாவலூரில இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க புதுக்கோட்டை மாவட்டக்குழு நடத்திய கந்தர்வன் கதை சொல்லல் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்று வந்த,இளங்கலைத்தமிழ் முதலாம் ஆண்டு மாணவி யா.அப்ரின், இளங்கலை வரலாறு முதலாம் ஆண்டு மாணவி ரா.ஸ்ரீராஜமதி ஆகியோரை கல்லூரி முதல்வர் முனைவர் ம.துரை அவர்கள் பாராட்டினார். உடன் கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கா.காளிதாஸ், கண்காணிப்பாளர் பா மகாராஜன் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

## திருச்செந்தூர் வெயிலுகந்தம்மன் கோயில் மாசி திருவிழா கொடியேற்றம்



திருச்செந்தூர் வெயிலுகந்தம்மன் கோயில் மாசி திருவிழா கொடியேற்றம் நேற்று நடந்தது. கொடிமரத்துக்கு மகா தீபாராதனை காட்டப்பட்டது.

## 101 வயது மூத்த தம்பதியினருக்கு கோயில் தக்கார் அருள்முருகன் பட்டு வேஷ்டி, சேலை



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடந்த விழாவில் 101 வயது மூத்த தம்பதியினருக்கு கோயில் தக்கார் அருள்முருகன் பட்டு வேஷ்டி, சேலை, பட்டு வஸ்திரம், மஞ்சள் கயிறு, குங்குமம், விபூதி, சுவாமி படம், தேங்காய் பழம், வளையல், பூ மற்றும் பூ மாலை உள்ளிட்ட மங்களப் பொருட்கள் வழங்கினார்

## பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு புத்தக பரிசுகள்



**வந்தவாசி, பிப்.11:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (வடக்கு) மாணவர்களுக்கான கற்றல் திறன் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் பள்ளி நூலகத்திற்கு புத்தகங்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையம் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியை வி.சுகன்யா தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக, ஸ்ரீகிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பங்கேற்று, மாணவர்களுக்கு அடிப்படை திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் பற்றிய விழிப்புணர்வு தகவல்களை எளிய முறையில் விளக்கினார். மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப்பட்டது. பள்ளி நூலகத்திற்கு தேசத் தலைவர்கள் புத்தகங்களும் வழங்கப்பட்டது. இறுதியில் பள்ளி ஆசிரியை தவமணி நன்றி கூறினார். **பா. சீனிவாசன், வந்தவாசி.**

## சிவகங்கை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம்





சிவகங்கை மாவட்ட திமுக செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளரும் அமைச்சருமான பெரிய கருப்பன் பேசினார்.

## தண்டலை நடுநிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாள் மாத்திரைகள்

**புதுக்கோட்டை,பிப்.11:**
தண்டலை நடுநிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாள் மாத்திரைகள் வழங்கப்பட்டது.

நேற்று பிப்ரவரி பத்தாம் நாள் இந்தியா முழுவதும் ஒன்று முதல் 19 வயது உடைய குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட்டு தேசிய குடற்புழு நீக்க நாள் அனுசரிக்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது உத்தரவுப்படி புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை நடுநிலைப்பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாள் பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் சீனிவாசன் தலைமையில் அனுசரிக்கப்பட்டது.





பெருமருதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பகுதி நேர சுகாதார செவிலியர் திருமதி லதா மக்களை தேடி மருத்துவ உதவியாளர் பிரமிளா ஆகியோர் முன்னிலையில் சுமார் 65 மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் தேன்மொழி,மாலதி சரண்ராஜ் மற்றும் பிரதீபா பங்கேற்றனர்.

# அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கையும் நிறைவேற்றப்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, பிப்.11:

தமிழகத்தில் தொடர்ந்து அமையவுள்ள திமுக 2.0 ஆட்சியில் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியளித்தார்.

அரசு ஊழியர்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை ஜனவரியில் அரசு அறிவித்தது. இதற்காக தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் மாநாடு ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு சார்பில் சென்னையில் நேற்று நடைபெற்றது.



இதில் ஸ்டாலின் பேசியதாவது: கருணாநிதி ஆட்சிக் காலம்தான் அரசு ஊழியர்களின் பொற்காலம். அரசு ஊழியர் நடத்தை விதிமுறைகளில் ரகசிய குறிப்பேடு முறை நீக்கம், குடும்ப பாதுகாப்பு நிதி உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை திமுக அரசு வழங்கியுள்ளது. அரசு ஊழியர்கள் நலனில் அக்கறை கொண்ட ஒரே இயக்கம் திமுகதான். பள்ளிக் கல்வியில் இந்தியாவிலேயே 2-வது சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்க நீங்களே காரணம்.

காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களால் தமிழக அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கவும் நீங்களே காரணம்.

தமிழகத்துக்கான வரி பங்கீட்டை மத்திய அரசு குறைத்து வருகிறது.

ஜிஎஸ்டி நடைமுறையால் மாநில அரசு வரிவருவாய் குறைந்து கொண்டே செல்கிறது. இப்படிப்பட சூழலில் நலத்திட்டங்களையும் செயல்படுத்தியாக வேண்டியுள்ளது. திட்டமிட்டே நிதி நெருக்கடியை உருவாக்குகிறார்கள். நிதி நெருக்கடியையும், நிர்வாக நெருக்கடியையும் சமாளித்துதான் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி உள்ளோம். அதிமுக ஆட்சிக் காலத்தில் அரசு ஊழியர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன.

உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தால் அரசு கூடுதலாக ரூ. 13 ஆயிரம் கோடி நிதி அளிக்க வேண்டும்.

மேலும் ஆண்டு தோறும் ரூ.11 ஆயிரம் கோடிஅரசின் பங்களிப்பாக வழங்கவேண்டும். நாங்கள் சொன்னதைச்செய்வோம். தொடர்ந்து அமையவுள்ள திமுக 2.0 ஆட்சியில் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிச்சயம் நிறைவேற்றுவோம். இவ்வாறு முதல்வர் பேசினார்.விழாவில், அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ், ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர்கள் இரா.தாஸ், மு.பாஸ்கரன், கு.தியாகராஜன், ஒருங்கிணைப்பாளர் அ.வின்சென்ட் பால்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தமிழகத்தில் வருகிற 16-ந்தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்- வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, பிப்.11:

தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று முதல் 13-ந்தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும். வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, நீலகிரி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

13-ந்தேதி தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும். நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் மிதமான பனிமூட்டம் காணப்படும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிபேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# குமரியிலிருந்து காஷ்மீர் செல்லும் விவசாயிகள் யாத்திரை குழு புதுச்சேரி முதல்வருடன் சந்திப்பு

புதுச்சேரி, பிப்.11:

குமரியில் இருந்து காஷ்மீருக்கு செல்லும் விவசாயிகள் யாத்திரை குழுவினர் புதுச்சேரியில் முதல்வர் ரங்கசாமியை சந்தித்தனர். அப்போது, விவசாயிகள் கோரிக்கை தொடர்பாக பிரதமருக்கு கடிதம் எழுதுவதாக உறுதி அளித்ததாக தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பி.ஆர்.பாண்டியன் தெரிவித்தார்.



அரசியல் சார்பற்ற ஐக்கிய விவசாயிகள் சங்கம் சார்பில், எம்எஸ் சுவாமிநாதன் குழு பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும், விவசாயிகளின் வங்கிக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை விவசாயிகள் யாத்திரை கடந்த பிப்.7ம் தேதி கன்னியாகுமரியில் தொடங்கியது.

இந்த யாத்திரை குழுவினர் நேற்று புதுச்சேரியில் முதல்வர் ரங்கசாமியை சந்தித்தனர். தேசிய ஒருங்கிணைப்பாளர் ஜக்ஜித் சிங் தல்லேவால் தலைமையில் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பி.ஆர்.பாண்டியன், ஐக்கிய விவசாயிகள் சங்க தமிழகத் தலைவர் பி.அய்யாக்கண்ணு, பொன். ராஜேந்திரன் உள்ளிட்டோர் அவரிடம் இப்பயணம் தொடர்பாக விளக்கினர்.

அதைத்தொடர்ந்துதமிழக மாநிலத்தலைவர் பி.ஆர் பாண்டியன் கூறுகையில், "மறைந்த வேளாண்மை விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும். அனைத்து வேளாண் விளை பொருள்களுக்கும் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயச் சட்டத்தை கொண்டுவர வேண்டும். தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள வேளாண் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். வேளாண்மைக்கான இலவச மின்சாரத்தை ரத்து செய்யும் அடிப்படை நோக்கம் கொண்ட மத்திய அரசின் மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தை திரும்ப பெற வேண்டும் என யாத்திரை தொடங்கியுள்ளோம். காஷ்மீர் வரை செல்கிறோம்.

டெல்லியில் மார்ச் 19-ல் பேரணி நடத்தி அடுத்தக் கட்ட முடிவுகள் எடுப்போம். அமெரிக்காவுடன் தடையற்ற ஒப்பந்தம் குறித்து எவ்வித விவாதமும் நாடாளுமன்றத்தில் நடத்தாமல் திடீரென்று ஏற்றுள்ளதாக அமெரிக்க அதிபர் வெளியிட்டவுடன் பிரதமர் அறிவித்துள்ளார். வேளாண்மை கேள்விக்குறியாகவுள்ளது. வெளிநாட்டு வேளாண்மை பொருட்கள் இறக்குமதியால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். அழிந்து போவார்கள். முதலில் விவசாயிகளிடம் கருத்து கேட்பதுடன் நாடாளுமன்றத்தில் விவாதிப்பது அவசியம்.

இப்பயணம் தொடர்பாக புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியிடம் கோரிக்கைகளை தெரிவித்தோம். இதுபற்றி பிரதமருக்கு கடிதம் எழுதி வலியுறுத்துவேன் என்று உறுதி தந்தார். வரும் 21ம் தேதி புதுச்சேரி வரும் பிரதமரிடமும் நேரிலும் எடுத்து சொல்வேன் என்று குறிப்பிட்டுள்ளார். இதேபோல் அனைத்து மாநில முதல்வர்களையும் சந்திப்போம், அமெரிக்க ஒப்பந்தம் தொடர்பாக வர்த்தக அமைச்சர் ப்யூஸ் கோயல், நாடாளுமன்றம் நடக்கும்போது மரபுப்படி அறிக்கை தாக்கல் செய்து பேசியிருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் விவாதிக்க அச்சப்படுவது ஏன் ?ஒப்பந்தத்தை இறுதி செய்யும் முன் நாடாளுமன்றம் நடக்கும் போது வெளியில் அறிவித்தது தவறு. அது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. யூஸ் கோயல் கருத்து கார்ப்பரேட்டுகளுக்கு ஆதரவான கருத்து. பிரதமர், வேளாண் அமைச்சர் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும்" என்று பி.ஆர். பாண்டியன் கூறினார்.

# பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார்

## அமைச்சர் ரகுபதி பேட்டி

சென்னை, பிப்.11:

"பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார், ஆனால் ஒடிசாவுக்கு சென்றால் தமிழர்களை திருடர்கள் என்பார்" என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "பிரதமர் மோடி மலேசியாவுக்கு சென்றால் தமிழை புகழ்ந்து பேசுவார். ஏனென்றால் தமிழர்கள் அதிகளவில் மலேசியாவில் இருக்கிறார்கள். ஆனால் பிரதமர் ஒடிசாவுக்கு சென்றால் தமிழர்களை திருடர்கள் என்பார். பிஹாருக்கு சென்றாலும் தமிழனை திருடன் என்பார். ஆனால் அவர் வெளிநாட்டுக்கு சென்றால் தமிழர்கள் இணைப்பு பாலமாக இருப்பவர்கள் என்பார்.



தமிழகத்தில் கொண்டாடுவதை போல மலேசியாவிலும் தைப்பூசம் மிகச் சிறப்பாக கொண்டப்படுகிறது. அங்கே இருப்பவர்கள் மதம், இனம் பாராமல் அனைவரும் தமிழ் கடவுளாக முருகனை ஏற்றுக்கொண்டு விழாவை நடத்துகிறார்கள். இதையெல்லாம் பார்த்து தான் பிரதமர் மோடி இவ்வாறு பேசுகிறார்.

தமிழ் கடவுள் முருகனை வணங்குகின்றவர்களுக்கு திராவிட மாடல் குறித்து புரியும். தங்களுக்கு பாதுகாப்பு திராவிட மாடல் ஆட்சி தான் என உணர்ந்தவர்கள்தான் தமிழக முருக பக்தர்கள்.

அமெரிக்கா- இந்தியா ஒப்பந்தத்தால் அமெரிக்காவுக்கு தான் நலனே தவிர, இந்தியாவுக்கு கிடையாது. ரஷ்யாவிடமிருந்து இந்தியா எண்ணெய் வாங்கினால் 50 டாலர் என்றால் அமெரிக்காவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கினால் 55 டாலர். இதனால் அம்பானிக்கும் அதானிக்கும் தான் ஆதாயம். எந்த விஷயத்திலும் பிரதமர் மோடியின் இறுதி முடிவை பார்த்தால், அதானி அம்பானிக்கு மிகுந்த பொருளாதார வளத்தை பெருக்கி தரக்கூடியதாகவே இருக்கும்.

தவெகவுக்கு 42 சதவீதம் வாக்கு வங்கி இருப்பதாக செங்கோட்டையன் கூறுகிறார். செங்கோட்டையனுக்கு அரசியல் குறித்த புள்ளி விவரங்கள் தெரியாது. அவருக்கு மக்களின் மனதை அறியத் தெரியாது.

எடப்பாடி பழனிசாமி எப்பொழுதுமே கனவு கண்டு கொண்டிருப்பவர் என்பது நாடறிந்த உண்மை. அன்புமணி ராமதாஸ் மருத்துவத்தை பற்றி ஏதாவது கூறியிருந்தால் பரவாயில்லை, அவர் பொருளாதார நிபுணரும் அல்ல; மேதையும் அல்ல. பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்பான இடத்தை கொடுத்திருக்கிறது தமிழக அரசு. தமிழகம் இந்திய பொருளாதாரத்தை உயர்த்தியிருக்கிறது."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆட்டோ, கால் டாக்ஸி ஓட்டுநர்கள் சங்க கூட்டமைப்பினர் வேலைநிறுத்தம்

## சென்னையில் இன்று ஆட்டோக்கள் ஓடுமா?

சென்னை, பிப்.10-

தமிழ்நாடு ஆட்டோ, கால் டாக்ஸி ஓட்டுநர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதால் சென்னையில் இன்று (பிப்.10-ம் தேதி) ஆட்டோக்கள் ஓடாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் பொதுப் போக்குவரத்து சேவைகளில் ஆட்டோ, கால் டாக்ஸி உள்ளிட்ட வாடகை வாகனங்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது. இந்நிலையில் பல ஆண்டுகளாக ஆட்டோ மீட்டர் கட்டணம் உயர்த்தப்படாமல் உள்ளதாகவும், பலமுறை கோரிக்கை வைத்தும் தற்போது வரை எந்த மாற்றமும் இல்லை எனவும் ஆட்டோ ஓட்டுநர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்போது ஓலா, ஊபர் போன்ற தனியார் நிறுவனங்களாலும் ஓட்டுநர்கள் கடும் சிரமத்தை எதிர்கொள்கின் றனர். இந்நிலையில் ஓலா, ஊபர், ரேப்பிடோ, நம்ம யாத்திரி உள்ளிட்ட நிறுவனங்களை முறைப்படுத்த அக்ரிகேட்டர் சட்டம் அமல்படுத்த வேண்டும்.

கடந்த 2 ஆண்டுகளாக நடத்தப்படாமல் உள்ள தொழிற்சங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள் இடையேயான முத்தரப்பு பேச்சு வார்த்தையை நடத்த வேண்டும்.

தமிழகத்தில் பல பள்ளிகளில் சொந்த பயன்பாட்டு வாகனங்களை பயன்படுத்தி பள்ளிக் குழந்தைகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இது குழந்தைகளின் உயிருக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

மேலும், அரசுக்கும் கடுமையான வரி வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆட்டோ கால் டாக்ஸி ஓட்டுநர்கள் கோவை, நெல்லை, மதுரை, திருச்சியில் உள்ள போக்குவரத்து இணை ஆணையர் அலுவலகங்கள் முன் போராட்டம் நடத்தியுள்ளனர்.

மேலும் இன்று (பிப்.10-ம் தேதி) தமிழகம் முழுவதும் ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டமும், சென்னை கிண்டியில் உள்ள போக்குவரத்து ஆணையரகத்தில் காத்திருப்புப் போராட்டமும் நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஆட்டோ, கால் டாக்ஸி ஓட்டுநர்கள் பங்கேற்பதால்சென்னையில் இன்று ஆட்டோக்கள் ஓடுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# தஞ்சையில் நெற்பயிர்கள் காய்கிறது என எடப்பாடி பழனிசாமி கூறியது வடிகட்டிய பொய்- அமைச்சர் கோவி.செழியன்

தஞ்சாவூர், பிப்.11:

தஞ்சையில் நேற்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

நகர்ப்புற வளர்ச்சித்துறை சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி, தமிழக அரசுக்கு பெருமை சேர்க்கிற பணிகளைச் செய்து கொண்டிருந்தாலும், இன்றைய தினம் முதலமைச்சருடைய கருணை உள்ள திட்டமாக தூய்மைப்பணியாளர்களுக்கு காலை உணவுத் திட்டத்தை திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சர் தொடங்கி இருக்கிறார். தொடர்ந்து தமிழகம் முழுவதும் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த நலத்திட்டம் மூலம் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தூய்மைப் பணியாளர்கள், தூய்மை காவலர்கள், டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்குப் பணியாற்றுகிற உறுப்பினர்கள், ஓட்டுநர்கள் பயன்பெறுவர்.

இந்த மகிழ்வான திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி தூய்மை பணியாளர்கள், காவலர்களுக்கு 'வயிற்றில் பால் வார்த்ததை போல' என்று சொல்லுவார்கள். பால் வார்க்கவில்லை, உணவையும் வழங்கி அந்த மக்களுடைய உழைப்பின் திறனை ஊக்குவிக்கிற முயற்சி எடுத்திருக்கிற முதலமைச்சருக்கு அனைத்து தரப்பு மக்கள் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியை, பாராட்டை, வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



நேற்று முன்தினம் எடப்பாடி பழனிசாமி தஞ்சாவூரில் நெற்பயிர்கள் காய்கிறது என்று கூறியது வடிகட்டிய பொய். வடிகட்டிய பொய் என்று சொல்லுவதை விட வடிகட்டியதிலும் வடிகட்டிய பொய் என்று கூறினால் பொருத்தமாக இருக்கும்.

நெல் உற்பத்தியில் இதுவரை செய்யாத சாதனையைச் செய்து காட்டியது தி.மு.க அரசு.

வேண்டுமென்றால் அ.தி.மு.க ஆட்சியில் நெல் கொள்முதல் எவ்வளவு? தி.மு.க அரசு அமைந்ததற்கு பிறகு நெல் கொள்முதல் எவ்வளவு? அ.தி.மு.க ஆட்சியில் விளைவிக்கப்பட்ட நெல் அளவு எவ்வளவு? தி.மு.க அரசு அமைந்த பிறகு நெல் பயிரிடப்பட்ட அளவு எவ்வளவு? என்பதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் அபரிமித வளர்ச்சி அடைந்து தஞ்சை மாவட்டம் நெல் உற்பத்தியில் சாதனை படைத்திருக்கிறது என்பது தெரியும்.

இந்தத் தருணத்தில் எடப்பாடி பழனிசாமி சொல்லியிருப்பது வடிகட்டிய பொய். இதனை விவசாயிகளும், பொதுமக்களும் நம்ப மாட்டார்கள். பொய்யையே சொல்லிப் பழக்கப்பட்ட பழனிசாமி வேறு விதத்தில் பொய் சொல்லலாம். ஆனால் விவசாயிகளை ஏமாற்ற முடியாது என்றார்.


# தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,840 உயர்வு

சென்னை, பிப்.11:

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.1,840 உயர்ந்துள்ளது. இதேபோல் வெள்ளி விலையும் கிலோவுக்கு ரூ.15,000 அதிகரித்துள்ளது.

உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அதனால் சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

இந்தச் சூழலில், கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை உயர்ந்தும் குறைந்தும் வருகிறது. உலக நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ரீதியான உறவு இதற்கு காரணம் என துறை சார்ந்த வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்தியா மற்றும் அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.



சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று காலை வர்த்தகம் தொடங்கியதும் கிராமுக்கு ரூ.230 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.14,650-க்கு விற்பனை ஆகிறது. பவுனுக்கு ரூ.1,840 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,17,200-க்கு விற்பனையானது.

இதேபோல 24 காரட் சுத்த தங்கம் பவுனுக்கு ரூ.2,008 என உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,27,856-க்கு விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.1,360 என உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,00,160-க்கு விற்பனையானது.

வெள்ளி விலையும் நேற்று உயர்ந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.15 உயர்ந்து, ரூ.300-க்கும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.15,000 உயர்ந்து, ரூ.3,00,000-க்கும் சந்தையில் விற்பனை ஆகிறது. பிளாட்டினம் விலை கிராமுக்கு ரூ.20 என விலை குறைந்து ஒரு கிராம் ரூ.6,091-க்கு விற்பனையானது.

சர்வதேச அளவில் தங்கம் மீதான முதலீடு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால், ஆபரணத் தங்கம் விலையும் கடுமையாக உயர்ந்து வருகிறது.

## கர்நாடக முதல்வர் விவகாரம்! நானும் சித்தராமையாவும் பேசியது எங்களுக்குத் தெரியும்!

### டி.கே. சிவக்குமார் பேச்சு!



கர்நாடக தலைமை விவகாரம் குறித்து, "நானும் முதல்வர் சித்தராமையாவும் என்ன பேசினோம் என்பது எங்களுக்குத் தெரியும்" என துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் கூறியுள்ளார்.

கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி அமைந்து இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் துணை முதல்வரான டி.கே. சிவக்குமார் முதல்வராகப் பதவியேற்பார் என அரசியல் வட்டாரங்களில் பேச்சுகள் உருவாகின.

இதையடுத்து, முதல்வர் சித்தராமையா மற்றும் டி.கே. சிவக்குமார் ஆகியோரின் ஆதரவாளர்கள் தொடர்ந்து கருத்து மோதல்களில் ஈடுபட்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, இருவரும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனா கார்கே உள்ளிட்ட மூத்த தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

மேலும், முதல்வராக சித்தராமையா தொடர்வார் எனக் கூறப்பட்டது. இருப்பினும், இந்த விவகாரம் தொடர்ந்து பேசுபொருளாகி வருகின்றது.

இந்த நிலையில், பெங்களூரில் இன்று (பிப். 10) தில்லிக்குச் செல்லும் முன்பு செய்தியாளர்களுடன் பேசிய துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் கூறியதாவது:

"மற்றவர்களுக்கு குழப்பம் இருக்கலாம். ஆனால், எனக்கும் முதல்வர் சித்தராமையாவுக்கும் இடையில் எந்தவொரு குழப்பமும் இல்லை. நாங்கள் என்ன பேசினோம் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் தனிமையில் பேசவில்லை. கட்சியின் தலைமையுடன் பேசினோம். அந்தப் புரிதலுக்கு ஏற்ப நடந்து கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தேர்தல்கள் குறித்து காங்கிரஸ் தலைமையுடன் முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்வதற்காக துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் தில்லி செல்வதாகவும், இதுபற்றி, முதல்வர் சித்தராமையாவிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## ஆந்திராவில் பூட்டிய வீடுகளில் திருடி சொகுசு வாழ்க்கை வாழ்ந்த ஐடி ஊழியர் கைது

**விசாகப்பட்டினம், பிப்.11:** சொகுசு வாழ்க்கை வாழ பூட்டிய வீடுகளில் திருடிய ஐடி ஊழியரை ஆந்திர போலீஸார் கைது செய்துள்ளனர்.

ஆந்திர மாநிலம், காக்கி நாடா பகுதியை சேர்ந்தவர் மகேஷ் ரெட்டி என்கிற சன்னி (27). விசாகப்பட்டினத்தில் ஐ.டி மேற்படிப்பை முடித்த மகேஷ் ரெட்டிக்கு ஹைதராபாத்தில் ஒரு பிரபல ஐடி நிறுவனத்தில் வேலை கிடைத்தது. கை நிறைய சம்பளம். ஆனாலும் அது அவரின் ஆசைகளை நிறைவேற்ற உதவவில்லை. மகேஷ் ரெட்டிக்கு சிறு வயதிலிருந்தே திருடும் பழக்கம் இருந்துள்ளது.

இதனால் அவர் தனது 15 வயதில் திருடி மாட்டிக் கொண்டார். அதன் பிறகு, அவர் சிறுவர் சீர்திருத்த பள்ளியில் படித்தார். தற்போது ஐடி துறையில் பட்ட மேற்படிப்பு படித்த பிறகு, தனது 'கை'த்தொழிலில் மீண்டும் கவனம் செலுத்த ஆரம்பித்தார். இதற்காக ஒரு பைக் வாங்கினார்.

அதில் நம்பர் பிளேட் போடாமல், முகக்கவசம், கையுறை அணிந்து இரவு நேரங்களில் பூட்டிய வீடுகளில் பூட்டை உடைத்து, பீரோவில் உள்ளதை அள்ளிச் செல்வதை வழக்கமாக்கி கொண்டார். இதற்காக கட்டிங் பிளேயர், ஸ்க்ரூ டிரைவர், ட்ரில்லிங் இயந்திரம் போன்றவற்றையும் வாங்கி வைத்து உள்ளார்.



பல முறை ராமசந்திராபுரம், இந்திர பாளையம், ராஜமுந்திரி சிறைகளுக்கு சென்றுள்ளார். இது வரை அவர் 60 வீடுகளில் திருடி உள்ளார். 26 வழக்குகள் இவர் மீது நிலுவையில் உள்ளன. சமீபத்தில் 14 மாதங்கள் வரை இவர் சிறை தண்டனை அனுபவித்து உள்ளார். ஆயினும் இவர் திருடுவதை கைவிடவில்லை. ஏனெனில், இவருக்கு ஆடம்பரமாக வாழ்வது மிகவும் பிடிக்குமாம்.

அதாவது, பிஎம்டபிள்யூ சொகுசு கார், அடிக்கடி வெளிநாட்டு சுற்றுலா, கழுத்திலும், கையிலும் தங்க செயின்கள், பிரேஸ்லெட். 4 விரல்களில் தங்க மோதிரம் அணிந்திருப்பார். இந்த வாழ்க்கை மிகவும் பிடித்து போனதால், போலீஸார் கைது செய்தாலும், மீண்டும் திருட்டு தொழிலையே செய்து, சொகுசு வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார் மகேஷ் ரெட்டி.

இந்நிலையில் கடந்த 8-ம் தேதி விசாகப்பட்டினத்தில் மகேஷ் ரெட்டியை போலீஸார் கைது செய்தனர். அப்போது அவரிடமிருந்த 699 கிராம் தங்க நகைகள், 3.8 கிலோ வெள்ளி பொருட்கள் மற்றும் பிஎம்டபிள்யூ சொகுசு கார் போன்றவற்றை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

இது தவிர ரூ.15.63 லட்சம் மதிப்புள்ள பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மகேஷ் ரெட்டி விசாகப்பட்டினம் மட்டுமின்றி, ஹைதராபாத், காக்கி நாடா ஆகிய பகுதிகளிலும் தனது கை வரிசையை காட்டி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



போரில்லா உலகம் காண்போம் பேரன்பு

வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும் போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!

தொடர்புக்கு: 9791667528

## டிஜிட்டல் அரெஸ்ட் மோசடியால் பாதித்தோருக்கு மத்திய அரசு இழப்பீடு வழங்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

**புதுடெல்லி, பிப்.11:** டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்தது. தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜாய்மால்ய பாக்சி, அன்ஜாரியா அமர்வு முன்பு இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மத்திய அரசு சார்பில் அட்டர்னி ஜெனரல் வெங்கடரமணி ஆஜரானார். அவர் கூறும்போது, "டிஜிட்டல் அரெஸ்ட் மோசடிகளை தடுக்க ரிசர்வ் வங்கி வரைவு கொள்கையை தயாரித்து உள்ளது. இதுதொடர்பாக தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது" என்றார்.

இந்த வழக்கில் உதவ உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மூத்த வழக்கறிஞர் நப்பினை கூறும்போது, "சந்தேகத்துக்குரிய வங்கி பணப் பரிமாற்றங்களை கண்காணிக்க செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும்" என்று ஆலோசனை வழங்கினார்.



இறுதியில் தலைமை நீதிபதி அமர்வு முக்கிய உத்தரவை பிறப்பித்தது. அதில் கூறியிருப்பதாவது: கடந்த 2021 ஏப்ரல் முதல் 2025 நவம்பர் வரை நாடு முழுவதும் டிஜிட்டல் அரெஸ்ட் மோசடியால் அப்பாவி பொதுமக்கள் ரூ.54,000 கோடியை இழந்துள்ளனர். இது மிகப்பெரிய கொள்ளை ஆகும். இந்த தொகை பல்வேறு மாநிலங்களின் பட்ஜெட்டுக்கு இணையாக உள்ளது.

பெரும்பாலான டிஜிட்டல் அரெஸ்ட் மோசடிகளுக்கு வங்கி அதிகாரிகளின் அலட்சிய போக்கும் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. பொது மக்களின் பணத்துக்கு வங்கிகளே பாதுகாவலர்கள். வங்கிகளை நம்பியே பொதுமக்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்கின்றனர்.

பொதுவாக ஓய்வு பெற்ற ஊழியர்கள் ஒரு மாதத்தில் சுமார் ரூ.20,000 மட்டுமே பணத்தை எடுப்பது வழக்கமாக உள்ளது. ஆனால் அவரது வங்கிக் கணக்கில் ஒரே நேரத்தில் ரூ.25 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை பணம் எடுக்கப்படுவதை வங்கி நிர்வாகங்கள் கவனிக்க வேண்டியது அவசியம். இதுபோன்ற சந்தேகத்துக்குரிய பணப் பரிமாற்றங்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு வங்கி அதிகாரிகள் எச்சரிக்கை தகவல்களை அனுப்ப வேண்டும்.

டிஜிட்டல் அரெஸ்ட் மோசடியால் பாதிக்கப்படுவோருக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில், ரிசர்வ் வங்கி, தொலைத் தொடர்பு அமைச்சகத்துடன் ஆலோசிக்க வேண்டும். இதன் அடிப்படையில் அடுத்த 4 வாரங்களுக்குள் வழிகாட்டு நெறிகளை வரையறுக்க வேண்டும். இவ்வாறு தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது.

இந்த வழக்கு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, டிஜிட்டல் அரெஸ்ட் மோசடி தொடர்பான அனைத்து வழக்குகளையும் சிபிஐ-க்கு மாற்ற உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கு ஒப்புதல் வழங்குமாறு டெல்லி, குஜராத் அரசுகளுக்கும் உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது.

## சபரிமலை தங்கம் திருட்டு விவகாரம்: ஜெயராம் 17-ந்தேதி விசாரணைக்கு ஆஜராக அமலாக்கத்துறை உத்தரவு



**திருவனந்தபுரம், பிப்.11:** சபரிமலை ஐயப்பன் கோவிலில் உள்ள துவார பாலகர் சிலையில் பூசப்பட்ட தங்க முலாம்களை சுத்தப்படுத்தி மீண்டும் பொருத்த முடிவு செய்யப்பட்டது.

இதற்காக அந்த சிலைகள் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டு சுத்தப்படுத்தும் பணி முடிந்து மீண்டும் சபரிமலை கோவிலுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் பணியின்போது துவாரபாலகர் சிலையில் உள்ள தங்கம் திருடப்பட்டதாக புகார் எழுந்தது. கேரளாவில் பரபரப்பை ஏற்படுத்திய இந்த புகார் தொடர்பாக விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வு குழுவை (எஸ்.ஐ.டி.) கேரள ஐகோர்ட்டு நியமித்தது.

இந்தக் குழுவினர் தீவிர விசாரணை நடத்தி துவார பாலகர் சிலைகளை முலாம் பூச எடுத்துச் சென்ற உன்னி கிருஷ்ணன் போற்றியை கைது செய்தனர். அவர் கொடுத்த தகவலின் பேரில் கர்நாடகாவை சேர்ந்த நகை வியாபாரி கோவர்த்தன் மற்றும் சபரிமலை கோவில் தேவசம்போர்டு முன்னாள் நிர்வாகிகள் உள்பட பலரை கைது செய்தது. இதற்கிடையில் தங்கமுலாம் பூசப்பட்ட பிறகு துவாரபாலகர் சிலைகள், சென்னையில் உள்ள நடிகர் ஜெயராம் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்ட தகவல் சிறப்பு புலனாய்வு குழுவுக்கு கிடைத்தது. இது தொடர்பான படங்களும் வெளிவந்தன. இதனை தொடர்ந்து நடிகர் ஜெயராமுக்கு தங்கம் கடத்தல் சம்பவத்தில் தொடர்பு இருக்கலாமா? என்ற சந்தேகம் எழுந்தது.

இது தொடர்பாக விளக்கம் அளித்த நடிகர் ஜெயராம், உனனிகிருஷ்ணன் போற்றியை எனக்கு தெரியும். கோவில் தங்க நகைகளை வீட்டிற்கு கொண்டு வந்தது உண்மை தான். அதனை வீட்டில் வைத்து பூஜை செய்தால், செழிப்பை தரும் என்று உன்னி கிருஷ்ணன் போற்றி கூறியதால், தனது வீட்டில் வைத்து பூஜை செய்ததாகவும், கோவிலில் நடைபெற்ற பூஜையிலும் தான் பங்கேற்றதாகவும் தெரிவித்தார். மேலும் உன்னியிடம் இருந்து நான் ஒரு ரூபாய் கூட வாங்கவில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வு குழு நோட்டீசு அனுப்பியிருந்தது. தொடர்ந்து 2 வாரங்களுக்கு முன்பு அந்த குழுவினர், சென்னையில் உள்ள நடிகர் ஜெயராம் வீட்டுக்குச் சென்று அவரிடம் வாக்குமூலம் பெற்றது. அப்போது ஜெயராம், ஏற்கனவே தான் தெரிவித்திருந்ததை அவர்களிடம் தெரிவித்தாராம்.

இந்த நிலையில் தங்கம் திருட்டு விவகாரத்தில் கள்ள பணம் மோசடி நடந்திருக்கலாம் என்ற கோணத்தில் அமலாக்கத்துறையினர் விசாரணையில் இறங்கி உள்ளனர். சென்னையில் துவார பாலகர் சிலையை தங்க முலாம் பூச கொண்டு செல்லப்பட்ட நிறுவனம் மற்றும் கைது செய்யப்பட்ட திருவிதாங்கூர் தேவசம்போர்டு முன்னாள் நிர்வாகிகள் வீடுகள் போன்ற பல இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் ஒரே நேரத்தில் அதிரடி சோதனையிலும் ஈடுபட்டனர். இதனால் தங்கம் திருட்டு வழக்கு விறுவிறுப்பான கட்டத்தை எட்டியது.

இந்த நிலையில் நடிகர் ஜெயராமிடம் விசாரணை நடத்த அமலாக்கத்துறை முடிவு செய்துள்ளது. இதை தொடர்ந்து அவருக்கு நோட்டீசு அனுப்பி உள்ளது. அடுத்த செவ்வாய்க்கிழமை (17-ந் தேதி) அமலாக்கத்துறை முன்பு ஆஜராகும்படி அதில் கூறப்பட்டுள்ளது. தங்கம் திருட்டு வழக்கில் சிறப்பு புலனாய்வு துறையை தொடர்ந்து அமலாக்கத்துறையும் நடிகர் ஜெயராமுக்கு நோட்டீசு அனுப்பி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சூழலில் தங்கம் திருட்டு வழக்கில் தனது விசாரணை அறிக்கையை கேரள ஐகோர்ட்டில் சிறப்பு புலனாய்வு குழு தாக்கல் செய்துள்ளது. அதில், மேலும் 3 பேருக்கு வழக்கில் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் சபரிமலையில் தங்கம் திருடப்பட்டது என்பதை விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் உறுதி செய்த போதும், எவ்வளவு தங்கம் திருடப்பட்டது? இப்போது இருப்பது ஒரிஜினல் தங்கம் தானா? என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. இதன் அடிப்படையில் சபரிமலை கோவிலில் மீண்டும் ஆய்வு நடத்த சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு கேரள ஐகோர்ட்டு அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில் சபரிமலையில் கடந்த 2017-ம் ஆண்டு புதிய கொடிமரம் அமைக்கப்பட்டதிலும் முறைகேடு நடந்திருப்பதாக திருவிதாங்கூர் தேவசம்போர்டு விஜிலன்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பழைய கொடிமரத்திற்கு சேதம் ஏற்பட்டதாக கூறி புதிய கொடிமரம் அமைக்க முடிவு செய்யபட்டதாக கூறப்படுகிறது. ஆனால் பழைய கொடி மரத்திற்கு எந்த சேதமும் ஏற்படவில்லை என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை கேரள ஐகோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதை பரிசீலித்த ஐகோர்ட்டு, புதிய கொடிமரம் அமைக்கப்பட்டது குறித்து விரிவான விசாரணை நடத்த விஜிலன்சு துறைக்கு உத்தரவிட்டுள்ளது. இதில் முறைகேடு நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அதுபற்றியும் சிறப்பு புலனாய்வுக் குழு கூடுதல் விசாரணை நடத்த வேண்டும் என்று ஐகோர்ட்டு தெரிவித்துள்ளது.

## கேரளாவின் முதல் பார்வை மாற்றுத்திறனாளி நீதிபதி – 24 வயதான தன்யா நாதன் சாதனை!

கேரளாவின் முதல் பார்வை மாற்றுதிறனாளி சிவில் நீதிபதி என்ற பெருமையை 24 வயதான தன்யா நாதன் பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றம் மாற்றுத்திறனாளிகள் நீதித்துறை சேவையில் சேர அனுமதி அளித்தது. இதையடுத்து கண்ணூர் மாவட்டத்தை சேர்ந்த பார்வைக் குறைபாடுள்ள சட்டப் பட்டதாரி தன்யா நாதன், இந்த தீர்ப்பால் ஈர்க்கப்பட்டு, நீதித்துறை சேவைத் தேர்வுக்குத் தயாராக முடிவு செய்தார்.

தற்போது, அவர் மாற்றுத்திறனாளிகள் பிரிவின் கீழ் சிவில் நீதிபதி (ஜூனியர் பிரிவு) தேர்வில் முதலிடம் பிடித்து அசத்தியுள்ளார். இதன்மூலம் கேரளாவின் முதல் பார்வை குறைபாடுள்ள நீதிபதியாக மாற உள்ளார்.



ப்ரெய்லி முறையில் சட்டப் படிப்பை படித்துள்ள இவருக்கு விரைவில் பணி நியமனம் வழங்கப்பட உள்ளது.

## தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகளுடன் டெல்லியில் காங்கிரஸ் தலைமை ஆலோசனை



**புதுடெல்லி, பிப்.11:** தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகிகளுடன் டெல்லியில் காங்கிரஸ் தலைமை ஆலோசனை நடைபெற்று வருகிறது.

ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, கே.சி.வேணுகோபால் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை, புதிதாக தேர்வுசெய்யப்பட்ட 74 மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

100 நாள் வேலை திட்டத்தில் காந்தி பெயர் மாற்றம், அரசியல் மற்றும் கட்சி பிரச்சனைகள் குறித்து கூட்டத்தில் விவாதம் நடைபெற்று வருகிறது.

## டெல்லி விமான நிலையத்தில் சச்சின் டெண்டுல்கரை சந்தித்த முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு

ஆந்திர மாநில பல்வேறு பிரச்சனைகள் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு நேற்று டெல்லி புறப்பட்டு சென்றார்.

டெல்லி விமான நிலையத்திற்கு சென்றபோது பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரை எதேர்ச்சியாக சந்தித்தார். சந்திரபாபு நாயுடு சிறிது நேரம் சச்சின் டெண்டுல்கருடன் உரையாடினார்.

ஜல் சக்தி மந்திரி சி.ஆர். பாட்டில், உள்துறை மந்திரி அமித்ஷா, நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், வேளாண் துறை மந்திரி சிவராஜ் சிங் மற்றும் ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் ஆகியோரை சந்தித்து பேசுகிறார்.

அப்போது அமராவதி கட்டுமான பணிக்கு அதிக நிதி, கலப்பட நெய் வழக்கு மற்றும் 16-வது நிதி அறிக்கை பரிந்துரைகளால் மாநிலத்திற்கு ஏற்படும் பொருளாதார பாதிப்பு குறித்து ஆலோசிக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

## விவாதத்தை ஏற்படுத்திய டிரை கிளீனிங் தம்பதியின் வருமானம்

**புதுடெல்லி, பிப்.11:** சிறிய தொழில் செய்தாலும், திறம்பட செய்தால் நல்ல வருமானம் ஈட்டலாம் என்பதை உறுதிபடுத்துவது போன்ற வீடியோக்கள் அவ்வப்போது சமூக வலைதளங்களில் வைரலாவது உண்டு.

அந்த வகையில் நளினி உனாகர் என்ற பெண் தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ள ஒரு தகவல் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது.

நளினி உனாகரின் வீட்டுக்கு அருகே ஒரு டிரை கிளீனிங் கடைக்காரரிடம் அவரது வருமானம் குறித்து பேசும் காட்சிகளுடன் வீடியோ தொடங்குகிறது.

கடைக்காரரும், அவரது மனைவியும் மாதம் ரூ.2 லட்சத்திற்கும் அதிகமாக சம்பாதிப்பதாக கூறுகிறார்கள்.

தினமும் சுமார் 350 துணிகளை அயர்ன் செய்வதன் மூலமும், விலை உயர்ந்த புடவைகள் மற்றும் சூட்களை டிரைகிளீனிங் செய்வதன் மூலமும் ஒரு நாளைக்கு ரூ.10,500 வரை வருமானம் கிடைப்பதாக கூறுகிறார்கள்.

சொந்தக்கடை என்பதால் வாடகை கிடையாது, மின்சாரக் கட்டணம் மற்றும் ஆட்கள் கூலி போக மாதம் ரூ.2 லட்சத்து 37 ஆயிரம் வரை லாபமாக கிடைப்பதாக கூறுகிறார்கள்.

வீடியோவை பார்த்த நெட்டிசன்கள் பலரும், இந்த வருமானம் ஐ.டி. நிறுவன ஊழியர்களின் சம்பளத்தை விட அதிகமாக இருக்கிறது என கிண்டலாக பதிவிட்டனர்.

அதேநேரம் சிலர், இதுபோன்று வருமானம் ஈட்டுபவர்கள் முறையாக வருமான வரி செலுத்துவதில்லை என பதிவிட்டுள்ளனர்.

இவ்வாறு பயனர்கள் பலரும் தங்களது கருத்துக்களை பதிவிட்ட நிலையில் நளினி உனாகரின் இந்த வீடியோ இணையத்தில் விவாத பொருளாக மாறி உள்ளது.

# பாடம்

அன்று பிரதோஷம். கடைத்தெருவில் இருந்த சிவன் கோயிலில் பக்தர்களின் கூட்டம் அதிகமாகவே இருந்தது.

மாலை மணி ஐந்து. பிரபல தொழிலதிபர் தீனதயாளன் காரிலிருந்து கோயில் வாசலில் இறங்கினார்.தொழிலதிபர் மட்டுமல்ல அவர், சிறந்த ஆன்மீகவாதியும் கூட. தினமும் காலை மாலை இரு வேளையும் தவறாமல் கோயிலுக்குச் சென்று விடுவார் .நெற்றியில் திருநீறு எப்போதுமே இடம் பிடித்திருக்கும். சரியான சிவப்பழம்.கோயில் விசேஷங்களுக்கான நன்கொடை லிஸ்ட்டில் பல வருடங்களாகவே அவர் பெயர்தான் முதலில் இருக்கும்.

கை கூப்பிவாறு கோயிலில் நுழைந்தார் தீனதயாளன்.. எதிர்ப்பட்ட அறிமுகமான அனைவரும் அவருக்கு வணக்கம் சொல்லி மரியாதைக்காக ஓரமாக ஒதுங்கி நின்றனர். " இருக்கட்டும்.. பூஜைக்கான நேரம் நெருங்கிடுச்சு .வாங்க எல்லாரும் நந்தி கிட்டே போவோம்."என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றார்.

நந்தியின் முன் கண்மூடியபடி நின்றார். பூஜை முடிந்து கண் திறந்து பார்த்த போதுதான் எதிரில் அவரது ஆபீஸ் பியூன் குமார் நின்றிருந்தது தெரிந்தது 'என்னது நம் எதிரிலேயே நிற்கிறான் நம்மைக் கண்டுகொள்ளவில்லை பார்த்தும் பார்க்காத மாதிரி இருக்கிறானே . மரியாதை தெரியாதவன் ' என்று மனதுக்குள்ளேயே கோபப்பட்டு கொண்டார் தீனதயாளன் . கோபத்தில் கண்கள் ரத்தச் சிகப்பாக மாறின.

அடுத்த நாள். தீனதயாளன் ஆபீஸில் தனது அறையில் அமர்ந்திருந்தவர் குமாரை அழைத்து "என்ன நேத்து கோயிலுக்கு வந்து இருந்தே போல இருக்கு." என்று கோபமானகுரலில் ஆரம்பித்தார். அவரது கோபத்தை அறியாத குமார் "ஆமாங்கய்யா ..உங்களைக் கூட பார்த்தேன். உங்களுக்கு வணக்கம் சொல்லலாம்னு நெனச்சப்போ தான் 'கோயில்ல எவ்வளவு பெரியவங்க வந்தாலும் அவங்களுக்கு வணக்கம் சொல்றது கூடாது. அங்கே கடவுள் ஒருவனே பெரியவன்'னு ஒரு ஆன்மிக புத்தகத்தில் படிச்சது எனக்கு ஞாபகம் வந்தது. அதனாலதான் அய்யா உங்களுக்கு வணக்கம் வைக்கல. தப்பா நினைச்சுக்காதீங்க "என்றான். கன்னத்தில் அறைந்தாற் போல் இருந்தது தீனதயாளனுக்கு.

உண்மையான ஆன்மிகவாதி நானா இல்லை அவனா என்று விக்கித்துப் போனார் அவர்.



-மு.மதிவாணன்
குபேந்திரன் நகர்
அரூர்-636903

# "மியாவ்..."

சுரேஷுக்கு 'எலுரோபோபியா'.

அப்படியென்றால், பூனையைக் கண்டால் அவனுக்கு பெரும் அலர்ஜி. இதயமே துடிப்பதை நிறுத்தி விடும் போலாகிவிடும்.

அன்று அலுவலகத்திலிருந்து வீடு திரும்ப இரவாகி விட்டது. தெரு விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருந்தன.

தூரத்தில் ஒரு ஜோடி கண்கள் மின்னுவதைக் கண்டான். அவனது கால்கள் அங்கேயே உறைந்து நின்றன.

அந்த உருவம் மெதுவாக அவனை நோக்கி நகரத் தொடங்கியது.

அதன் 'மியாவ்' சத்தம் காற்றில் தவழ்ந்து வந்தபோது, சுரேஷுக்கு உடல் நடுங்கத் தொடங்கியது. நெற்றியில் வேர்வை துளிர்த்தது. அவன் தன் பையை இறுகப் பிடித்துக் கொண்டு வேகமாகக் நடக்கத் தொடங்கினான்.

அவன் வேகம் எடுக்க எடுக்க, அந்த நிழல் உருவமும் அவனைப் பின் தொடர்ந்தது

திடீரென்று அந்தப் பூனை ஒரு சுவற்றின் மீதேறி, அவன் தலைக்கு நேராக நின்றது. அதன் கண்கள் இருட்டில் அம்புகளைப் போல ஜொலித்தன. சுரேஷ் பயத்தில் கண்களை மூடிக் கொண்டான். அவனது சுவாசம் வேகமானது.

மெதுவாக ஒரு கண்ணைத் திறந்து பார்த்தான். அந்தப் பூனை எங்கோ காணாமல் போயிருந்தது. ஆனால், அவனது பயம் மட்டும் போகாமலே இருந்தது. வேக வேகமாய்ச் சென்று வீட்டின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து தாழிட்ட பிறகுதான் அவனுக்கு உயிர் வந்தது. சோபாவில் அமர்ந்து பெருமூச்சு விட்டான். அப்போது மீண்டும் அந்த ஓசை. "மியாவ்... மியாவ்" தேடினான்.

சோபாவிற்கு அடியிலிருந்து அந்தச் சத்தம் வர குனிந்து பார்த்தான். "அய்யோ..." கத்தியபடி எழுந்தான். பயத்தில் மீண்டும் ஒருமுறை அவன் இதயம் எகிறியது. "அங்கிள்...அங்கிள்... எங்க பிங்கி இங்க வந்திச்சா?" பக்கத்து வீட்டு எல்.கே.ஜி. சிறுமி உள்ளே வந்து கேட்க, சுரேஷ் விழிக்க, "மியாவ்" சத்தம் வந்தது

சத்தம் வந்த இடத்தைக் கண்டு பிடித்து விட்ட சிறுமி கீழே உட்கார்ந்து சோபாவிற்கு அடியிலிருந்த பூனையைக் கையால் பற்றி வெளியில் இழுத்தாள். திகிலுடன் சுரேஷ் பார்க்க, அதை நெஞ்சோடு அணைத்து முத்தமிட்ட சிறுமி, "என்ன பிங்கி... சாப்பிடற நேரமாச்சே... பசிக்கலையா?" கேட்டபடியே வெளியேற,

அந்த நிமிடத்தில் சுரேஷின் மூளைக்குள் ஒரு ஃப்ளாஷ் அடித்தது. "இந்தச் சின்னப் பொண்ணு கூட கொஞ்சமும் பயப்படாம பூனையைக் கைல தூக்கிக் கொஞ்சிட்டுப் போகுது... ஆனா நான் மட்டும் ஏன் நடுங்கறேன்!..." யோசித்தான்.

"அப்படின்னா... எனக்கு இருக்கும் இந்த 'எலுரோபோபியா' ஒரு வியாதியல்ல... என்னோட மனசுக்குள் ஒளிந்திருக்கும் ஒரு மாய நிழல்... நான் நெனைச்சா அதை ஈஸியாத் தூக்கி எறியலாம்!".

அன்று முதல் அவன் பூனைகளுக்கு பயப்படுவதிலிருந்து விடுபட்டான். பெரிய பெரிய மனநல நிபுணர்களால் குணப்படுத்த முடியாத அவனது 'எலுரோபோபியா"வை எளிதாய்த் தீர்த்து விட்ட சிறுமியைப் பாராட்டத் தேடினான்.





-முகில் தினகரன்
கோயமுத்தூர்.



# ஊர்மிளையின் ஊமைமனம்

இரண்டாம் பாகம் 17



கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## ராமனின் கேள்வி ..

“பிறத்தலும் இறத்தலும் இயற்கையின் நியதி என்பதை மறந்தனையோ? உண்மையில் பிறவிகள் உவப்பு இல் கோடிகள் தண்மையிலும் வெம்மையிலும் தழுவின. வையம் யாவையும் 60,000 ஆண்டுகள் ஆண்டவன் இறந்தனைக் கண்டு இரங்கல் வேண்டுமோ? ஏனெனில் இவ்வுலகில் இவ்வுலகைப் பெறுவதற்கு முன் உயிர் பிரிதல் உண்டு. அதைப் பார்த்தும் இருப்பாய் அல்லவா? மண் முதல் பூதங்கள் யாவும் என்ற போது எண் முதல் உயிருக்கு நீ இரங்கல் வேண்டுமோ? நல்வினையும் விதியும் முடிந்த போது உயிர் வாழ்க்கை முடிந்து போகும். காலத்திரி விதி என்னும் நெருப்பில் எரிந்து புண்ணியம் அனுபவித்து வற்றும் போது உயிர் பிரியும். இதுதானே இயற்கை. எனவே தந்தையை நற்கதியில் சேர்த்தல் மகனின் கடமை ஆதல். நீ செய்வது உதவி இது அலது உண்டு செல்!” என்றார் முனிவர்.

“கண்ணின் நீர் உகுத்தலன் கண்டது இல்லை நீ மணிக்கையில் மண்ணு நீர் சொரிவாயாக!”என்ற பின் ராமனும் நீர்க்கடன் முடித்தான்.

பரதன் சீதையவள் காலில் விழுந்து வணங்கினான். நீண்ட கூந்தலுடைய சீதையை ராமன் நோக்கி “நாயகன் என்நெடும் பிரிவினால் துஞ்சினான்!” என்றான்.

இதனைக் கேட்ட சீதை துணுக்குற்றாள். ஊர்மிளையின் மனது அவள் அருகில் சென்றது.

“இப்போதாவது என் நினைவு வருகிறதா சீத்தாக்கா! கேட்பதற்கே அஞ்சும்நீ, அதனைப் பார்த்துக் கூடவே இருந்த எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று நினைத்து பார்த்திருப்பாயா? யாருமே இல்லாமல் தனிமையில் என் உணர்வு அதுவும் இதுவரை துயரம் என்பதை அறியாதவள் தானே நானும்! உனக்கு ஏன் என் நினைவே வரவில்லை? என்னை எத்தனை முறை அரவணைத்து இருப்பாய்! அதையெல்லாம் ஒரு நொடியில் மறந்தனையே! எப்படி? எவ்வாறு?” என அருகில் காதோடு, “ராமனின் அன்பில், உயிரில் உருகும் உயிரானாயோ? உன்னைப் போலவே தாயும் தந்தையும் உள்ளனரோ?”

இதற்குள் முனிவர்தம் மனைவியர் சீதையைத் தூய நீராடி, துயரம் நீக்க ராமனுடன் சேர்த்தனர்.

மறுநாள் யாவரும் சூழ இருக்க, ராமன் பரதனை வினவினான்.

“ வரதன் துஞ்சினன்; வையம் ஆணையால் இவ்வுலகம் நின்னது; மகுடம் தாங்காமல், நீ விரத வேடம் வேண்டுவான் என்கொல்! பரத கூறு!” எனப் பரிந்து கூறினான்.

பதைத்து எழுந்த பரதன் கை தொழா நின்று முன் தோன்றலாகிய ராமனை நெடிது நோக்கி “நீ அன்றி யாரே அறத்து உளோன். நான் தவம் செய்வது பொருந்தாது என்று கருதியோ இவ்வாறு என்னைக் கேட்பாய்?” என்றான்.

“இவ் உலகை நோய் செய்த பாவக்காரியின் வயிற்றில் பிறந்த பாவியேன்; சாவது துணிந்தேனில்லை; தவம் செய்வேன் அல்லேன்; அப்படியானால் இப்பழி நின்று நீங்குவதற்கு என் செய்வேன்!” என்றான்.

“அறத்தின் பயனே அருள். அருள் இல்லாதவன் அறம் செய்தல் நகைப்புக்கு உரியதன்றோ? தந்தையும் உரிமையில்லாத மைந்தனும் இல்லாத போது அரசைக் கைப்பற்றிய நான் பகைவனே கொலாம்! உந்தைத் தீமையும் உலகு உறாத நோய் தந்த தீவினைத் தாய்செய் தீமையும் நீங்க மீண்டு அரசு செய்க!” என்று சிந்தை யாவதும் தெரியக் கூறினான்.

ஊர்மிளை நெஞ்சம் பட் பட் என்று அடித்துக் கொண்டது. இதோ பரதன் தன் இயல்பு குணத்தால் ராமன் கேட்ட ஒரு கேள்விக்கு தன் ஆதங்கத்தையும் ராமன் என்ன செய்ய வேண்டும் என்று தான் நினைத்ததையும் அழகாகச் சொல்லிவிட்டான். இதோ இன்னும் கொஞ்ச நேரத்தில் ராமனின் பதிலால் காலம் நினைத்த காரியத்தை முடிக்கும் என்பது திண்ணம்.

இருந்த போதும் ஊர்மிளையின் மனம் தனக்குச் சாதகமாகக் காலம் இருப்பின் நாம் நலம் எனக் கருதினாள். ஆனாலும் இதற்கெல்லாம் யாரே பொறுப்பாவார்! காலம் தன் சக்கரத்தைச் சுழற்ற ஆரம்பித்து விட்டது. இதோ ராமனின் பதிலில் காலம் என்ன சொல்லப் போகிறது என்பதைத் தீர்மானமாகச் சொல்லி விடப் போகிறது. ஏன் இந்தப் பதற்றம்?

பொறுத்திரு மகளே! காலம் நிச்சயம் உன்னையும் உணர்த்தும்! அதன் கணிப்பில் இவ் உயிர்கள் தப்புவது கடினம். தனக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் காலம் தன் கடமைகளைச் செய்யும். இதுதான் உலக இயல்பு. ஊர்மிளையின் மனதிற்கு இதத்தைக் கொடுக்குமா? இல்லை உறங்கத்தான் போகிறாளா?

“இன்னமும் வனவாசம் என்பதைச் சீதைக்கும் இத்துடன் முடிந்தால், காலத்திற்கு இருவரும் நன்றி கூறலாம்!” என்று எண்ணியவள் தன் அன்பரின் நினைவில் தன்னை இழந்தாள்.

அதற்குள் ராமன் மறுத்துக் கூறியதைக் கேட்டதும் உடைந்து போனாள் ஊர்மிளை.

பரதனின் சொற்களில் உள்ள உறுதியைக் கண்ட ராமன் உற்று நோக்கியவன் புரிதல் (மேவினான்) தொடங்கினால் எந்தை என்கிறான் பரதனை ராமன், “அன்பில் சிறந்த பரதனே! தொழுவதற்கு உரிய தேவரும் குரவரும் நம் தந்தை தாயே! தாய் வரம் கொள, தந்தை ஏவலால் மேய, நம் தர்மம் மேவினேன்! நீ வரம் கொளத் தவிர்தல் நீர்மையோ? நற்பண்பாகுமோ!” என்றான் “தந்தை தாயார் சொல்வழி நின்று செயல் ஆற்றுதல் தானே புதல்வர் ஆதல்! அவர் சொல்லுக்கு மாறுபடுதல் சரியோ?” என்றான்.

மேலும் பரதன் நாடு ஆளுவதற்கு இரண்டு காரணங்களைச் சொல்கிறான் ராமன். ஒன்று “உந்தை சொல் மரபினால் உடைத்தரணி நின்னது; வரத்தால் ராமன் காடு சென்றதால் உரவின் நீ பிறந்து உரிமை ஆதலிலும் அரசு நின்னதே!” என்றான்.

உடனே பரதனும் “நீ பிறந்த பார் என்னது ஆகின், யான் இன்று தந்தனென்; நீ போந்து மகுடம் சூடு!” என்றான். “உலகைத் துன்பம் நீக்கி காப்பதற்கே அன்றி தவம் செய்வதற்கு அன்று அரசை ஏற்றுக் காப்பாற்றுவாயாக!” என்று பொலம்குலாவு தாள் பூண்டு வேண்டினான்.

“அன்று நான் இசைந்த ஆண்டு எலாம் இன்றோடு ஏறுமா? உன் பரிவினால் என் வசம் செய்தால் அது முறையாகுமா?”

கடைசியாக ராமன் பரதனிடம் “எந்தை ஏவ ஆண்டு ஏழோடு ஏழ் என வந்த காலம் நான் வனத்துள் வைக, நீ தந்த பாரகம் (தரணி) தன்னை மெய்ம்மையால் அந்த நாளெல்லாம் என் ஆணையால் ஆள்வாயாக!” என ஆணையிட்டான்.

“நீ என் ஆணையை மறுக்கலாமா? துயர் உழந்து அயரல் சொன்னது செய்தி!” என்றான்.

திரும்பவும் மறுக்க பரதன் முற்பட இடையே வசிஷ்டர் பதில் உரைக்கத் தொடங்கினார்.

அன்பினால் உதவிய ஒருவனே (ஆசிரியர்) இத இயல் இயற்றிய குரவர் யாரினும் (தாய் தந்தையை காட்டிலும்) உயர்ந்தவர் என்றலால் “இன்று எனது ஆணை அன்று எணாது, உனக்குரிய நாடு போந்து நன்கு காப்பாற்று!” என்றார் ராமனிடம்.

“குருவின் சொல்லை மறுக்க முடியுமா?” என்று நினைத்தாள் ஊர்மிளா. இவர்களுடைய உரையாடல் மென்மையாக, கருத்தினை விட்டு விலகாமல், ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்துக் கொண்டு, அறநெறியைக் கருத்தில் கொண்டு உரையாடுகிறார்கள். என்னே! அவர்களது உரையாடலின் திறமை! காலம் தன்னுள் சிரித்துக்கொண்டது. ராமன் வசிஷ்டரை வணங்கி “ஆரிய சிந்தனை அறிஞ! ஒன்று உரை கூறுவது உளது!” என்று கூறத் தொடங்கினான்.

“சான்றவர் தன் குரவர் தாய் சத்தியம் பிறழாதத் தன் புதல்வர்களே ஆகுக! ஒருவன் செய்வேன் என்று ஏற்றபின் அவ்வுரை மறுக்கும் தன்மை உடையதோ? இல்லையே!” என்றான்.

“தாய் பணித்து உவந்த, தந்தை செய்க என ஏவ, எப்பொருள்களும் மேற்கொணராதவன் நல்லது தீயது அறியா நாய் எனத் திரிந்து, கீழ்மகனாக இருப்பதா?”

உடனே பரதன் தானும் காடு உறைவதாகக் கூறினான். அழுகை வந்தது ஊர்மிளைக்கு. இருந்தாலும் ராமன் உடனே ஒத்துக் கொள்வானா என்ன? பரதனுக்குத் தமையனாயிற்றே! ஆயினும் குரு சொல்வதை ஏற்கும் சீடனாய் இருக்கும் ராமன், இப்போது அவரையும் அடக்கி விட்டானே! என் செய்வது! இதற்குள் காலம் வேறொரு தீர்வைத் தயார்படுத்திக் கொண்டு விட்டது. பரதன் தானும் உறவேன் என்று நின்றால் விட்டு விடவா போகிறது காலம்.

“படை இல்லாத மன்னனும் மன்னன் இல்லா நாடும் பாழ் அல்லவா?” அப்படியானால் சத்ருக்கன் மட்டுமே எஞ்சி இருப்பான். அவன் பரதனைப் பிரியாதவன்; இது என்ன முடிவு! அப்படியானால் அயோத்தி என்னாவது? அயோத்தி, மன்னன் இல்லாமல் அழிந்து விடுமே! இதற்கு ஒருக்காலும் வசிஷ்டரும், அமைச்சரும் சம்மதிக்க மாட்டார்கள். தீர்வு இப்போது வேறாகிப் போயிற்று, பரதனிடம் ராமனே தன் வாயால் கூறும் அளவிற்குக் காலம் தன்னை நல்லதாகக் காட்டிக் கொள்ளத் தொடங்கி விட்டது.

இனி அதன் காலம் தான். தான் நினைத்தபடிக் காலமே நம் விதிகளை நிர்ணயிக்கிறது. அப்படியானால், சீதையின் வனவாசமும் நம் உறக்கமும் மறுத்தல் இன்றி நடைபெறத் தான் போகிறது. அன்பர்தன் சிந்தை மறந்ததற்கும் காலம்தானே காரணம் ஆயிற்று. நாமும் கூட அன்னையின் வாக்கின்படித் தான் நடக்க வைத்தது காலம்.


காலம், காலம், காலம். அது என்ன காலம்? காலச்சக்கரம் இப்போது நாம் கையில் கிடைத்தால் அதனை எதிர்த்திசையில் சுழல விட்டுத் தசரத மன்னனை எழுப்பி, அவரை அயோத்தி ஆளவிட்டு, நால்வருமே இணைபிரியாமல் கானகம் சென்று இரு ஏழ் ஆண்டுகள் கழித்துத் திரும்பலாம்.

இதற்கு என்னிடம் என்ன சக்தி இருக்கிறது? காலம் தன் கடமையைச் செய்து, தன்னால் எது ஒன்றும் நடக்காதது போல், மாற்றமே இல்லாமல் மாறி மாறித் தோன்றுகிறது. இதன் வலிமைதான் என்னே!

கடவுள் கூடக் காலத்திற்கு உட்பட்டு நடப்பது தான் காலத்தின் சிறப்பு. இத்தனை எண்ணியவள் உறக்கத்தின் விதியை மதியால் கூட வெல்வது கடினம் என்று முடிவாகி, மனதில் ஒரு அமைதி ஏற்பட்டு, இமைகள் தானாக மூட, கனவுலகில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

இதோ இன்னும் சிறிது நேரத்தில் தீர்வின் முடிவு வெளியாகும். அதற்குப் பிறகு, தான் செய்ய வேண்டிய கடமையும் தெளிந்துவிடும்.

- தொடரும்



# அனுமனின் பிரசாதமாக செந்தூரம் வழங்கப்படுவது ஏன் தெரியுமா?



அனுமனின் பிரசாதமாக வழங்கப்படும் செந்தூரத்தை தினமும் இட்டுக்கொண்டால், கணவன் மனைவி இடையே ஒற்றுமை மேலோங்கும்; பிரிந்த தம்பதி விரைவில் ஒன்று சேருவார்கள்; சந்தான பாக்கியம் கிடைக்கப் பெறுவார்கள் என சிலாகிக்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள்.

ஆஞ்சநேயர் வழிபாடு மிக மிக வலிமையானது. ஆஞ்சநேயருக்கு தனிக்கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. அதேபோல், வைணவக் கோயில்களில் ஆஞ்சநேயருக்கு தனிச்சந்நிதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

சிவபெருமானின் பிரசாதமாக விபூதி வழங்கப்படுகிறது. அம்மன் கோயில்களிலும் முருகப் பெருமான் குடிகொண்டிருக்கும் கோயிலிலும் விபூதியும் குங்குமமும் பிரசாதமாக வழங்கப்படுகின்றன.

பெருமாள் கோயில்களில் துளசியும் பிரம்மா குடிகொண்டிருக்கும் ஆலயங்களில் பிரம்மா பிரசாதமாக மஞ்சளும் வழங்கப்படுகிறது. அதேபோல் அனுமன் குடிகொண்டிருக்கும் ஆலயத்தில், அனுமனின் சந்நிதியில், துளசி பிரசாதம் வழங்குவது வழக்கம். முக்கியமாக, நாம் நெற்றியில் இட்டுக் கொள்வதற்கான பிரசாதமாக செந்தூரம் வழங்கப்படுகிறது. எல்லா அனுமன் கோயில்களிலும் செந்தூரப் பிரசாதம் வழங்கப்படுகிறது. இதற்கு ஒரு காரணமும் புராணத்தில் இருக்கிறது. ராமாயணத்தில் இதுகுறித்து சொல்லப்பட்டுள்ளது. சீதாபிராட்டியைக் கடத்திச் சென்ற ராவணன், அவளை அசோகவனத்தில் வைத்திருந்தான். சீதையைத் தேடி ராமர் ஒருபக்கம் அலைந்து கொண்டிருந்தார். அனுமன் சீதையைத் தேடிப் புறப்பட்டார். இலங்கைக்கு வந்த அனுமன், அங்கே அசோகவனத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சீதாபிராட்டியைக் கண்டார். பார்த்த க்ஷணத்தில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார். 'நீங்கள் இல்லாமல் ஸ்ரீராமரின் மனமும், அன்றலர்ந்த தாமரை போன்ற அவர் முகமும் வாடிப்போயுள்ளது' என்று தெரிவித்தார். சீதையும் ராமரின் பிரிவால், இளைத்துப் போயிருந்தாள்.

அப்போது முன்னதாக, சீதாதேவியின் திருப்பாதத்தைக் கண்டு வணங்கினான் அனுமன். அவளின் பாத விரல்களில், மெட்டி அணிந்திருந்தாள் என விவரிக்கிறது வால்மீகி ராமாயணம். அந்தத் தருணத்தில் சீதையின் நெற்றியைக் கண்டான் அனுமன். சீதையின் நெற்றியில் குங்குமத்துக்கு பதிலாக செந்தூரம் இருந்தது. 'அன்னையே... என்ன இது? உங்களின் நெற்றியில் குங்குமம் இட்டுக் கொள்ளவில்லையே... ஏன்? எதற்காக செந்தூரத்தை இட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார் ஆஞ்சநேயர்.

அதற்கு சீதாதேவி, 'முன்பைக் காட்டிலும் ராமபிரானின் நினைவு என்னை இன்னும் வியாபித்திருக்கிறது. மனதில் முழுமையாக இருக்கிறார் ராமபிரான். ராமச்சந்திர மூர்த்தியை மனதில் நினைத்துக்கொண்டு நெற்றியில் எப்போதும் குங்குமம் இட்டுக்கொள்வேன். ஆனால் குங்குமம் கூட கரைந்துவிடக் கூடியது. ஆனால் செந்தூரம் அப்படியில்லை. அவ்வளவு சீக்கிரத்தில் கரைந்துவிடாது. மேலும் செந்தூரம் இட்டுக்கொண்டால் வெகு நேரத்திற்கு அப்படியே இருக்கும். ஒருவேளை செந்தூரத்தைத் துடைத்தாலும் செந்தூரம் இருந்த இடத்தில் செந்தூரம் வைத்ததன் கறை இருக்கும். 'என்னையும் என்னுடைய ராமசந்திர மூர்த்தியையும் எவராலும் பிரிக்க முடியாது. என்னுள் அவரின் நினைவுகளே இருக்கின்றன' என்பதை வலியுறுத்தவே செந்தூரம் இட்டுக்கொண்டிருக்கிறேன்' என்றார் சீதாதேவி.

இதைக் கேட்டதும் சிலிர்த்துப் போனார் ஆஞ்சநேயர். 'என்னுடைய நினைவிலும் ராமபிரானே இருக்கிறார். அடியேனின் சகல செயல்களிலும் ராமச்சந்திர மூர்த்தியே இருக்கிறார்' என்று சொல்லி, தன் உடல் முழுவதும் செந்தூரத்தை பூசிக்கொண்டார் அனுமன் என விவரிக்கிறது ராமாயணம்.


இதனால்தான் அனுமனின் பிரசாதமாக செந்தூரம் வழங்கப்படுகிறது. அனுமன் கோயில்களில், அனுமனை வணங்கி பிரார்த்தித்து விட்டு வருகிற பக்தர்களுக்கு செந்தூரப் பிரசாதம் வழங்குவது வழக்கத்துக்கு வந்தது.

ஜெய் ஸ்ரீராம்!



**ப.கோபிபச்சமுத்து**
புதுப்பேட்டை,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் — டி.ரங்காச்சாரி வரலாறு







கான்பெராவில் உள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உள்ள ஓவியத்தில் காணப்படும் திவான் பகதூர் டி. ரங்காச்சாரியார் (நடுவில்). புகைப்பட உரிமை: சிறப்பு ஏற்பாடு.

மார்ச் 24, 1931 அன்று, புது தில்லியில் உள்ள மத்திய சட்டமன்றத்தில், முந்தைய இரவு லாகூர் சிறையில் சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத் சிங், சுக்தேவ் தாப்பர் மற்றும் சிவராம் ராஜ்குரு ஆகியோரை தூக்கிலிட்டதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக சில ஆவேசமான உரைகள் நிகழ்த்தப்பட்டன. தேசியவாதக் கட்சியின் தலைவரான மூத்த வழக்கறிஞர் டி. ரங்காச்சாரியார் தனது உரையில் கூறினார்: "ஆழ்ந்த துக்கம் மற்றும் ஆழ்ந்த கோப உணர்வுகளுடன் நான் ஒரு அறிக்கையை வெளியிட எழுந்திருக்கிறேன். பகத் சிங் மற்றும் இரண்டு பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நேற்றிரவு நிறைவேற்றிய அரசாங்கத்தின் நடவடிக்கையை நாங்கள் துக்கத்துடனும் வெறுப்புடனும் பார்க்கிறோம். பொதுமக்களின் கருத்தை புறக்கணிப்பதன் மூலம் அரசாங்கம் தங்களுக்கும் நாட்டிற்கும் கடுமையான பிரச்சனையை வரவழைத்து வருகிறது. இப்போது மிகவும் அவசியமான அமைதியான சூழ்நிலை கடுமையாக ஆபத்தில் உள்ளது. இதை நாங்கள் மிகவும் கடுமையாக எதிர்க்கிறோம், நாங்கள் மிகுந்த துக்கத்தில் இருக்கிறோம். இன்றைய நடவடிக்கைகளில் எங்களால் பங்கேற்க முடியாது." (தி இந்து தேதியிட்ட மார்ச் 24, 1931).

வெட்டர்பர்னின் கீழ் தொழிற்பயிற்சி சட்ட வல்லுநர், சுதந்திர ஆர்வலர், கொள்கை வகுப்பாளர் மற்றும் கொடை வள்ளல் என பன்முக ஆளுமை கொண்ட திவான் பகதூர் ரங்காச்சாரியார், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள ஓம்பலபாடியில் நவம்பர் 27, 1865 அன்று பிறந்தார். கும்பகோணத்தில் உள்ள நேட்டிவ் உயர்நிலைப் பள்ளி, சிதம்பரத்தில் உள்ள பச்சையப்பா உயர்நிலைப் பள்ளி மற்றும் திருச்சியில் உள்ள எஸ்பிஜி கல்லூரியில் கல்வி பயின்றார். பொன்னம்மாள் என்கிற கனகவள்ளியை மணந்தார். ஒரு குறுகிய கால ஆசிரியருக்குப் பிறகு, ரங்காச்சாரியார் சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார் மற்றும் 1890 இல் பட்டம் பெற்றார். அடுத்த ஆண்டு, அவர் சென்னை பார் கவுன்சிலில் சேர்ந்தார் மற்றும் அப்போது அட்வகேட் ஜெனரலாக இருந்த எச். ஜி. வெட்டர்பர்னிடம் பயிற்சி பெற்றார். பின்னர் அவர் 1896 இல் சுயாதீன பயிற்சியை நிறுவினார் மற்றும் சுதந்திர இயக்கத்தின் போது ஜி. சுப்பிரமணிய ஐயர் மற்றும் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை ஆகியோரின் பாதுகாப்பு உட்பட ஏராளமான குற்றவியல் மற்றும் சிவில் வழக்குகளை நடத்தினார். ரங்காச்சாரியார் தன்னை சட்டப் பயிற்சியுடன் மட்டுப்படுத்தவில்லை. அவர் மெட்ராஸ் மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்தார், பின்னர் மெட்ராஸ் மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் அவர் இந்திய இம்பீரியல் சட்டமன்ற உறுப்பினரானார், மெட்ராஸுக்கு அமர்ந்தார்.

சர்தார் வல்லபாய் படேலின் மூத்த சகோதரர் விட்டல்பாய் படேலின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவையொட்டி மக்களவைச் செயலகம் 1973 ஆம் ஆண்டு வெளியிட்ட நினைவுப் பரிசு ஒன்றில், சட்டமன்ற உறுப்பினராக இருந்த ரங்காச்சாரியார் பிப்ரவரி 5, 1924 அன்று பிரிட்டிஷ் அரசாங்கத்தை பிரிட்டிஷ் பேரரசுக்குள் இந்தியாவிற்கு முழுமையான, சுயாட்சி அதிகாரம் கொண்ட அந்தஸ்தையும், மாகாணங்களில் மாகாண சுயாட்சியையும் வழங்க வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். சட்டமன்றத்தில் ஸ்வராஜ் கட்சியின் தலைவர் மோதிலால் நேரு முன்வைத்த திருத்தத்துடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



ஆகஸ்ட் 1925 இல், ரங்காச்சாரியார் மத்திய சட்டமன்றத்தின் தலைவர் பதவிக்கு (சபாநாயகருக்கு சமமானவர்) அதிகாரப்பூர்வ வேட்பாளராகப் போட்டியிட்டு 56 வாக்குகளைப் பெற்றார். அவர் ஸ்வராஜ் கட்சி வேட்பாளர் விட்டல்பாய் படேலிடம் இரண்டு வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார் என்று நினைவுப் பரிசு குறிப்பிட்டது. மத்திய சட்டமன்றத்தின் ஒரு அமர்வில் அதன் துணைத் தலைவராகவும் பணியாற்றினார். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், கென்யா பிரச்சினை தொடர்பாக இங்கிலாந்துக்கும், புதிய தலைநகரான கான்பெராவைத் திறப்பதற்காக ஆஸ்திரேலியாவிற்கும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக ரங்காச்சாரியார் அதிகாரப்பூர்வ விஜயம் செய்தார். ஆஸ்திரேலியாவின் வளர்ச்சியில் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்லூரியில் (இப்போது கல்வியில் மேம்பட்ட படிப்பு நிறுவனம்) 'ஆஸ்திரேலியாவில் கல்வி நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு ஆற்றியதாக, ஜூலை 27, 1928 அன்று தி இந்து ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

திரைப்பட மற்றும் நாடக ஆளுமையான ஒய். கீ. மகேந்திரா, கான்பெராவில் உள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் தனது கொள்ளுத்தாத்தா ரங்காச்சாரியாரின் ஓவியத்தைப் பார்த்தபோது பெருமைப்படுவதாகக் கூறினார். சென்னையில் உள்ள பத்மா சேஷாத்ரி பால பவன் சீனியர் செகண்டரி பள்ளிகளின் நிறுவனர், மறைந்த தனது தாயார் ராஜலட்சுமி பார்த்தசாரதி (திருமதி. ஒய்.ஜி.பி என்று அழைக்கப்படுபவர்) தனது தாத்தா ரங்காச்சாரியாரைப் பற்றிய கதைகளைக் கேட்டதை அவர் நினைவு கூர்ந்தார். அவரைப் பொறுத்தவரை, 1940களில் தனது தாயார் இளங்கலைப் பட்டம் பெறுவதில் உறுதியாக நின்று ஆதரவளித்தவர் ரங்காச்சாரியார் தான்.

1920களின் பிற்பகுதியில், அவரது மகன் ஆர். வெங்கடாச்சாரி, அல்லது முத்தண்ணா, ஜகன்னாத பக்த சபாவைத் தொடங்கினார், இது சென்னை எழும்பூர் ஹை ரோட்டில் ரங்காச்சாரியாரின் அப்போதைய இல்லமான வேத விலாஸின் வராண்டாவில் இருந்து இயங்கியது. வெங்கடாச்சாரியின் பேரனான எஸ். வாசுதேவன் கூறுகையில், இசைக்கலைஞர்களும் பாடகர்களும் ஜகன்னாத பக்த சபாவில் திரண்டு வந்து தங்கள் இசை நிகழ்ச்சிகளை நடத்தினர். ரங்காச்சாரியாரின் மருமகளில் ஒருவரான ரங்கம்மாள், மயிலாடுதுறை மகாதான தெருவில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு நிலத்தை நன்கொடையாக வழங்கியதாக திரு. வாசுதேவன் தெரிவித்தார். பின்னர், நூற்றாண்டு பழமையான பள்ளிக்கு திவான் பகதூர் டி. ரங்காச்சாரியார் தேசிய மேல்நிலைப் பள்ளி என்று பெயர் சூட்டப்பட்டது. ரங்காச்சாரியார் 1932 ஆம் ஆண்டு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, 1933 ஆம் ஆண்டு பொது வாழ்வில் இருந்து ஓய்வு பெற்றார். ஆகஸ்ட் 4, 1945 அன்று, வேப்பேரியில் உள்ள ரிதர்டன் சாலையில் உள்ள தனது இல்லத்தில் 80 வயதில் இறந்தார்.

# 'ஜனநாயகன்' பட சென்சார் வழக்கை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம்




ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு ஆகியோர் நடிப்பில் உருவாகி உள்ள 'ஜன நாயகன்' பொங்கலை முன்னிட்டு ஜன.9-ல் வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் விஜய்யின் கடைசிப் படம் என்பதால் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்திருந்தது. ஆனால் தணிக்கை பிரச்சனையால் தற்போது வரை வெளியாகவில்லை.

தணிக்கை சான்றிதழ் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தயாரிப்பு நிறுவனம் தரப்பில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வந்தது. இதனிடையே கிட்டத்தட்ட ஒரு மாதமாக நடைபெற்று வரும் வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையில்,

ஜன நாயகன் படத்திற்கு விரைந்து தணிக்கை சான்றிதழ் வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கை பட தயாரிப்பு நிறுவனம் திரும்பப் பெறுவதாக அறிவித்தது.

மீண்டும் நீதிமன்றம் சென்றால் தணிக்கை சான்றிதழ் கிடைக்க மேலும் தாமதமாகும் என்பதால், திரைப்படத்தை மறு தணிக்கைக்கு அனுப்ப தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் நேற்று வெளியான நிலையில் இந்த வழக்கு வாபஸ் பெறப்படுகிறது. இதன்மூலம் தணிக்கை வாரியம் மூலமாகவே இப்பிரச்சனையை முடிக்க படக்குழு இந்த முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது.

இந்த நிலையில், ஜன நாயகன் படத்திற்கு தணிக்கை சான்று கோரிய மனுவை வாபஸ் பெற தயாரிப்பு நிறுவனத்திற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. ஜன நாயகன் படத்தை தயாரித்த நிறுவனம் வழக்கை வாபஸ் பெற விரும்பியதால் அதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி அளித்ததை தொடர்ந்து படக்குழு தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.



காஃபி வித் டிடி, ஜோடி நம்பர் 1, அன்புடன் டிடி என பல சூப்பர்ஹிட் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியவர் திவ்யதர்ஷினி. ரசிகர்களால் செல்லமாக டிடி என அழைக்கப்படும் இவர் தற்போது உடல்நிலை காரணமாக முன்புபோல் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதில்லை.

இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் டிடி தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை அதில் தொடர்ந்து பதிவு செய்து வருகிறார். இந்த நிலையில், வெளிநாட்டில் தான் எடுத்துக்கொண்ட சில ராண்டம் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் தற்போது வெளியிட்டுள்ளார். இதோ அந்த போட்டோஸ்..



நாடோடிகள் படத்தில் நடித்து பிரபலம் ஆனவர் அபிநயா. அவரது நடிப்புக்கு அதிகம் ரசிகர்களும் இருக்கிறார்கள்.

வாய்பேச முடியாது, காது கேட்காது என்கிற பிரச்சனைகள் இருந்தாலும் அதை எல்லாம் தாண்டி சினிமாவில் ஜெயித்து வருகிறார் அவர். கடந்த வருடம் அவர் தன்னை போலவே மாற்றுத் திறனாளி ஒருவரை காதல் திருமணம் செய்து கொண்டார்.

தற்போது அபிநயா அழகாக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் இதோ.

# ஒழுங்கா நடந்துக்கங்க இது தியேட்டர் கிடையாது



நடிகரும், ரேசருமான அஜித் குமார் கடந்த சில மாதங்களாகவே அபுதாபியில் தங்கி கார் ரேசில் பங்கேற்று வருகிறார். இவர் 'அஜித்குமார் ரேஸிங்' என்ற தனது சொந்த பந்தய நிறுவனத்தை உருவாக்கி துபாய், பெல்ஜியம், போன்ற நாடுகளில் நடைபெற்ற கார் பந்தயங்களில் கலந்து கொண்டு பரிசுகளையும் வென்றுள்ளார்.

வெளிநாட்டில் தங்கியுள்ள அஜித்தை நடிகர்கள் மாதவன், சிம்பு, பிரசன்னா, சிவகார்த்திகேயன், இயக்குநர் வெங்கட் பிரபு, நடிகை நயன்தாரா, இயக்குநர் விக்னேஷ் சிவன் ஆகியோர் நேரில் சந்தித்து பேசினர். இதனிடையே நடிகர் அஜித் முதன் முதலாக ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு நேர்காணல் ஒன்றும் அளித்திருந்தார். மேலும், அஜித் பங்கேற்கும் கார் ரேசிங் தொடர்பான புகைப்படங்கள், வீடியோக்கள் அவ்வப்போது வெளியாகி வருகின்றன. இந்த நிலையில், அபுதாபியில் உள்ள யாஸ் மெரினா சர்க்யூட்டில் நடைபெற்ற கார் ரேசில் அஜித் பங்கேற்ற போது, ரசிகர்களிடம் கடிந்துகொள்ளும் வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. அந்த வீடியோவில், 'ப்ளீஸ்... ஒழுங்கா நடந்துக்கங்க... இது தியேட்டர் கிடையாதுங்க..' என்று கடிந்து கொள்கிறார்.

# 'ரோஜா... ரோஜா...' காதலர் தினத்தில் வெளியாகிறது 'காதலர் தினம்'

காதலர் தினம் வருகிற 14-ந்தேதி கொண்டாடப்பட உள்ளதையொட்டி சூர்யாவின் 'மௌனம் பேசியதே', மாதவனின் 'மின்னலே' ஆகிய திரைப்படங்கள் வெளியாகும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த வரிசையில் தற்போது புதிதாக 'காதலர் தினம்' படம் இணைந்துள்ளது. இப்படம் காதலர் தினத்தன்று வெளியாகும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் படத்திற்கான டிரெய்லர் இன்று காலை 11 மணிக்கு வெளியாகிறது. 1999-ம் ஆண்டு இயக்குநர் கதிர் இயக்கத்தில் நடிகர் குணால், நடிகை சோனாலி, நடிப்பில் வெளியான படம் 'காதலர் தினம்'. தமிழ் சினிமாவில் எத்தனை படங்களை காதலை மையமாக்கொண்டு வெளியானாலும் 'காதலர் தினம்' படத்திற்கான ரசிகர்கள் பட்டாளம் எராளம். இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் வெளியான ஒவ்வொரு பாடல்களும் இன்றும் ரசிகர்களால் ரசிக்கப்படுகிறது. இப்படம் வெளியான நேரத்தில் வசூலிலும், விமர்சன ரீதியாகவும் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், காதலர் தினத்தன்று புதுப்பொலிவுடன் வெளியாக 'காதலர் தினம்' படத்தை காண ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

# மகளை கதாநாயகியாக வைத்து அர்ஜுன் இயக்கிய 'சீதா பயணம்' படத்திற்கு "U" சான்றிதழ்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் ஆக்சன் கிங் அர்ஜுன். இவரது நடிப்பில் வெளியான பல படங்கள் ரசிகர்களிடையே வெற்றி பெற்றுள்ளது. மேலும் இவர் வில்லன் மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடித்து உள்ளார்.

'ஜெய் ஹிந்த்', 'தாயின் மணிக்கொடி', 'வேதம்', 'ஏழுமலை' உள்ளிட்ட பல படங்களை அர்ஜுன் இயக்கியுள்ளார். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன் தனது மகள் ஐஸ்வர்யாவை முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க வைத்து 'சொல்லிவிடவா' என்ற படத்தை இயக்கி இருந்தார்.

இதனை தொடர்ந்து, தற்போது 'சீதா பயணம்' என்ற புதிய படத்தை அர்ஜுன் இயக்கியுள்ளார். இதில் நிரஞ்சன் மற்றும் அர்ஜுனின் மகள் ஐஸ்வர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க சத்யராஜ், பிரகாஷ் ராஜ் ஆகியோரும் நடித்துள்ளனர்.

மேலும் கதை மற்றும் திரைக்கதை எழுதுவதோடு மட்டுமல்லாமல், அர்ஜுன் இப்படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

ஸ்ரீராம் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரித்துள்ள இப்படம் தமிழ், தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய மொழிகளில் பிப்ரவரி மாதம் 14-ந் தேதி காதலர் தினத்தில் வெளியாக உள்ளது.

அண்மையில் வெளியான சீதா பயணம் படத்தின் டிரெய்லரும் கவனம் பெற்றது.

காதல் கதையை அடிப்படையாக கொண்டு உருவாகியுள்ள சீதா பயணம் படத்திற்கு தணிக்கை வாரியம் "U" சான்றிதழ் வழங்கியுள்ளது. இதை படக்குழு சிறப்பு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.



இந்து சமய அறநிலையத்துறை

திருவண்ணாமலை மாவட்டம். செய்யாறு வட்டம், முனுகப்பட்டு கிராமம்

## அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில்

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டயாகம்

# மஹா கும்பாபிஷேக பெருவிழா

# அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம் !

நிகழும் சுபஸ்ரீ விசுவாவசு வருஷம் உத்தராயண புண்ணியகாலம் மாசி மாதம் 10-ஆம் நாள் (22-02-2026) ஞாயிற்றுக்கிழமை பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள்ளாக ரிஷப லக்னத்தில் அருள்மிகு பச்சையம்மன் உடனுறை மன்னார்சாமி திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் அனைத்து பக்தகோடிகளும், ஆன்றோர்களும், சான்றோர்களும் கலந்துகொண்டு எல்லாம் வல்ல அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி அருளை பெற அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

நிகழ்ச்சி நிரல்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நேரம் | நிகழ்ச்சி |
|---|---|---|---|
| மங்கள ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 7-ஆம் நாள் | 19-02-2026 வியாழக்கிழமை | காலை 8.00 மணிக்கு | மங்கள இசை அனுக்ஞை விக்னேஸ்வர பூஜை, கோபூஜை, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், மகாலஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், பூர்ணாஹுதி உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.00 மணிக்கு | வாஸ்து சாந்தி, ரக்ஷோக்ன ஹோமம், பிரவேசபலி பூஜைகள் |
| மாசி மாதம் 8-ஆம் நாள் | 20-02-2026 வெள்ளிக்கிழமை | காலை 8.00 மணிக்கு | தீர்த்த சங்கிரணம், அக்னி சங்கிரணம், திசா ஹோமம், மூர்த்தி ஹோமம், அஸ்திர ஹோமம், மந்திர ஜபம், சம்கிதா ஹோமம், யாகசாலை அலங்காரம் |
| | | மாலை 5.00 மணிக்கு | மங்கள இசை, கணபதி பிரார்த்தனை, மிருத்சங்கிரணம், அங்குரார்பணம், பிரதான ஆச்சார்யர் ரக்ஷாபந்தனம், எஜமானர்கள் காப்பு கட்டுதல், விஷேசசந்தி, கும்பலங்காரம், கலாகர்ஷணம், முதல்கால யாகபூஜைகள் ஆரம்பம். நவகுண்ட பூஜைகள், சௌபாக்கிய திரவியங்கள் ஹோமங்கள் உபசாரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 9-ஆம் நாள் | 21-02-2026 சனிக்கிழமை | காலை 8.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிரார்த்தனை அங்குரபூஜை, இரண்டாம் கால யாகபூஜைகள் ஆரம்பம். மண்டப அர்ச்சனை வேதிகா உபசாரங்கள், அஷ்டபந்தனம் சாத்துதல், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | | மாலை 5.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, மூன்றாம் கால யாகபூஜைகள் ஆரம்பம், மண்டப அர்ச்சனை, வேதிகா அர்ச்சனை, நவகுண்ட யாகபூஜைகள், நாடிசந்தானம், தத்துவார்ச்சனை, ஸ்பர்சாஹுதி சௌபாக்கிய திரவியங்கள், ஹோமம் சோடச உபகாரங்கள், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| மாசி மாதம் 10-ஆம் நாள் | 22-02-2026 ஞாயிற்றுக்கிழமை | காலை 7.30 மணிக்கு | மங்கள இசை, விஷேசசந்தி, கணபதி பிராத்தனை அங்குரபூஜை, நான்காம் கால யாகபூஜைகள் ஆரம்பம். அவபிரதயாகம், நவகுண்ட யாக பூஜைகள், மஹா பூர்ணாஹுதி, யாத்ராதன சங்கல்பம், மஹா தீபாராதனை. |
| | | காலை 10.30 மணிக்கு | கலசங்கள் புறப்பாடு |
| | | காலை 11.00 மணிக்கு | ராஜகோபுரம் மற்றும் அனைத்து விமானம் கும்பாபிஷேகம் |
| | | காலை 11.15 மணிக்கு | மூலவர் அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சாமி கும்பாபிஷேகம் |
| | | காலை 11.30 மணிக்கு | மஹா அபிஷேகம், அலங்காரம் |
| | | பகல் 12.00 மணிக்கு | சிறப்பு அன்னதானம் |
| | | மாலை 6.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் |
| | | இரவு 8.00 மணிக்கு | சுவாமி அம்பாள் திருவீதிஉலா நடைபெறும் |
| | | இரவு 10.00 மணிக்கு | நாடகம் நடைபெறும் |

இங்ஙனம்

திருக்கோயில் நிர்வாகம், திருப்பணி விழா குழுவினர்கள், திருக்கோயில் பணியாளர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள், முனுகப்பட்டு

ஸ்ரீ சௌந்தர் பிரஸ், வேலூர்-4. செல் : 9894584829










ஆட்கள் தேவை

CNC டர்னிங் ஆப்பரேட்டர்

பெயிண்டர்

ஹெல்பர்

நல்ல சம்பளம் வழங்கப்படும்

SAA

Southern Heat Exchangers, Coimbatore

99444 40560




Aruvi SUPERMART

Shop Smart, Shop Smiles.

ACCOUNTANT


STOCK INVENTORY

DELIVERY BOY

Min 3 yrs Experience

SF No. 138/9A2, Kundrathur Main Rd, Mangadu, Chennai-122.

9087411008, 9087982000






## உணர்ந்தவன் உயில்

தஞ்சை மண்ணில் பிறந்து
தனக்கு கையளவு
நிலமில்லை...

தான் அமர்ந்து , படுத்துறங்க
குடிசையில்லை...

உழைப்பை தவிர நான்
எதையும் அறிந்ததில்லை...

என்னை யாரும் ஒருநாள் கூட
மதித்ததில்லை...

ஓடி ஓடி உழைத்தலும் ஒரு
காசு கூட மிஞ்சியதில்லை...

நான் பட்ட கஸ்ட்டத்திற்கு
அளவே இல்லை...

பட்ட கஸ்ட்டத்தை
மறைத்து என்
பிள்ளைகளை பட்டங்கள்
படிக்க வைத்தேன்...

பிள்ளைகளை
மதிப்புடன்
வாழ வைத்தேன்...

தள்ளாடும் வயதில் என்னை
யாரும் மதிக்கவில்லை....

உயிர் வாழ கையேந்தி
பிச்சை எடுக்காமல் இருக்க
முடியவில்லை...


வசதியற்றவன் வாழ்க்கை
வழியில் வருபவரை நம்பி
நம்பி நம்பி புள்வெழியில்...

புசிப்புது ரோட்டோரம்...
படுத்து உறந்துவதோ
மரத்தடியோரம்....



திறந்த வெளி என் வீடு
மழை, வெயில் குளிர்
என் நாடு என்
நாடு....!!

**பொன்.கருணா**
நவி மும்பை



## நீர்க்குமிழிகள்

காற்றோடு உறவாடி
நீர் பெற்ற பிள்ளை

வண்ணத்தை உள்வாங்கி
எண்ணத்தால்
வெண்மை காட்டும்

பார்ப்பவரைப் பிரதிபலித்து
பக்குவமாக வெளிக்காட்டும்

கண நேர வாழ்விலும்
கலங்காது ஊக்கம்
கொள்ளும் கலங்கி
நிற்பவர்க்கு
கரம் கொடுத்துக் காக்கும்

கண்ணாடி முகம் காட்டும்
காற்றில் அசைந்தாடும்
ஏற்றம் வேண்டுவோர்க்கு
எடுத்துக்காட்டாகும்

ஏற்றத்தாழ்வு வரும்
மாற்றம் தேடி வரும்


நீர்க்குமிழி போல்
நம் வாழ்வு நிமிடத்தில்
மாறிப்போகும் நிதானம்
கைக்கொண்டால்
நிம்மதி வாழ்வு தேடிவரும்

தோன்றுவதும் மறைவதும்
என்றும் நடக்கும்
பொன்றும் செயல்கள்
வாழ்வில் கடக்கும்
கொண்ட நம்பிக்கையே
கொள்கை காக்கும்



நீர்க்குமிழி வாழ்வை
இதயத்தில் இருத்தி
இருக்கும் வாழ்வில்
இன்பம் நாடுவோம்.

**தமிழ்நிலா**



## ரகசியம் சொல்லவா

" முகம் பார்க்கும் கண்ணாடி
நீ எனக்கு மூக்கு
கண்ணாடியும் நீயே ...."

சில நேரம் சில்லறை போல்
சிதறி வெடித்து ஓசை எழுப்பி
சிரிக்கிறாய் ..."

சில நேரம் மெல்லிய
புன்னகையால்
சுண்டி இழுக்கிறாய் .... "

கோபம் கொண்டாள்
கூட இதமாய் பதமாய்
தவிக்கிறாய் அன்பைப் பூட்டி
கோபத்தில் கூட
திணறுகிறாய் ...."

உன் விழியும் மனமும் என்
பாத ஓசை
கேட்க துடிக்கிறது ....."

என் நிழல் கூட உனக்கு
நிஜம் தான் உன் அன்பை
புரிந்து கொள்ள மீண்டும்
படிக்க முயலுகிறேன் .... "

ஆனாலும் மௌனம்
காட்டாதே விழியும்
மதியும் தவிக்கிறது ....."

புரிந்து பல நாள்
புரியாமல் சில நாள்
வாழ்க்கை எனும் ஓடம்
வழங்கும் நல்ல பாடம் .... "

ஏட்டு சுரைக்காய்



அல்ல அனுபவ
பயிற்சிகணவன்
மனைவி
மனவோட்டம்...."

**ஆர்.**
**சீதாராமன்**
சீர்காழி

## நம்பிக்கை நட்சத்திரம்

வறண்ட நிலத்தில்
ஒரு சொட்டு சொட்டிய
மழைத்துளி விழிகள் மூடி
தவித்த போது கிடைத்த
ஒரு நம்பிக்கை கனவுகள்
நினைவாகி மனதில் ஒரு
பூரிப்பு உள்ளத் தவிப்பு
ஓடிப் போனதே வீசிய
தென்றலில் அழகாக
எரியும் நம்பிக்கை தீபம்
கிடைத்த வெளிச்சத்தில்
பாதை தெரிந்தது இரவுப்
பகல் மாறி வருவது போல்
இன்பம் துன்பம் மாறி வந்து
யதார்த்தமானது விழிகளில்
இனி ஆனந்த கண்ணீரே
என்று இறைவன் பகிர்ந்தது



நம்பிக்கை
நட்சத்திரமாய்
மனதில்
சந்தோஷம்
மின்னியதே
இது போதும்
என மன நிறைவு வந்தது

**உஷா முத்துராமன்**

கண் வெட்டும் மின்னல்
உனது. இடிபாடுகள்
என்னிடம்.
முதல் மழைத்துளி எப்போதும்
உதட்டில்தான் தெறிக்கிறது.

ஆயத்தம் ஏதுமில்லா வெளிர்
வானமாய் நீ. சட்டென்று
பொழிந்து விடுகிறாய் உன்
அன்பை.



உன்னைப்
பார்த்ததுமே
பிரதட்சிணம்
செய்ய
ஆரம்பிக்கிறது
என் ஆராதனை
புத்தி.

**ரிஷபன்**

## எண்ணிய முடிதல் வேண்டும்!

அறுசீர் மண்டிலம்!


நல்ல சிந்தனை கொள்வோம்
நாளும் வந்தனை செய்வோம்
வல்ல செயல்களைக்
கொள்வோம் வண்ண
முறையிலே செய்வோம்!
பொல்லாச் செயல்களைத்
தவிர்ப்போம் புனித
வினைகளைச் செய்வோம்
எல்லாம் போற்றிட வாழ்வோம்
ஏற்றத் தாழ்வின்றி
சூழ்வோம்!

எடுத்த செயலையே
தொடுப்போம் எழிலாய்
அதனையே முடிப்போம்
கடுத்த முகத்தினைத்
தவிர்ப்போம் காணும்
இனிமையில் நடப்போம்
தடைகள் ஆயிரம் வரினும்
தயங்கா மலதையே
முடிப்போம் இடுக்கண்



பலவென
வரினும்
இனிமை
கொண்டதை
முடிப்போம்!

**முனைவர்**
**இராம.**
**வேதநாயகம்**
திருவண்ணாமலை.




## தேனருவி

நீ புன்னகைத்தால்
தேனருவியில்
குளித்தாற்போல்
குளிர்கிறது மனது!
நீ மு த் த மி ட் டா ல்
நயாகரா நீர்வீழ்ச்சியில்
குதித்தது போல்
களிக்கிறது உள்ளம்!
உன்னைத்தலைக்கனம்
பிடித்தவள் என்கிறார்கள்!
உன் கூந்தல் நீளமாகவும்
அடர்த்தியாகவும்
இருப்பதால் இப்படிச்
சொல்கிறார்களோ!?
உன்னைத்திமிர் பிடித்தவள்
என்கிறார்கள்!
அங்கங்கே வளைவும்
நெளிவும் அழகாக
இருப்பதால் பொறாமையில்
சொல்கிறார்களோ!? யார்
என்ன சொன்னால் என்ன?!
உன்னை நினைத்தால்
உன்னுடன் பேசினால்
உன்னை நெருங்கினால்
உன்னில் கலந்தால்
என் மனதில்



ஐந்தருவி
என்ன
ஐந்நூறு
அருவியே
கொட்டுகிறது!

**முத்துஆனந்த்**
வேலூர்



## பகுத்தறிவுப் பகலவன் பெரியார்

பெரியார் தமிழகத்தில் பிறக்கவில்லை என்றால்
பாரினில் தமிழன் சிறக்கவில்லை என்று பொருள்

சமூக நீதியை நிலைநாட்டிய நாயகர்
சமுத்துவ சமுதாயத்தை உருவாக்கியவர் பெரியார்

இட ஒதுக்கீட்டிற்காக முதன் முதலாக அன்றே
இந்திய அரசியல் சட்டம் திருத்திட வைத்தவர் பெரியார்

காந்தியடிகள் கதர் உடுத்த வேண்டியதும்
கதராடை சுமந்து விற்றவர் பெரியார்

கள் மது ஒழிக்க வேண்டும் என்றதும் சொந்தக்
கள் மரங்களை வெட்டி வீழ்த்தியவர் பெரியார்

விதி என்றும் ஒன்றும் கிடையாது சொந்த
மதியை பயன்படுத்தி வென்றிடச் சொன்னவர் பெரியார்

கடவுள் என்பது கற்பிக்கப்பட்ட கற்பனை
கடைக்கொடி மனிதனுக்கு புரியும்படி உரைத்தவர் பெரியார்

பெண் ஏன்? அடிமையானாள் நூலின் மூலம் பெண்ணின்
அடிமை விலக்கை அடித்து நொருக்கியவர் பெரியார்

பிள்ளை பெறும் இயந்திரமா? பெண்கள்
பல கேள்விகளைக் கேட்ட அறிவுச்சுடர் பெரியார்

விதவைகள் மறுமணத்திக்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே
வித்திட்ட புரட்சி வேங்கை பெரியார்

எதையும் என்? எதற்கு? எப்படி? என
எல்லோரையும் கேட்ட வைத்த அறிஞர் பெரியார்

பக்தி என்பது தனிச்சொத்து ஒழுக்கம் பொதுச்சொத்து
பாமரனுக்கும் புரியும் வண்ணம் உணர்த்தியவர் பெரியார்



போராட்டம் அறிவித்தால் குடும்பத்துடன் வந்து
போராடும் முதல் ஆள் தந்தை பெரியார்

தண்டனைக்குப் பயந்து செய்த செயலை
தீர்ப்பு தருவோரிடம் மறுக்காத சிங்கம் பெரியார்

ஆதிக்கம் எந்தப் பெயரில் வந்தாலும் எதிர்த்தவர்
ஆதிக்கவாதிகளின் சிம்மசொப்பனம் பெரியார்

அமைதிப் பூங்காவாக இன்றும் தமிழகம் திகழ்ந்திட
அறிவு விதையை உள்ளங்களில் விதைத்தவர் பெரியார்

பெரியாருக்கு இணை இவ்வுலகில் பெரியார்
பெரியார் அவர்தான் என்றும் பெரியார்

நான் நேசிக்கும் நல்ல தலைவர் பெரியார்
நான் கவிஞன் ஆகக் காரணமானவர் பெரியார்.

**கவிஞர் இரா.இரவி**

## நூல் விமர்சனம்

நூலின் பெயர்:
இளையராஜாவின் பாடல்
பெற்ற ஸ்தலங்கள்
ஆசிரியர் : எஸ். இராஜகுமாரன்
வெளியீடு : சந்தியா பதிப்பகம்.
விலை ₹240/–.
தொடர்புக்கு : 044 –24896079


பல்வேறு காலகட்டங்களில் வெளியான எஸ்.ராஜகுமாரன் கட்டுரைகளின் இனிய தொகுப்பு.

தலைப்பு கட்டுரையில் அவர் குறிப்பிட்டது போல பழைய பேருந்து நிலையமும் ஒரு காலத்தில் புதிய பேருந்து நிலையமாக இருந்ததை அறிவதே துயரமான சந்தோஷம்.

கடல் மீன்கள் பட பாடலான "தாலாட்டுதே வானம்" ஜெயச்சந்திரன்-ன் இனிய குரலில் இனி ஒலிக்கும் போதெல்லாம் இவரின் நினைவுகளும் கூட வரும்.

அவருக்கு அக்காவின் கோலங்கள் என்றால் எனக்கு என் அம்மாவின் மார்கழி கோலங்கள். ஈரம் காயாத கிணற்றடிகள் எனக்கு என் பதின்ம வயதில் தாம்புகயிறு, ரப்பர் கயிற்றில் நீர் இறைத்த நினைவுகளை அள்ளித் தெளித்தது.

இயக்குனர் மாதவன் , இவர் உதவியாளராக சேர வந்தேன் என்ற போது , எத்தனை பேர் இப்படி கிளம்பியிருக்கீங்க? நான்சென்ஸ் என கதவை அறைந்து சாத்தியதாகச், சொன்ன போது நெஞ்சம் வலித்தது. வசனகர்த்தா ஆரூர்தாஸ் பரிந்துரையில், ஏ.சி. திருலோகசந்தரிடம் இணைந்து உதவி இயக்குனராக சிவாஜி நடித்த குடும்பம் ஒரு கோயில்,




அன்புள்ள அப்பா படங்களில் பணிபுரிந்து படங்கள் வெற்றி பெறாது என சரியாகக் கணித்தாலும் அந்த அன்புள்ள அப்பா பாடல், இன்றுவரை என் செவிகளில் ரீங்கரிக்கிறது.


**பூனையுடன் வசிக்கும் வீடுகளில் :**

குழந்தை இல்லையென புலம்பும் குரல்கள் புழங்கிய வீட்டில் வலம் வந்தன பூனைக்குட்டி கள் குழந்தைகள் இல்லையா அவைகள்? எனும் கவிதை வரிகள் அருமை. அதன் பின்னணியில் பூனைக்குட்டி களை கொன்ற சின்னம்மா மகன் மகேந்திரன் குடும்பம் பெற்ற சாபம் (ஈரம் காயாத கிணற்றடிகள்) நினைவில் வந்து போனது.

ஓமாந்தூரார், சரஸ்வதி ராமனாதன் பற்றி இவர் எடுத்த ஆவணப்படங்கள் காலத்திற்கும் இவர் புகழ் பேசும்.

முகநூலில் இவரை என் இனிய நண்பனாகப் பெற்றது யாம் பெற்ற பேறு.

**ஸ்ரீகாந்த் திருச்சி**



நான் நட்சத்திரங்களை
விரும்புவதே இல்லை
மின்னிடும் அவள் ஒற்றை
துளி பார்வை போதுமே!

எனை அடக்கி ஆண்டு
வில்லியாய் நடந்து
கொண்டாலும்–அவள்
அல்லி ராஜ்ஜியத்தை
வெறுத்ததில்லை சின்ன,
சின்ன சண்டைகளுக்கிடையே
செல்ல கொஞ்சல்களில்
என் கள்ளிக்காட்டிலும்
பூ பூக்குதே!

ஆடிட்டரும் ஆடி போனார்....
"வீட்டில் வருமான வரி
சோதனை"

பெண்ணை "பூ "என்றான்
கசக்கி எறிவதற்க்காக
நிலவு என்றான் அமாவாசை
ஆக்குவதற்காக தென்றல்
என்றான் தழுவுவதற்காக
கவிதை என்றான்
கற்பனையை அவள்
மீது திணிப்பதற்க்காக
கண்ணகி
என்றான் களங்கம்
சுமத்துவதற்க்காக
சீதை என்றான் தீ
குளிக்க சொல்வதற்காக
தேவதை என்றான் காமத்தை
தீர்த்து கொள்வதற்காக ஏனோ
கடைசி வரை அவளை
சொல்லவே இல்லை
சக மனுஷி என்று !


நழுவும் துப்பட்டாவின்
மீன் வாசனையில்
சுற்றித் திரிகிறது
ஒரு திருட்டுப் பூனை!

தினம்,தினம் தனம்,தனம்
என்கிறது–இதுவரை
பணம் பின் சென்ற வயசு
யாரடி நீ மோகினி
என்ன தான் செய்வதாய்
உத்தேசம்? மரியாதையாய்
கேட்கிறேன்–என் மனசுக்குள்
எப்ப தான் வருவாய்?
விடை தெரியாமலே
விழி பிதுங்கி நிற்கிறேன்
கெஞ்சி மட்டுமல்ல
கடைசியாய் கொஞ்சியும்
கேட்கிறேன் இதுவரை
திரும்பி நின்று –எனை
அணு,அணுவாய் தின்றது
போதும் நிலவே
உன் முகம் காட்டு!

எத்தனை நாள் இரவு
ஒரே கனவு வானில் நிலவு
நீயில்லாத வாழ்வு துறவு

இலவு காத்த கிளி
கதையெல்லாம்
தேவையில்லையடி
நீயே என்னில் பாதியடி

வரவு செலவு கணக்கு பார்க்க
காதலொன்றும்
வட்டி கடை இல்லையடி



இட்லிக்கு சட்டினி ஜோடி
பொருத்தமாய் நீயே
எனக்கே எனக்காய் வந்த
உறவடி
நீ மட்டும் இவ்வாழ்வில்
போதுமடி

**நௌஷாத் கான்.லி**




## "எல்லோருமே கோமாளிகள்"

ஓட்டு எந்திரம் முன்
சிந்தனை நின்று...
சின்னத்தின் பின்னால்
சுயமரியாதை மறையும் நாளே
தேர்தல் நாள்!

கையில் காசு வரும்...
வாயில் வாக்குறுதி
கொட்டும்... கண்ணில்
கனவுகள் அணிவகுக்கும்...
காதில் பொய்கள் வந்து வந்து
குவியும் அனைத்தையும்
வாங்கிக் கொண்டு
நம்மை நாமே விற்கும் நாளே
தேர்தல் நாள்!

நேற்றைய கண்ணீர்
இன்றைய தொகையில்
கரையும்! நேற்றைய பசி
இன்றைய போஸ்டரில்
மறையும்!

"எல்லாம் மாறும்"
என்றே நம்பி அதே
முகத்திற்கு
முத்தமிடும் வினோதப்
பண்டிகை தேர்தல் நாள்!

மேடையில் நடிக்கும்
அவர்கள் நிஜத்தில் வேறு
மாதிரி!
திரையரங்கில் கை தட்டும்
நாம் எப்போதும் ஒரே மாதிரி!
அரங்கமே நாமே...
கோமாளிகளும் நாமே...

காலடியில் மிதிபடும்
உரிமையை காசுக்கு
விற்று விட்டு "ஏன் எதுவும்
மாறவில்லை?" எனக் கேட்கும்
அப்பாவித்தனத்தில்
ஆஸ்கார் பரிசு நமக்கே!

ஓட்டுப் போடும் முன்
சிந்திக்க மறந்தால்,
முடிவு வந்த பின்
அழுவதில் அர்த்தமில்லை!



கண்ணாடி முன் நில்
மனிதா
எதிரில் தெரிபவனே
இந்நாட்டின்
உயர்தரக் கோமாளி!

**முகில் தினகரன்,**
கோயமுத்தூர்




## அங்கும் இங்கும்

நான் இங்கிருப்பதாகச்
சிலர் அங்கிருந்து
பொறுமுகிறார்கள்.

"அங்கிருந்தாரே" என்றும்
சிலர் வியக்கிறார்கள்.
"எப்போதும் அவர்
அங்குதானிருப்பார்
அங்குமிங்கும் அவர்
அலையவேண்டிய
அவசியமில்லை"என்றும் சிலர்
பேசிக் கொள்கிறார்கள்.


என்றாலும்
இங்கிருப்பவர்களில்
ஒருவரோடு அங்குமிங்கும்
என்னைப்பார்த்துவிட்டு
'எங்கிருக்கிறேன்' என்று
குமைகிறவர்களைப் பார்த்தும்
பரிதாபப்படுகிறேன்.

எங்கு பயன் என்று
பார்த்து அங்குமிங்கும்
ஓடுகிறவர்களைப்
பார்த்த நமக்கு... எங்கு



மில்லாதவர்களை
எங்கெங்கோ
கற்பனை
செய்வது
இங்கே
வாடிக்கையாகி
விட்டது.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை



## கொஞ்சம் ஹைக்கூ...

மிகச்சிறந்த விருந்து
இலைகள் நிறைந்து கிடந்தன
வயிறுகள் இல்லை.

(2) விலங்குகள் இரையை
மட்டுமே துரத்துகின்றன
மனிதன் எல்லாவற்றையும்..

(3) இலவசம்
அமுதசுரபியல்ல திருவோடு

(4) நாக்கிலிருந்து
வருவதால்தாம்
எச்சிலாகவே இருக்கின்றன
வாக்குகள் எதுவும்.



(5) குப்பைத்
தொட்டியில்
கொட்டப்படும்
குப்பைகள்
இலவசங்கள்.

**ஹரணி**
தஞ்சாவூர்



## காதலித்துப்பார் !

காதலியை பற்றி கவிதை
எழுதுவது மிகவும் சுலபம்...
உவமைக்கு ரோஜா மலரும்...
மீன் விழியழகும்.. வில்
புருவமும்... விண்மீன்
பருக்களும்... கோவைப்பழ
உதடுகளும்...
இப்படியாக...
காதலித்துப்பார்...
கவிதை...
உன்னையே
எழுதவைக்கும்...
முகாரி
ராகமாய் !



**எம்.பி.தினேஷ்,** கோவை



## வாழ்க்கைப் போராட்டம்

சின்னஞ்சிறு உலகத்தின்
வண்ணமிகு ஆசைகள்

வானிலே பறக்கும் காற்றாடி
பிம்பங்கள்

காற்றிலே சுழலும் விசிறி
பொம்மைகள்

கம்பியிலே கட்டி வைத்த
பலூன் பறவைகள்..

"அத்தனைக்கும் ஆசைப் படு
" எனும் அறிஞர் வாக்கு..

மெத்தப் படிக்காமலே
புரிந்த நெஞ்சில்

நித்த நித்தம் குரல்
கொடுக்கும் பசியின்
வேகம்...

வாய் வரைக்கும் எட்டி வந்தே
ராகமாய் கேட்கும் " அம்மா
ஒரு பலூன் வாங்குங்க "
என்றே...

வாங்காத புறக்கணிப்பு
சோகம் காட்டும்.... காற்று
போன பலூனாய் சில நேரம்.

எல்லாமும் விற்ற பின்னே
தோன்றும்
மகிழ்ச்சி..
முகத்திலும்
மின்னலடிக்கும்
அழகுதான்
இதுவோ



**மீனா சேகர்**



## விவாகரத்து ஒரு தீர்வில்லை

உன்னைச் சுமந்த என்
மனதிற்கும் தெரியும்
நீ ஒரு நாள் என்னை
விட்டுச் சென்றுவிடுவாய்
என்று அப்போது ! நான்
"இறந்திருப்பேன்" என்ற
"நம்பிக்கை" என் மனதில் !

ஆனால் நீயோ என் மனதை
புரிந்துகொள்ளாமல்
பிரிந்து வாழ முடிவெடுத்து !
என் சுமையைக் குறைத்து
உதவி செய்வதாக "போலிக்
காரணங்கள்" தேடுகின்றாய்"
உன் மனதில் !

ஆனால் நானோ இருக்கும்
போதே "இறந்தநிலையில்
வாழ்கிறேன் "
நீ பிரிவேன் என்பதனால்
உன்னைச் சுமந்ததினால் !

"இருந்தும் இறந்தவனாக"
என் மனதில் !

உன்னைப் பிரிந்த வலியை
விட உன்னுடனான
நினைவுகளை நினைத்துப்
பார்க்கும் போதுதான் மிக
"வலிக்கிறது"
என் மனதில் !

துணையை
பிரியாத வரம்
வேண்டும்
இறைவா !




**G.A.கோவிந்தராஜ்**
**(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

## நெஞ்சொன்று..!

பெரும்பரபரப்பு
வியாபிக்கும் நெரிசல் மிக்க
சாலை பரப்பினூடே
சீறிப்பாயும் கனரக
ஊர்திகளின்
அணிவகுப்பிலும்
சாலை மருங்கின்
ஒரு பக்கமிருந்து மறுபக்கம்
ஊர்ந்து நகர்ந்திடும்
முதுகுக்கூடு சுமக்கும்
நத்தையின் வைராக்கியத்தை
முந்தியும்
உலகிலிருக்குமோ
வாழ்க்கை
போராட்டத்திற்கு
சான்றாகும்
உறுதியுள்ள
நெஞ்சொன்று.?!



**ஈ.கார்த்திகேயன்,**
அறமத்தாபாளையம்.



## நம்பிக்கைச் சிறகுகள் !

சாதிக்க முடியுமா ?
சந்தேகம் வேண்டாம் !
சாதிக்க முடியும் !
நம்பிக்கை வேண்டும் !

உயர முடியுமா ?
சந்தேகம் வேண்டாம் !
உயர முடியும் !
உத்வேகம் வேண்டும் !

வெல்ல முடியுமா ?
சந்தேகம் வேண்டாம் !
வெல்ல முடியும் !
வெறி வேண்டும் !

எதிர்மறை சிந்தனை
உனக்கு வேண்டாம் !
நேர்மறை சிந்தனை
உனக்கு வேண்டும் !

தாழ்வு மனப்பானமையைத்
தகர்த்திட வேண்டும் !
தன்னம்பிக்கை நெஞ்சில்
நிறுத்திட வேண்டும் !

தோல்வி பயத்தைத் தள்ளி
வைக்கும் வேளை
தோள்களில் விழும்
வெற்றி மாலை !

முயன்றால் எதுவும்
முடியும் முயன்றிடு !
முயற்சி திருவினையாக்கும்
வள்ளுவர் கூற்று !

நேரத்தை மதித்து
திட்டமிட்டு உழைத்திடு !
நினைத்து எல்லாம்
நடந்திடும் கண்கூடு !

அக்கினிச் சிறகுகள்
எழுதினார் அப்துல்கலாம் !
நம்பிக்கைச்
சிறகால்
எழுதிடு உன்
சாதனை
வரலாறு !



**கவிஞர்**
**இரா.இரவி**

## பற்களைக் காப்போம்!

அறுசீர் மண்டிலம்.

காலை மாலை பல்துலக்கு
கரையே இன்றிப்
பார்த்துக்கொள் காலப்
போக்கில் ஈறுகளைக்
கனிவாய் நீயும்
பார்த்துக்கொள்!
மேலும் கீழும் தேய்த்துவிடு
மேன்மை யாக
வைத்துக்கொள்
வேலை அதிகம்
கொடுக்காதே விளைவு
நன்றாய் இருக்கட்டும்!

ஆலும் வேலும் பல்லுக்கே
அழகாய் உறுதி ஆகுமன்றோ
நாளும் பல்லைப்பாதுகாப்பாய்
நலமாய்ப்
பல்லைக்காத்திடுவாய்!
காலம் முழுதும் பற்களையே
கருத்தாய் நீயும்பார்த்திடுவாய்
நீள ஆயுள் வேண்டுமெனில்
நேர்ந்து பராமரிப்பாய்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## விழி வீச்சு

கண்கள் என்ற ஆயுதம்
தாங்கி என்னவெல்லாம்
செய்துவிடுகிறாய் என்னை..
வாள் வீசாமல்
விழி வீச்சிலேயே..

அல்லது மலரம்புகளாய்ச்
சொல்லம்புகளைக்
கணநேரத்திலெய்தி..
சீண்டுதலைச் செய்து
நாண நெளிவுடன்
வரவழைக்கிறாய் என்னை ..

நாணக்கேடயம் இற்று
விழுந்திருக்கும் நிலைகளில்..
நிற்கச் செய்துவிடுகிறாய்
நேருக்குநேர் உன்முன்

யாருக்கும் தெரிவதில்லை
அது ஏற்படுத்துவது
என்னவோ.. பட்டாம்பூச்சி
சிறகடிக்கும் உணர்வுகளின்..
பரவச நிலைகளின்
விளைவுதான் என்பது

உடனே உதயமாகிறது
புது நிலவு.. வான்
மேகங்களில் நாம் மட்டுமே..
வண்ணத்துப் பூச்சியின்
சிறகுகளாய்
உணர்வுகள் விரிகின்றன..
வண்ணமயமாய்
ஒவ்வோர்
அணுவிலும்
க..ண்..ணா !



**கீதா**
**கண்ணன்**
ஸ்ரீரங்கம்



## தீபங்கள் பேசினால்

தீபங்கள் பேசினால் .....

இருள் விலகும்
இறை ஒளி ஊடுருவி
இன்னல் நீக்கும்

இருக்கும் இடம் புரிந்து
இருப்பதை ஏற்று
நம்மை நாம் உருக்கி
உணர்வு புரிந்து வாழ்ந்தால்
ஒளியும் விழி நிறைக்கும்
சூடும் சுகமாகும்

உருகித் தந்த ஒளியும்
உணர்வு புரிந்த மொழியும்
உண்மை வாழ்வின்
மறு வடிவம்

ஒளி தாங்கும் விளக்கும்
ஏதுவாகும் எண்ணையும்
தூண்டப்படும் திரியும்
தலைக்கனத்தை
உடைத்தெரியும்
தீக்குச்சியால் சீரான
ஒளியாகும்

தாங்கி வாழ்ந்து ஏந்தி நின்று
எரி திரியாக விட்டுக்
கொடுத்தால் சுடரும்
தீபமெல்லாம்
சுகமான ஒளி நல்கும்

தீபத்தின் ஒளியாக
உள்ளத்தின் மொழி
இருந்தால் வையத்தின்
வாழ்வெல்லாம்
வசந்தமாக உலா வரும்

புறவெளியில் தீபங்கள்
பேசினால்.... புது வெளிச்சம்
தானே வரும்

அக
வெளியில்
தீபங்கள்
பேசினால்
அன்பு நிலை
தானே வரும்.



**தமிழ்நிலா**

உன் கூந்தலில்
குடியேறத் தான்
குறை பிரசவமாய்
செடியில் புன்னகையோடு சாக
பிறக்கின்றன பூக்கள்!!

கண்ணாடி பார்க்கிறேன்
நீ ஏனடி தெரிகிறாய்??
எனது பிரதிபலிப்பாய்!!


நினைவுகளில் கூட
என்னை நிம்மதியில்லாமல்
செய்ய வைப்பது
உன்னால் மட்டுமே சாத்தியம்!!

அனுதினமும் நினைவுகளால்
வதைக்கிறாய் நீ
தேவையில்லையென
என்னால் என் பேச்சையே
கேட்க முடியாததால் என்னவோ
நீ தேவதையானாய்!!

நீ கனவு தேவதையாக
மாறி விடக் கூடாதா??
என் ஒட்டு மொத்த
காதலையும் மிச்ச,
சொச்சமின்றி
தந்து இருப்பேனடி!!!

உன் முத்தங்களை விடவா
அந்த சாக்லேட்
இனித்து விடப் போகிறது !

உண்மையை
சொல்லப்போனால்
என்னை விட அந்த
பொம்மையை தான்
நீ அதிகம் காதலிக்கிறாய்



என்னை விட உன் செல்ல
முத்தங்களை உயிரில்லாத
அந்த பொம்மைகள் தான்
சர்வ சாதரணமாய்
வாங்கி விடுகின்றன!

Rose day
Teddy day
Chocolate day
Kiss day
Hug day
valentines day
போன்ற கொண்டாட்டங்கள்
எல்லாம் ஒரு நாள் மட்டுமா?
ஒரு தினத்தில் முடிவதல்ல
அன்பு காதலை
போற்றுபவனுக்கு
வருடம் முழுதும்
அன்பின் தினங்கள் தான்!
இப்போதைக்கு கொஞ்சம்
கவிதை வேண்டும்
உன் வெட்கங்களை
அள்ளி கொள்கிறேன்!

இத்தனை செருப்படி பட்டும்
காதலுக்காகவே ஏங்குகிறது
மானம் கெட்ட மனசு!

உன்னை உன்னை விட
அதிகமாக நேசிக்கும்
ஒரு ஜீவன் கிடைத்தால்
கெட்டியாக பிடித்து கொள்
வாழ்வின் கடைசி வரை!

அவள் வெறுத்தாலும்
விரும்ப மட்டுமே செய்கிறது
பாவப்பட்ட ஆண் மனசு!

உன்னை கண்ட முதல் நாள்
இதயம் ஈகோ மறந்து
சொல்லியது இத்தனை நாள்
நீ கனவு கண்டது
இத்தனை நாள் யாரோடு வாழ
வேண்டும் என கங்கணம்
கட்டியது புரியாத புதிரான
வாழ்கையில் விடையாக
எண்ணியது தேடல்
நிறைந்த வாழ்க்கையிலும்
பொக்கிஷமாக எண்ணியது
இவளை தான் இவளை
யாருக்காகவும் எதுக்காகவும்
விட்டு விடாதே காதலோடு
கெட்டியமாக பிடித்து கொள்
இவள் உனக்கானவள்
இதுவரை நீ தேடி
திரிந்த தேவதை
இவள் தான் என
சப்தமுடன்
சொல்லியது!



**லி.நௌஷாத் கான்**

## மரியாதை !

" சார் டைம் என்ன ஆச்சு !"
எனக் கேட்டும் பதில்
வராதவரிடம் "ஜீ....
டைம் என்ன ஜி !" என்று
வினவியதும் பதில்
வந்தது..." ஜி....9:30 ஜி !"
இது தான் தமிழ் நாகரீகம் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## மின்கம்பங்கள்

மின்சார வாரியத்தால்
மண் மீது நடப்பட்ட
வேற்றமரங்கள்.

நிற்கும்மின்விசிறி
மின்சாரம்தொட்டதால்
கூட்டுக்குள்
சிறகடிக்கும் பறவை.

பொறியியல் கல்லுhhpயில்
படிக்காமல்
அறைக்குள்ளறைகட்டியது
துhக்கனாங்குருவி.

வெங்காயம்
மனித வாழ்வின்
தத்துவ வெளிப்பாடு.

வெண்பஞ்சு மேகங்கள்
கடல்நுரைகளின்
கண்ணாடி.

அலைகள் கடல்மணலை
கரைசேர்க்கும் ஓய்வாரியா
உழைப்பாளிகள்.

பேசும்மௌனம்
வான்மேககூட்டங்களில்
பூங்காற்றுதீண்டலில்
பூஞ்சாறல் துhறலில்
அதிகாலை உதயத்தில்
பூப்பூக்கும் நேரத்தில்

உதயசூரியன்
நீலக்கடலில்
நீராடி
மஞ்சள் பூசிய
மங்கை முகம்.



**கவிஞர்.**
**பொன்**
**பனகல் பொன்னையா.**

## பொறுமையே அருமை

பொறுமையே வாழ்க்கையின்
பெரும் பலம் உள்ளத்தில்
உறுதியை தரும் ருத்ரம்
மனதை அனல் போலாக்கும்
பொறுமையே வெற்றிக்
கோப்பையை கிடைக்க
செய்யும் வேகம் வீழ்த்தவே
செய்யும் பொறுமை நல்ல
பாதியை காட்டும் சிரிப்பு
நல்ல பாதையை காட்டும்
தோல்வி கதவினை மூடி
வெற்றி கதவை திறக்கும்
அகிலமே எதிர்த்தாலும் உன்
பொறுமை கைவிடாது
பொறுமையாக
இருந்து பார்
பெருமைதானே
தலைகிரீடத்மாக
வரும்.



**உஷா**
**முத்துராமன்**



## படத்திற்கு ஹைக்கூ !

பெயர் வைத்தது யாரோ ?
சரியான ஆட்டத்திற்கு
தப்பாட்டம் என்று !

ஆணிற்குப் பெண்
சளைத்தவள் அல்ல
ஒலிக்கட்டும் பறை !

வேறு கருவி இல்லை
இதற்கு இணை
பறையிசை !

வெளிநாட்டவர்களும்
வியந்துப் பார்க்கும்
தப்பாட்டம் !

தரணியில் முதலிசை
தமிழிசையே.

**கவிஞர் இரா .இரவி !**



## தனிமை

நெடு நேரம் பேசிக் கொண்டே
இருந்தேன் ... என்
எல்லாக் கவலைகளையும்
பகிர்ந்து கொண்டேன்...
எல்லாவற்றிற்கும்
மவுனத்தையேதான்
பதிலாய் தந்தது தனிமை...!

## அம்மா

தன் சிறகு ஒடித்து
பட்டாம்பூச்சி உந்தன்
சிறகுகள் சீவுவாள்
உன் எல்லை
அடிகள் என்றாலும்
அக்னிகுஞ்சென்று
அண்டம் முழுதும் பறக்க
செய்வாள் ....
கண்டாங்கிச்
சேலை கட்டி முடிந்து அள்ளி
சொறுகிய
அன்னை அவள்
கடவுளின்
கருணை
அவதாரம். ....



**சத்யா**
**கீர்த்திவாசன்**



## என் மச்சான்...

இமைகளை தீண்டும்
காற்று,மெதுவாய் இதயத்தை
தீண்டுகிறது.

விரல்களில் புதிதாய்
வெட்கம வந்தது,
வெட்கம் வந்து
பெண்ணென
உணர்த்துது.

அரச்ச மஞ்சள் பூச
மறந்தேன்,கறிக்கு மஞ்சள்
தரையில் அரைத்தேன்.

பூனை தேடும் கருவாடாய்,
பொழுதெல்லாம் தேடினேன்.
யானையைப் போல்
பொழுதெல்லாம் கையேந்தி
உன்னிடம் பிச்சைகேட்கிறேன்.

சொப்பனத்தில் மாமா நீ
தொந்தரவு செய்தாய்,
கற்பனையில் நீ கதை
படித்தாய்.

வெள்ளச்சி நான்
வேண்டினேன், வெள்ளை
குதிரையில் நீ வர.

கள்ளச் சிரிப்பில்
கலக்கிய மச்சான்,
கருக்கலில்நீ,என்னை
காணாமல்போனதென்ன
என் மச்சானே.



**வீ.கருப்பையா**
**பாவை.**
கட்டிக்குளம்

முனிஸ்வர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மிக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget => We Show Your Home
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION FACTORY
For Your
REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

கண்ணீர் அஞ்சலி

கடலூர் மாவட்டம், அரிசிபெரியாங்குப்பம்,
எண்.6, சகுந்தலா நகரில் வசித்து வந்த



திருமதி. G.ராணி அவர்கள்

10.02.2026 செவ்வாய்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் இயற்கை எய்தினார், அம்மையாரது இறுதி ஊர்வலம்
10.02.2026 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு
அரிசிபெரியாங்குப்பம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்...

பிரிவால் வாடும் : கணவர் காந்தி,
மகன்கள், மகள்கள், மருமகள்கள், மருமகன்கள் மற்றும் பேரக்குழந்தைகள்

வருத்தமுடன்...

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், அரிசிபெரியாங்குப்பம்.


999 SITE
ARE YOU LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756


CREATE YOUR PROFILE WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
For AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your Website/App need at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889



SATHLOKHAR
SYNERGYS E&C GLOBAL LIMITED
EPC & Infra Turnkey Contractors
CIVIL | PEB | MEP | INTERIORS | SOLAR
NSE Listed Company
We are looking for enthusiastic and self driven Engineers to join our growing team.
Vacancies
Civil | PEB | MEP Engineers
Qualification
Diploma or BE in Civil, Mechanical & EEE, Any degree / +2 passed
Experience
only 0 to 3 years
Apply Now
hr@sathlokhar.com
Contact: 98408 96529
Build your career with a company committed to construction engineering excellence.



Follow our WhatsApp Channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel



WANTED
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu
Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu
ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com



Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599



தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE



Just499
TOURS & TRAVELS WEBSITE
We Provide Complete Tours & Travels Website Solution
ONLY Rs. 499
Website: just499.com
WhatsApp: 7789951009
Phone: 7789951009
Email: orderjust499@gmail.com



Wanted REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை
PRGI No.TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699



TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009



UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD
உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்
அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971



அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்







## முன்வினை பாவத்தை தீர்க்கும் திருநாகலிங்க பூவின் அற்புதம்!

தமிழ்நாட்டின் சில சிவாலயங்களில் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளில் வளரக்கூடிய அபூர்வமலர் நாகலிங்க பூ. இந்த பூவின் அமைப்பே சிவனை லிங்க வடிவில் நினைவூட்டுகிறது. இது சாதாரண பூ அல்ல சிவபெருமானுக்கு வில்வம் போலவே சிறந்த பவித்திர பூ எனக்கணிக்கப்படுகிறது.
நாகலிங்க பூவை சிவனுக்கு அர்ச்சனை செய்தால் கிடைக்கும் நன்மைகள்:
பூர்வ ஜென்ம பாவங்கள் விலகி, வாழ்க்கையில் திருப்தி ஏற்படும்.
செல்வச் செழிப்பு பெருகி, வீட்டில் சக்தி வாய்ந்த பாசித்தன்மை நிலவும்.

துஷ்ட சக்திகள் விலகும்; வீட்டில் அமைதியும் ஆனந்தமும் நிலைக்கும்.

மன அமைதி, சுவாச கோளாறுகள், நுரையீரல் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும்.
முக்கிய வழிபாட்டு முறைகள்:
நாகலிங்க பூவை புனிதமாக குளித்து, சிவ பஞ்சாட்சர மந்திரம் சொல்லி எடுத்தே சமர்ப்பிக்க வேண்டும்.
காய்ந்த பிறகும் இந்த பூ சக்தி வாய்ந்ததே. எனவே குப்பையில் போடாமல் ஓடும் நீரில் விட வேண்டும்.
ஒவ்வொரு பிரதோஷமும் 21 நாகலிங்க பூவால் சிவனை வழிபட்டு, 21 பேருக்கு அன்னதானம் செய்வதால் பிரதோஷ பூஜையின் பலன் பல மடங்கு உயரும்.



மருத்துவ நன்மைகள்:
இந்த பூவின் வாசனை நுரையீரலுக்கு சுகம் தரும். வாசனை திரவிய தயாரிப்புகளிலும் இது பயன்படுகிறது.

ஆண், பெண் மலட்டுத்தன்மை, பிசிஓடி, கருப்பைச் சிக்கல்கள், வெள்ளைப்படுதல் போன்ற பிரச்சனைகளில் இது வைத்தியரீதியாக பயன்படுகிறது.

புராண ஆதாரம்:
21 மகரிஷிகள் தங்கள் தவசக்திகளை நாகலிங்க பூவிற்கு அர்ப்பணித்துள்ளனர் என புராணங்கள் கூறுகின்றன. எனவே இது ஒரு மிகுந்த தவ பலம் பெற்ற தெய்வீக பூவாகும்.

அறம் வளர்க்கும் வழி:
பாதிக்கப்பட்ட குடும்பத்தில் இந்த பூ வழிபாடு தொடர்ந்து செய்யப்படும் போது, நிச்சயம் நல்வாழ்வு நம்மை அணுகும்.
திருச்சிற்றம்பலம்!
ஒவ்வொரு பிரதோஷத்திலும் இந்த பூவால் சிவனை வழிபடுங்கள் உங்கள் வாழ்க்கை சுத்தம் அடைந்து, இறை அருள் பொங்கி வழிவகுக்கும்.

## உடனடி இட்லி பொடி

பொட்டுக்கடலையை பொறுக்கும் சூடுவரை வறுத்து ஆறவைத்துக் கொள்ளவும்.
மிக்ஸி ஜாரில் பத்து பல் பூண்டு, எட்டு சாம்பார் வெங்காயம், ஒரு துண்டு இஞ்சி, ஒரு கைப்பிடி கறிவேப்பிலை, புதினா இருந்தால் ஒரு கைப்பிடி, இரண்டு ஸ்பூன் வரமிளகாய்த்தூள், தேவையான கல்உப்பு, ஒரு சிட்டிகை பெருங்காயம் இவற்றை பொட்டுக்கடலையுடன் சேர்த்து அரைத்து பொடி செய்து கொள்ளுங்கள்.
பதினைந்து நாட்கள் வரை கெடாது. இட்லி, தோசை, அடை, சப்பாத்தி, பொங்கல் எல்லாவற்றிற்கும் சிறந்த சைடு டிஷ் இது.
சூடான சாதத்தில் நெய்விட்டு பிசைந்து, அப்பளம் தொட்டுக்கொண்டு சாப்பிட சுவையாக இருக்கும். நீங்களும் செஞ்சு அசத்துங்க.




**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்



## விடுகதை

| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |




## ஜோக்ஸ்

சாப்பாடு சரியில்லைன்னு சொன்னதுக்கு ஏண்டி உன் புருஷனை இந்த திட்டு திட்டறே?

பின்ன, அவரே சமைச்சிட்டு சரியில்லைன்னு சொன்னா....?

***********



கபாலி! போலீஸ்காரங்க வீட்டுலேயே உன் கைரிசையைக் காமிச்சியாமே?

பின்ன, கொடுத்த மாமுல் பணத்தை திருப்பி எடுக்க வேணாமா?

***********

போருக்குப் போகும் மன்னர் போர் ஆயுதங்கள் ஒன்றும் எடுக்காமல் போகிறாரே?

எதிரியின் காலில் விழுந்து சரணாகதி அடைவதற்கு போர் ஆயுதங்கள் எதற்கு?

***********

அந்த டிராபிக் போலீஸ்காரரை ஏன் சஸ்பென்ட் செஞ்சாங்க?


ரோடு என்ஜின் டிரைவருக்கு எதிரா "ஓவர் ஸ்பீடு "க்கு கேஸ் எழுதினாராம்!

***********

ஒட்டப்பந்தய வீரர்கள் எல்லோரும் ஏன் வரிசையா நிற்கறாங்க?

ஃபைனான்ஸ் கம்பெனி வேலைக்கு தேர்வு நடக்குது!




**செ.சாய்யாமினி**
ஏழாம் வகுப்பு



**ஸ்ரீ ஹர்ஷினி.**
ஆறாம் வகுப்பு.



**பெ.கவிதரன்**
வகுப்பு-9
அரசு மேல்நிலைப் பள்ளி
செங்கோட்டை
தூத்துக்குடி மாவட்டம்



**சாய் யாமினி**
7ஆம் வகுப்பு

# பாம்பிற்கு பிராமணன் இட்ட சாபம்



ஒரு பெரிய கானகத்தில் மந்தவிஷன் என்கிற பாம்பு ஒன்று, ஒரு நாள் இரையைத் தேடிச் பார்த்தும் ஏதும் கிடைக்காததால் சோகமாக ஓர் ஏரிக்கரைக்கு அருகில் வந்து அமர்ந்தது. அந்த ஏரியில் நிறைய தவளைகள் இருந்தன. இந்தத் தவளைகளை எப்படியாவது தந்திரமாகப் பிடித்து உண்டுவிட வேண்டும் என்று திட்டமிட்டது.

அப்போது அந்தப் பக்கம் வந்த தவளையொன்று ஏன் இங்கு நின்று கொண்டிருக்கிறாய்? என்று கேட்டது. அதற்கு பாம்பு இன்று காலையில் நான் இரைதேடி செல்லும் வழியில் ஒரு தவளை குறுக்கே சென்றது. நான் அதைப் பிடிக்க சென்றேன். அப்போது ஒரு பிராமணன் மகன் புதரின் அருகில் விளையாடிக் கொண்டிருந்தான். நான் தேடிவந்த தவளை என்று நினைத்து, அந்தப் பிராமணனின் பிள்ளையுடைய பாதத்தைக் கடித்து விட்டேன். அவன் இறந்துவிட்டான். அதனால் கோபம் கொண்ட பிராமணன் என்னைச் சபித்துவிட்டான் என்றது பாம்பு.

அந்தப் பிராமணன் நீ, இனிமேல் தவளைகளுக்குச் சேவைசெய்து வாழக் கடவாய் என்று சபித்துவிட்டான். நான் இந்த ஏரிக்கரையில் உள்ள தவளைகளுக்குச் சேவகம் செய்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறியது. அந்தத் தவளை, தவளை ராஜாவிடம் கூறியது. அனைத்துத் தவளைகளும் ஏரியைவிட்டு வெளியே வருமாறு உத்தரவிட்டது. ஏ பாம்பே! அனைத்துத் தவளைகளையும் உன் முதுகின் மீது ஏற்றிக் கொண்டு செல்! என்று கட்டளையிட்டது.

உடனே, பாம்பு மிகவும் பவ்வியமாக தவளைகளைத் தன் முதுகில் சுமந்து சென்றதில் பாம்பு சோர்வாகி விட்டது. தவளை ராஜா பாம்பிடம், ஏன் சோர்வாக இருக்கிறாய்? என்று விசாரித்து. எனக்கு மிகவும் பசிக்கிறது என்றது பாம்பு. இனிமேல் நீ சிறிய தவளைகளைப் பிடித்து உண்டுகொள் என்று உத்தரவிட்டது.

தவளை ராஜா கூறியதைப் போலவே அந்தப் பாம்பு சிறிய தவளைகளைச் சாப்பிட்டுக் கொண்டும் பெரிய தவளைகளைச் சுமந்து கொண்டும் காட்டில் திரிந்தது. அப்போது அந்தக் காட்டிற்குள் நுழைந்த ஒரு புதிய பாம்பு இதைப் பார்த்து ஏன் உன் முதுகில் சுமந்து கொண்டு செல்கிறாய் என்று கேட்டது. அதற்கு அந்தப் பாம்பு, எல்லாம் காரணமாகத்தான்! காலம் கடந்த பின் உனக்கே தெரியும் என்றது.
சில நாட்களில் அந்தப் பாம்பு தவளைகளை ஏமாற்றி அனைத்துத் தவளைகளையும் உண்டு விட்டது. இறுதியாகத் தவளை ராஜாவையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டது.

# தற்பெருமை



ஒரு தடவை முல்லா ஒரு குளக்கரை ஓரமாக நடந்து சென்றார். வழியில் ஒரு கல் தடுக்கி குளத்தில் விழுவதற்குள் அவருக்குப் பின்னால் வந்த மனிதர் பாய்ந்து வந்து முல்லாவைக் குளத்தில் விழாமல் காப்பாற்றினார். முல்லா அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஆனால் முல்லாவைக் காப்பாற்றியவரோ, முல்லாவை எந்த இடத்தில் யாருக்கு நடுவே சந்தித்தாலும் குளத்தில் விழ இருந்த முல்லாவை நான்தான் காப்பாற்றினேன் என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

முல்லா, அவருக்கு தகுந்த நேரத்தில் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தார். முல்லா, ஒரு நாள் அந்த குளக்கரைப் பக்கம் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் பொழுது, அந்த தற்பெருமைக்காரர் குளக்கரையில் யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டிருப்பதை பார்த்தார். திடீரென முல்லா குளத்தினுள் குதித்து விட்டதைப் பார்த்த மக்கள் கூக்குரல் எழுப்பினர். முன்னர் முல்லாவைக் குளத்தில் விழாமல் காப்பாற்றியவரும் அவசர அவசரமாகக் குளத்தில் குதித்தார்.

முல்லாவுக்கு நீந்தத் தெரியும் என்பது அவருக்கு தெரியாது. எனவே முல்லாவை காப்பாற்ற குளத்தில் குதித்தார். முல்லா குளத்தில் நன்றாக நீச்சலடித்து விளையாடிக் கொண்டிருந்தார். முல்லா, தற்பெருமை பேசிய அவரை மக்கள் முன் அறிமுகப்படுத்தி, நீந்த தெரிந்த என்னை இவர்தான் ஒரு தடவை நீரில் மூழ்கி விடாமல் காப்பாற்றி பேருதவி செய்தார் என்றார்.

**A s Govinda rajan**
Kodambakkam Chennai

# விடுகதைகள்

1. சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை? அது என்ன?

2. தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும்?

3. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?

4. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?
5. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்.

6. எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள்?

நீங்கள் யோசித்திருந்த விடைகள் சரிதானா என்பதை சோதித்துக் கொள்ளுங்கள்.

1. தீக்குச்சி
2. தபால் தலை
3. கடல் அலை
4. சாமரம்
5. வெங்காயம்
6. செல்பேசி





# பேராசை பெரும் நஷ்டம்




முல்லா ஒரு நாள் பக்கத்துக் வீட்டுக்காரரிடம் உள்ள பெரிய பானையை கடனாகக் கேட்டார். பக்கத்துக் வீட்டுக்காரர் கொடுக்க மனமில்லாமல் பானையை முல்லாவிடம் கொடுத்தார். அடுத்த நாள் காலையில், உங்கள் பானை கர்ப்பமாக இருந்தது. நேற்று பிரசவம் முடிந்து, உங்கள் பானை ஒரு குட்டி பானையை ஈன்றெடுத்தது எனச்சொல்லிப் பெரிய பானையுடன் சேர்த்து ஒரு குட்டிப் பானையைப் பக்கத்து வீட்டுக்காரரிடம் கொடுத்தார் முல்லா.

பக்கத்து வீட்டுக்காரருக்கு முல்லாவின் செய்கை விநோதமாக இருந்தாலும் வரவை விட வேண்டாமென்று சும்மா இருந்துவிட்டார். அதே போல் மீண்டும் அவரிடமிருந்து ஒரு பெரிய பானையை கடனாக வாங்கி மறுநாள் அதே போல் அந்தப் பெரிய பானையுடன் சேர்த்து, குட்டிப்பானை ஒன்றைக் கொடுத்து அந்த பெரிய பானைக்கு புதிய குழந்தை பிறந்திருக்கிறது என்று கொடுத்தார்.
அதனைப் பெற்றுக்கொண்ட பக்கத்துவீட்டுக்காரர் சந்தோஷம் அடைந்தார். அதற்கடுத்த வாரம் முல்லா பக்கத்து வீட்டுக்காரரிடம், பானையை கடனாகக் கேட்டவுடனேயே மனமுவந்து பானையைக் கொடுத்தார். இம்முறை முல்லா பானையை திருப்பித் தரவில்லை. பக்கத்துவீட்டுக்காரர் முல்லாவிடம் போய் கேட்டார். அதற்கு முல்லா மன்னிக்க வேண்டும். உமது பானை பிரசவத்தின் போது இறந்து விட்டது என்றார். உடனே பக்கத்து வீட்டுக்காரர் என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? என்று கேட்டார்.

அதற்கு முல்லா நான் ஏமாற்றவில்லை. பானை கர்ப்பமாக இருந்து குட்டிப் போட்டது என்று நான் உங்களிடம் குட்டிப்பானையைக் கொடுத்தபோது வாங்கிக் கொண்டீர்கள் அல்லவா? என்றார். அது உண்மை என்றால் இப்போது பானை இறந்தது என்பதும் உண்மை என்றார். பக்கத்து வீட்டுக்காரர் எதுவும் பேசமுடியாமல் அங்கிருந்து சென்றார்.

# பொது அறிவுப் பூங்கா.



1.நான்மணிக் கடிகையின் ஆசிரியர் "விளம்பி நாகனார்."

2). இந்தியாவின் முதல் ராணுவப் பீல்ட் மார்ஷல் H. F.J. மானக்சா.

3). நமது தேசிய கீதத்தை 52 வினாடிக்குள் பாடி முடிக்க வேண்டும்.

4). 1941.4.12ல் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டது.

5). இந்தியா, வங்காளம், சீனா,ஆகிய நாடுகளிடையே ஓடும் நதி பிரமபுத்திரா.

6).ஆகஸ்ட் 29ஆம் நாள் தேசிய விளையாட்டுத் தினம் கொண்டாடப் படுகிறது.

7). 1867 ஆம் ஆண்டு அசாம் மாநிலத்தில், இந்தியாவின் முதல் எண்ணெய்க் கிணறு கண்டுபிடிக்கப்பட்டது.

8). தமிழில் உள்ள சிற்றிலங்கியங்கள் 96.

# பூ என்ன பூ?



மலையிலே பூக்குமாம்
ஊதா நிறக் குறிஞ்சிப் பூ.

நீரிலே பூக்குமாம்
இளஞ்சிவப்பு தாமரைப் பூ.

செடியிலே பூக்குமாம்
வெள்ளை நிற தும்பைப் பூ.

கொடியிலே பூக்குமாம்
நீல நிற சங்குப் பூ.

மரத்திலே பூக்குமாம்
மஞ்சள் நிற கொன்றைப் பூ.

செல்லக் குட்டிப் பாப்பாவின்
அழகு தவழும் முகத்திலே
பூக்கும் பூ என்னவாம்?
முல்லை போன்ற சிரிப்பு.



இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## Open Deaf Slam - 2026 டென்னிஸ் போட்டி இரண்டாம் இடத்தைப் பிடித்த மாற்றுத்திறன் வீரர் பிரித்வ்



ஆஸ்திரேலியாவில் நடந்த Open Deaf Slam - 2026 டென்னிஸ் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்று, இரண்டாம் இடத்தைப் பிடித்த மாற்றுத்திறன் வீரர் பிரித்வ் சேகரை துணை முதல்வர் உதயநிதி நேரில் சந்தித்து வாழ்த்தினார்.

## தாய்மார்களின் கால்களை தொட்டு வணங்கி வாக்கு சேகரித்தார்



கரூரில் களம் இறங்கிய அதிமுக முன்னாள் அமைச்சர் எம்ஆர் விஜயபாஸ்கர், தாய்மார்களின் கால்களை தொட்டு வணங்கி வாக்கு சேகரித்தார்.

## அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம் ஆர்ப்பாட்டம்



தென்காசியில் அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம்



காஞ்சிபுரத்தில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்து கலெக்டர்கலைச்செல்வி, எழிலரசன் எம்எல்ஏ,மேயர் மகாலட்சுமி உணவு பரிமாறினர்.

## கல்லூரி இளங்கலை மாணவர்களுக்கு மடிக்கணினி



கோவை அரசு கலை அறிவியல் கல்லூரி இளங்கலை மாணவர்களுக்கு மடிக்கணினிகளை நேற்று மேயர் ரங்கநாயகி வழங்கினார்.

## துண்டு பிரசுர வாக்கு சேகரிப்பு



அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்ட தேர்தல் வாக்குறுதிகளை மதுரையில் துண்டு பிரசுரமாக முன்னாள் அமைச்சர் உதயகுமார் வெளியிட்டு வாக்கு சேகரித்தார்.

## மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம்



தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடந்த மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

## சாலை மறியல் போராட்டம்



கோவையில் வருவாய்த்துறை அலுவலர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கலெக்டர் அலுவலகம் முன் நேற்று சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.



கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் உதவித்தொகை உயர்வு கோரி மாற்றுத்திறனாளிகள் சாலை மறியல் செய்தனர்.

## பொதுக் கணக்குக் குழு கூட்டம்



தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழு கூட்டம் குழுத்தலைவர் செல்வபெருந்தகை தலைமையில் நடந்தது.

## கருத்துக்கேட்பு கூட்டம்



தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவின் சார்பாக, ராமநாதபுரத்தில் நடைபெற்ற கருத்துக்கேட்பு கூட்டத்தில் பல்வேறு துறையினர் மற்றும் பொதுமக்களைச் சந்தித்து கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



திமுக இளைஞர் அணி அறக்கட்டளை மூலம் கல்வி, மருத்துவம் மற்றும் திமுக முன்னோடிகளுக்குப் பொற்கிழி என பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்படுகிறது. கோவையில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர்கள் கண்ணப்பன், செந்தில்பாலாஜி வழங்கினர்.

## திருவள்ளுவர் ஆண்டு விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசு



கழுகுமலையில் நடந்த திருவள்ளுவர் ஆண்டு விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசு வழங்கப்பட்டது.

## திமுக சார்பில் மக்களிடம் விழிப்புணர்வு



ஒன்றிய அரசின் 2026 நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கு "பூஜ்யம்" வழங்கியதை கண்டித்து கோவையில் 'முட்டை' போண்டா வழங்கி மாநகர் திமுக சார்பில் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## மகாதட்சிணாமூர்த்தி கோவிலில் மகா கும்பாபிஷேகம்



திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோவில் அருகில் உள்ள வடகுருஸ்தலம் என்று அழைக்கப்படும் மகாதட்சிணாமூர்த்தி கோவிலில் மகா கும்பாபிஷேகம் நடந்தது.

## பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கும் விழா





திருவண்ணாமலை, பிப்.11: திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் தொகுதி துரிஞ்சாபுரம் ஒன்றியம் சொரக்கொளத்தூர் ஊராட்சியில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாணவ, மாணவிகளுக்கு மாண்புமிகு சட்டமன்றத் துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் வழங்கினார். உடன் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் V.P அண்ணாமலை அவர்கள், ஒன்றிய செயலாளர் P.ராமஜெயம் அவர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் அனைவரும் மிதிவண்டி வழங்கும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அரும்பாவூர் பெரிய ஏரியில் புனரமைப்புப் பணிகள்



பெரம்பலூர் மாவட்டம் அரும்பாவூர் பெரிய ஏரியில் ரூ.3.41 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்தி, புனரமைப்புப் பணிகள் நடப்பதை கலெக்டர் மிருணாளினி நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

## பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டை



நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை கலெக்டர் லட்சுமி பவ்யா வழங்கினார்.




## பள்ளி மாணவ, மாணவியருக்கு குடற்புழு நீக்க மாத்திரை



கோவை,வெள்ளலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு, பள்ளி மாணவ, மாணவியருக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை கலெக்டர் பவன்குமார் வழங்கினார்.

## மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை



திருப்பத்தூர் கசிநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி, மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரையை கலெக்டர் சிவசவுந்தரவல்லி வழங்கினார்.

## 12ம் வகுப்பு மாணவர்களுக்கு வேதியியல் செய்முறைத் தேர்வு



தேனி மாவட்டம் கொடுவிலார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு நடந்த வேதியியல் செய்முறைத் தேர்வை கலெக்டர் ரஞ்ஜித்சிங் பார்வையிட்டார்.

## பாஜக மகளிர் அணியினர் ஆர்ப்பாட்டம்



காஞ்சிபுரத்தில் பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தியும், திமுக அரசை கண்டித்தும் பாஜக மகளிர் அணியினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் அதிமுகவினரும் பங்கேற்றனர்.

# கஷ்டப்படாமல் கிடைக்கும் எதுவும் நிலைக்காது ரஜினி பட வசனத்தை பேசிய மு.க.ஸ்டாலின்

**சென்னை, பிப்.11:**

படிப்பு என்பது தான் பெண்களுக்கான சிறந்த அணிகலன்.

16 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டம் தமிழ்நாட்டில் மட்டும்தான் உள்ளது.

சென்னைநுங்கம்பாக்கத்தில் உள்ள மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெறும் பாராட்டு விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

* கல்வி தான் பெண்களுக்கு அழகு சேர்க்கும்.* பெண்கள் என்றாலே அழகு தான், அப்படிப்பட்ட பெண்ணுக்கு அறிவு தான் அழகு.

* படிப்பு என்பது தான் பெண்களுக்கான சிறந்த



அணிகலன்.

*தமிழகம் உலக நாடுகளுடன் போட்டியிடும் அளவிற்கு உயர கல்விதான் காரணம்.

* தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்குவதால் தான் உலக நாடுகளுடன் தமிழ்நாடு போட்டியிடுகிறது.

* பெண்களின் வளர்ச்சி ஒரு குடும்பத்தின் வளர்ச்சி மட்டுமல்ல அது நாட்டின் வளர்ச்சி.

* நாட்டிலேயே வறுமை குறைந்த மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளது.

*வெற்றிக்கு கடின உழைப்பு தேவை. கஷ்டப்படாமல் எதுவும் கிடைக்காது. கஷ்டப்படாமல் கிடைக்கும் எதுவும் நிலைக்காது.

* 16 வயதிற்கு மேற்பட்ட சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போடும் திட்டம் தமிழ்நாட்டில் மட்டும்தான் உள்ளது.

* ரூ.14,000 மதிப்புள்ள கருப்பை வாய் தடுப்பூசியை தமிழ்நாடு நமது சிறுமிகளுக்கு இலவசமாக வழங்குகிறது.

* நீங்கள் அனைவரும் எனக்கு மகள்கள் தான்.

* பெற்றோர் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றுங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கடந்த 5 ஆண்டுகளில் 944 கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்பு: அமைச்சர் சி.வி.கணேசன் தகவல்

**சென்னை, பிப்.11:**

கடந்த 5 ஆண்டுகளில் 944 கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு அவர்களுக்கு ரூ.2.56 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் கூறினார்.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிக்கவும், தமிழகத்தை கொத்தடிமை தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கவும், மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வுக் கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது.

இதில், தொழிலாளார் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் கலந்துகொண்டு கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் முன்னிலையில் அரசு அதிகாரிகள் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின உறுதிமொழி



ஏற்றனர். தொடர்ந்து அமைச்சர் கணேசன் பேசியதாவது: கடந்த 5 ஆண்டுகளில், 944 கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு அவர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.2.56 கோடி வழங்கப் பட்டுள்ளது.

மேலும், மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், பல்வேறு துறைகளின் வாயிலாக நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

2030-ம் ஆண்டுக்குள் தமிழகத்தை கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அனைவரும் பாடுபட வேண்டும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.

கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் சிறப்பாக பணியாற்றிய சார்-ஆட்சியர்கள் மற்றும் கோட்டாட்சியர்களுக்கு கேடயமும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த கூட்டத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை செயலர் வீரராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.அ.ராமன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் செ.ஆனந்த், கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், இணை ஆணையர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை: கோவை கோர்ட்டில் இதுவரை 42 பேர் சாட்சியம்

**கோவை, பிப்.11:**

கோவையில் கடந்த ஆண்டு நவம்பர் 2-ந் தேதி காதலருடன் காரில் அமர்ந்து பேசி கொண்டிருந்த கல்லூரி மாணவி, 3 வாலிபர்கள் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

இது தொடர்பாக கருப்பசாமி, காளீஸ்வரன், தவசி ஆகியோரை போலீசார் கைது செய்தனர். இவர்கள் கோவை மத்திய ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு கோவை அனைத்து மகளிர் கோர்ட்டில் நடந்து வருகிறது. நீதிபதி சுந்தர்ராஜன் முன்னிலையில் நடந்து வரும் இந்த வழக்கில் கடந்த வாரம் பாதிக்கப்பட்ட கல்லூரி மாணவி மற்றும் அவரது காதலன் ஆகியோர் 6 மணி நேரம் ரகசிய சாட்சியம் அளித்தனர். இந்த வழக்கில் போலீசார், பொதுமக்கள் என 113 பேர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டு கடந்த 6-ந் தேதி முதல் சாட்சிகள் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் நேற்று இந்த வழக்கில் 15 பேர் சாட்சியம் அளித்தனர். அவர்களிடம் நீதிபதி சுந்தர்ராஜன் விசாரணை நடத்தினார்.

மேலும் இந்த வழக்கில் இதுவரை பாதிக்கப்பட்ட மாணவி, காதலன், போலீசார், பொதுமக்கள் என மொத்தம் 42 பேர் சாட்சியம் அளித்துள்ளனர்.

வழக்கை விரைந்து முடிக்க கோர்ட்டு வேலை நாட்களில் தினமும் சாட்சி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# கைதிகளின் பற்கள் உடைக்கப்பட்ட விவகாரம்: பல்வீந்தர் சிங் ஐபிஎஸ் மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தில் வழக்கு

**சென்னை, பிப்.11:**

குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களின் பற்களை பிடுங்கியது தொடர்பாக தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட குற்றக் குறிப்பாணையை ரத்து செய்யக் கோரி உதவி காவல் கண்காணிப்பாளர் பல்வீர் சிங், மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் காவல் உட்கோட்டத்தில் கடந்த 2023-ம் ஆண்டு உதவி காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிய பல்வீர் சிங், குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களின் பற்களை பிடுங்கியதாக புகார் எழுந்தது.

இந்தபுகாரின் அடிப்படையில் அவர் மீது பதியப்பட்ட நான்கு வழக்குகள் சிபிசிஐடிக்கு மாற்றம் செய்யப்பட்டன. இந்த வழக்குகளின் விசாரணைக்கு உயர் நீதிமன்ற மதுரை அமர்வு இடைக்கால தடை விதித்துள்ளது.

இந்நிலையில், பல்வீர் சிங்குக்கு எதிரான புகார் குறித்து விசாரித்த மூத்த ஐஏஎஸ் அதிகாரி அமுதா தலைமையிலான



உயர்மட்ட குழு, அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மை என அறிக்கை அளித்திருந்தார். இந்த அறிக்கையின் அடிப்படையில், பல்வீர் சிங்குக்கு எதிராக துறை ரீதியான விசாரணை நடத்த, குற்றக் குறிப்பாணை அனுப்பப்பட்டது.

இந்த குற்றக் குறிப்பாணையை ரத்து செய்யக் கோரியும், அதற்கு தடை விதிக்கக் கோரியும், தற்போது ஈரோடு சிறப்பு அதிரடிப்படை உதவி கண்காணிப்பாளராக பணியாற்றும் பல்வீர் சிங், மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், தனக்கு எதிராக விசாரணை நடத்திய அதிகாரியே, தற்போது குற்றக் குறிப்பாணையை பிறப்பித்துள்ளார். தனக்கு எதிரான நான்கு குற்ற வழக்குகளின் விசாரணைக்கு உயர் நீதிமன்ற மதுரை அமர்வு தடை விதித்துள்ள நிலையில், துறை ரீதியான விசாரணை காரணமாக பதவி உயர்வு உள்ளிட்ட பணி பலன்கள் பாதிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

இந்த மனுவை விசாரித்த தீர்ப்பாயம், மனுவுக்கு பதிலளிக்கும்படி மத்திய - மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டு, விசாரணையை மார்ச் 23 ம் தேதிக்கு தள்ளிவைத்தது.

# "அடிப்படை வசதியில்லாத அரசுப் பள்ளிகளால் பறிபோகும் மாணவர்கள் உயிர்'' : இபிஎஸ் கண்டனம்

**சென்னை, பிப்.11:**

திமுக ஆட்சியில், அடிப்படைக்கட்டமைப்போ, சுகாதாரமோ கூட இல்லாத அரசுப்பள்ளிகளின் அவல நிலையால், மாணவர்கள் உயிர் போகும் அளவு சம்பவங்கள் நிகழ்வது என்பது கொடுமையின் உச்சம் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் பள்ளி வளாகத்தில் புகுந்த விஷப்பாம்பு கடித்ததில் மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் , நாமக்கல் மாவட்டம் குமாரமங்கலத்தில் அரசுப்பள்ளியில் விஷப்பூச்சி கடித்து 3-ம் வகுப்பு மாணவி உயிரிழந்ததாகவும், வரும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

அம்மாணவர்களின் தாய், தந்தையர்க்கும் குடும்பத்தினர்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திமுக ஆட்சியில், அடிப்படைக் கட்டமைப்போ, சுகாதாரமோ கூட இல்லாத அரசுப்பள்ளிகளின் அவல நிலையால், மாணவர்கள் உயிர் போகும் அளவு சம்பவங்கள்



நிகழ்வது என்பது கொடுமையின் உச்சம்.

மேற்கூரை இடிந்து விழுந்து விடுமோ?

சுவர் தன் மீது விழுந்துவிடுமோ?

தரமற்ற உணவால் பாதிப்பு வருமோ?

போன்ற அச்சங்களுக்கு நடுவே தான் மாணவர்கள் அரசுப்பள்ளிகளுக்கு செல்ல வேண்டி இருக்கிறது.

இதற்கு நடுவே, கள்ளகுறிச்சி, ரிஷிவந்தியம் அருகே உள்ள கீழத்தேனூர் அரசுப்பள்ளியில் உயர்நிலை நீர்தேக்கத் தொட்டியை மாணவர்களை வைத்து சுத்தம் செய்ததாக வருகின்ற செய்தி மேலும் அதிர்ச்சி அளிக்கின்றது.

இதற்கு கூட ஆட்கள் நியமிக்க வக்கற்ற நிலையில் தான் பள்ளிக்கல்வித் துறை இருக்கிறதா? அரசுப்பள்ளிக்கு மாணவர்கள் படிக்க வந்தார்களா? அல்லது, உங்களுக்கு வேலை செய்ய வந்தார்களா?

மாணவர்களின் பாதுகாப்பை சமரசம் செய்து இப்படிப்பட்ட ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்துவது குற்றம் என்பதை திமுக அரசு உணருமா?

இந்த நிலைக்கு அரசுப் பள்ளிகளைத் தள்ளிவிட்ட திமுக அரசு, "கல்வியிற் சிறந்த தமிழ்நாடு" என ஆடம்பர மேடை அமைத்து, போலியான சுய விளம்பரம் செய்துகொள்வது வெட்கக்கேடானது.

பள்ளிகளின் பராமரிப்பை, சுகாதாரத்தை உறுதிசெய்ய வேண்டிய தனது தலையாய பணியை தூக்கி எறிந்துவிட்டு, ரீல்ஸ் எடுப்பது, கார் ஓட்டுவது, வாக்கிங் போவது என போட்டோஷூட் எடுப்பது மட்டுமே இருக்கும் ஒருவர், Group II போன்ற அதிமுக்கிய தேர்வுகளைக் கூட முறையாக நடத்த தெரியாதவர், தமிழ்நாட்டுக்கு முதல்வராக வாய்த்திருப்பது சாபக்கேடு .

விஷப்பூச்சி, பாம்புக் கடியால் உயிரழந்த பள்ளி மாணவர்களின் குடும்பத்தாருக்கான உரிய நிவாரணம் உடனடியாக வழங்கிட வலியுறுத்துகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

# ஐஜேகே-விலிருந்து லீமாரோஸ் மார்ட்டின் திடீர் விலகல்!

**கோவை, பிப்.11:**

உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் வழங்காததால், ஐ.ஜே.கே கட்சியில் இருந்து விலகுவதாக லீமாரோஸ் மார்ட்டின் அறிவித்துள்ளார். அவர் அதிமுக அல்லது தவெகவில் இணைய திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கோவை மாவட்டம் ஜி.என். மில்ஸ் பகுதியைச் சேர்ந்தவர் பிரபல லாட்டரி தொழிலதிபர் மார்ட்டின். இவரது மனைவி லீமாரோஸ் மார்ட்டின். இவர் ஐ.ஜே.கே எனப்படும் இந்திய ஜனநாயக கட்சியில், இணை பொதுச் செயலாளராக பணியாற்றி வந்தார். கடந்த சில மாதங்களாகவே கட்சி தலைமை மீது அதிருப்தியில் இருந்து வரும் லீமாரோஸ் மார்ட்டின் கட்சியை விட்டு வெளியேறி மாற்றுக் கட்சியில் இணையக்கூடும் என பேச்சுகள் எழுந்து வந்தன.

அதேபோல், சில வாரங்களுக்கு முன்னர், அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியை, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியை லீமா ரோஸ் மார்ட்டின் சந்தித்துப் பேசினார். அது தொடர்பான புகைப் படங்கள் வெளியான போது, அவர் அதிமுகவில் இணைந்து விட்டார் என தகவல்கள் பரவின.

ஆனால், "அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியை சந்தித்தது மரியாதை நிமித்தமான சந்திப்பு' எனக்கூறி அவ்விவகாரத்துக்கு தற்காலிக முற்றுப்புள்ளி வைத்தார் லீமாரோஸ் மார்ட்டின்.

இந்நிலையில், கட்சி தலைமை மீது அதிருப்தி அதிகரித்ததால், ஐ.ஜே.கே. கட்சியில் இருந்து விலகுவதாக லீமாரோஸ் மார்ட்டின் இன்று (பிப்.10) அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: "இன்று நான் எடுத்திருக்கும் ஒரு முக்கிய முடிவை அனைவரிடமும் அறிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். 2012ம் ஆண்டு துவங்கி இன்று வரை ஏறக்குறைய 14 ஆண்டு காலமாக இந்திய ஜனநாயக கட்சியில் பெரும் அர்ப்பணிப்போடு பயணித்து வந்திருக்கிறேன். 2012-ல் துணைப் பொதுச் செயலாளர் ஆகவும், 2019-ம் ஆண்டு முதல் இணைப் பொதுச் செயலாளராக இருந்து



வருகிறேன். மேம்போக்காக அல்லாமல் களத்தில் இறங்கி கட்சியின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு இருக்கிறேன். நம் சமூகத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் நலனுக்காகவும், உரிமைக்காகவும் வலிமையாக குரல் கொடுத்துள்ளேன். சமூகத்தில் நடக்கும் அநீதிகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளேன். எனது மேற்பார்வையில் இந்திய ஜனநாயக கட்சியை கட்டமைப்பு ரீதியாக தமிழ்நாடு முழுவதும் வலுப்படுத்தி இருக்கிறேன்.

தமிழ்நாடு மட்டுமின்றி அந்தமான் உள்ளிட்ட மாநிலங்களிலும் எனது தலைமையில் பல்லாயிரக்கணக்கான புதிய உறுப்பினர்களை கட்சியில் இணைத்துள்ளேன். தமிழ்நாட்டில் நான் செல்லாத கிராமமே இல்லாத அளவில் அனைத்து இடங்களுக்கும் பயணித்திருக்கிறேன். இது மட்டுமல்லாமல் தேர்தல் காலங்களின் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், ஐ.ஜே.கே வேட்பாளர் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்காக தொடர் பரப்புரைகளில் ஈடுபட்டு இருக்கிறேன். கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தல் பரப்புரைக்காக ஒரே நாளில் 67 கிராமங்களுக்கு சென்று பரப்புரையில் ஈடுபட்டது எனது தனிப்பட்ட சாதனையாக நான் கருதுகிறேன்.

இவ்வாறு நேரம் காலம் பார்க்காமல் நான் உழைத்த கட்சி என் உழைப்பை அங்கீகரிக்கவில்லை என்பதும், சமீப காலமாக எனது உழைப்பை உதாசீனப்படுத்தியதும் எனக்கு மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

அதேபோன்று பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும், பொது வாழ்வில் துணிச்சலோடும் தைரியத்துடனும் செயல்பட வேண்டும் என்று நான் செல்லும் இடம் எங்கிலும் சந்திக்கும் பெண்களை ஊக்கப்படுத்தி வந்திருக்கிறேன். இதுபோன்ற சூழலில் இக்கட்சி ஒரு பெண்ணின் உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரத்தை வழங்காதது பெரும் ஏமாற்றமே.

கட்சியின் தொண்டர்களான, நமது சமூக சொந்தங்களை விட்டு பிரிய மனமில்லாமல் என்னுடைய அதிருப்தியை வெளிப்படுத்தி 8 மாத காலம் காத்திருந்தேன். கட்சித் தலைமையில் இருந்து எந்த ஒரு முறையான பதில் வராத காரணத்தினாலும், சில சமீப கால கசப்பான அனுபவங்களின் அடிப்படையிலும் இந்திய ஜனநாயக கட்சியில் இருந்து விலகும் முடிவை எடுக்க நான் தள்ளப்பட்டுள்ளேன். இந்திய ஜனநாயக கட்சியில் இருந்து விலகினாலும் எனது அரசியல் பயணமும், மக்கள் சேவையும் தொடரும் என தெரிவித்துக் கொள்கிறேன்" இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அதிமுக அல்லது தவெகவில் இணைய திட்டம்: ஐ.ஜே.கே-வில் இருந்து விலகிய லீமாரோஸ் மார்ட்டின் அதிமுக அல்லது தவெக கட்சியில் இணைய திட்டமிட்டிருப்பதாக அவரது ஆதரவாளர்கள் தரப்பில் கூறப்படுகிறது. 2 வாரம் கழித்து மாற்றுக் கட்சியில் இணைவது குறித்து செய்தியாளர்களை சந்திப்பதாகவும் லீமாரோஸ் மார்ட்டின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற லீமாரோஸ் மார்ட்டின் திட்டமிட்டுள்ளார்.

எனவே, அதற்கான சரியான பாதையாக அதிமுக அல்லது தவெக இருக்கும் என அவர் கருதுகிறார். அதிமுக கோவையில் வாக்குவங்கி பலமாக உள்ள கட்சியாகும். எனவே, அதிமுகவில் இணைந்து கோவையில் ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிட அவர் ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. அதே சமயம், இவரது மருமகன் ஆதவ் அர்ஜூன தவெகவில் முக்கிய பொறுப்பில் இருப்பதால், அங்கு சேரலாமா எனவும் அவர் ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது.

# டெல்லியில் பிரதமர் மோடியுடன் செசல்ஸ் ஜனாதிபதி சந்திப்பு



**புது டெல்லி, பிப்.11:**

கிழக்கு ஆப்பிரிக்காவில் இந்திய பெருங்கடலில் அமைந்திருக்கும் 115 தீவுக்கூட்டங்களை உள்ளடக்கிய குடியரசு நாடு செசல்ஸ். இந்நாட்டில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் தேர்தல் நடைபெற்றது. இதில் பேட்ரிக் ஹெர்மைனி வெற்றி பெற்று நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.

இதனிடையே, இந்தியா , செசல்ஸ் இருநாடுகளுக்கு இடையே தூதரக உறவு ஏற்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று பேட்ரிக் ஹெர்மைனி இந்தியா வந்துள்ளார்.

6 நாட்கள் பயணமாக பேட்ரிக் ஹெர்மைனி கடந்த 5ம் தேதி இந்தியா வந்தார். விமானம் மூலம் சென்னை வந்த பேட்ரிக் ஹெர்மைனி சென்னை, மும்பையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். இதனை தொடர்ந்து பேட்ரிக் ஹெர்மைனி டெல்லி சென்றார்.

இந்நிலையில், டெல்லி சென்ற செசல்ஸ் ஜனாதிபதி பேட்ரிக் ஹெர்மைனி நேற்று பிரதமர் மோடியை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

# மக்களவை சபாநாயகருடன் ராகுல் காந்தி சந்திப்பு

**புது டெல்லி, பிப்.11:**



2026-27ம் நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட் கடந்த 1ம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய பட்ஜெட் தாக்கலை தொடர்ந்து ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதம் நடந்து வருகிறது.

இதில், பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி, காங்கிரஸ், திமுக, திரிணமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவை விதிகளை மீறி அமளியில் ஈடுபட்டதாக காங்கிரஸ் எம்.பி.க்கள் 8 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். மேலும், ராணுவ முன்னாள் தளபதி நரவானேவின் புத்தகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பேச ராகுல் காந்திக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவரும் காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி நேற்று சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது காங்கிரஸ் எம்.பி.க்கள் நாடாளுமன்ற அவை நடவடிக்கையில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டது தொடர்பாகவும், விவாதத்தில் தன்னை பேச அனுமதிக்க வேண்டும் என்றும் சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் ராகுல் காந்தி கோரிக்கை விடுத்தார்.

இதனிடையே, எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் மக்களவை நேற்று முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தெலுங்கானாவில் மாமியாரை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த மருமகன்




**கர்னூல், பிப்.11:** தெலுங்கானா மாநிலம் நாகர் கர்னூல் மாவட்டம் கல்வகுர்த்தி அடுத்த ரகுபதி பேட்டை சேர்ந்த பெண் ஒருவர் தனது மகளை திம்மாஜிபேட்டியை சேர்ந்த ஒருவருக்கு திருமணம் செய்து வைத்தார். திருமணத்திற்கு பிறகு அவரது மருமகன் மதுபோதைக்கு அடிமையாகி அவரது மகளை துன்புறுத்தி வந்தார். இதனால் கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது.

இளம்பெண் கணவரை பிரிந்து விட்டு உறவினர் வீட்டிற்கு சென்று விட்டார். மனைவி தன்னை விட்டுப் பிரிந்து சென்றதற்கு மாமியார் தான் காரணம் என வாலிபர் எண்ணினார். நேற்று முன்தினம் இரவு மாமியார் தனியாக வீட்டில் தூங்கிக் கொண்டு இருந்தார். மாமியார் வீட்டுக்கு சென்ற மருமகன் அவரை வன்கொடுமை செய்து கொடூரமாக அடித்து கொலை செய்து விட்டு தப்பி சென்றார்.

நேற்று காலை ரத்த வெள்ளத்தில் பெண் இறந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த அக்கம் பக்கத்தினர் இதுகுறித்து உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

இறந்து போனவரின் 2-வது மகள் இதுகுறித்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து இறந்தவரின் பிணத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக கல்வகுர்த்தி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து தலைமறைவாக உள்ள வாலிபரை தேடிப் பார்க்கின்றனர்.

# "ரயில்வே திட்டங்கள் தாமதமாக தமிழக அரசே காரணம்"

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதில்

**புதுடெல்லி, பிப்.11-**

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது என தெரிவித்துள்ள மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், தமிழக அரசின் ஒத்துழைப்பின்மையே ரயில்வே திட்டங்கள் தாமதமாவதற்குக் காரணம் என குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்கக்கோரி முதல்வர் மு.க. ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதி இருந்தார். இதற்கு பதில் அளிக்கும் வகையில் அஸ்வினி வைஷ்ணவ் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மத்திய அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது. 2014ம் ஆண்டில் இருந்து மாநிலத்துக்கான பட்ஜெட் ஒதுக்கீடு 8.5 மடங்குக்கு மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2026-27 நிதி ஆண்டில் இது ரூ. 7,611 கோடியாக உயரும்.

ஒத்துழைப்பு இல்லாமல் வளர்ச்சி சாத்தியமில்லை. தற்போது நடைபெற்று வரும் ரயில்வே திட்டங்களுக்குத் தேவையான நிலத்தில் 24% மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதாவது, தேவைப்படும் 4,326 ஹெக்டேர் நிலத்தில் 1,052 ஹெக்டேர் நிலம் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் தமிழக அரசிடம் நிலுவையில் உள்ளதால் பல முக்கிய திட்டங்கள் தாமதமாகி வருகின்றன.



நிதிப் பற்றாக்குறையால் ரயில்வே திட்டங்கள் முடங்கவில்லை. அவ்வாறு கூறுவது ஆதாரமற்றது. பல திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதே முக்கிய பிரச்சினையாக உள்ளது. மதுரையில் இருந்து அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடி வரையிலான (144 கி.மீ.) புதிய ரயில்வே இருப்புப் பாதை திட்டத்துக்கு 91% நிலம் கையகப்படுத்தும் பணி நிலுவையில் உள்ளது. இதேபோல், திண்டிவனத்தில் இருந்து செஞ்சி வழியாக திருவண்ணாமலைக்கான 71.33 கி.மீ. நீளம் கொண்ட புதிய ரயில்வே இருப்புப்பாதை திட்டத்துக்கு 86% நிலம் கையகப்படுத்தும் பணி நிலுவையில் உள்ளது.

ராமேஸ்வரத்தில் இருந்து தனுஷ்கோடி வரை புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டம் கடந்த 2019ல் பிரதமர் நரேந்திர மோடியால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டின் ஒத்துழைப்பின்மை காரணமாக இந்த திட்டத்தில் நிலம் கையகப்படுத்தும் பணி இன்னும் தொடங்கப்படவே இல்லை.

இத்தகைய சவால்கள் உள்ளபோதிலும், மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு பல புதிய வழித்தடங்கள், இரட்டிப்புப் பாதைகள், 3வது மற்றும் 4-வது வழித்தடங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாட்டின் பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சியை ஆதரிப்பதற்காக மேலும் திறன் விரிவாக்கத்துக்கான வரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் மொத்தம் 77 ரயில் நிலையங்கள் முழுமையாக மறுவடிவமை செய்யப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில், 18 நிலையங்களுக்கான பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன. 2014 முதல் தோராயமாக 1,350 கி.மீ. ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் ரயில்வே 97% மின்மயமாக்கலை எட்டியுள்ளது. 2014 முதல் 2,386 கி.மீ. ரயில் பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நவீன ரயில்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு மேம்பட்ட, மலிவான ரயில் பயணத்தை உறுதி செய்கின்றன. வந்தே பாரத் எக்ஸ்பிரஸின் 9 ஜோடி சேவைகள் தற்போது இயக்கத்தில் உள்ளன. அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸின் 9 ஜோடி சேவைகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன.

மத்திய அரசு தயாராகவும் உறுதியாகவும் உள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு வேகமான உள்கட்டமைப்பு வளர்ச்சியை வழங்குவதற்கு மாநில அரசின் சரியான நேரத்திலான ஆதரவு அத்தியாவசியமாகிறது" என தெரிவித்துள்ளார்.

# மணிப்பூரில் மீண்டும் கலவரம்: வீடுகளுக்கு தீ வைப்பு



**இம்பால், பிப்.11:**

மணிப்பூரின் உக்ருல் மாவட்டத்தில் நேற்று ஏற்பட்ட வன்முறையில் வீடுகளும் அரசு குடியிருப்புகளும் தீவைத்து எரிக்கப்பட்டன. வன்முறை காரணமாக பலர் அப்பகுதியை விட்டு வெளியேறினர்.

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் ஓராண்டு கால குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு பிறகு முதல்வர் யும்னம் கெம்சந்த் சிங் தலைமையில் புதிய அரசு கடந்த 4-ம் தேதி பதவியேற்றது. எனினும் மாநிலத்தில் மறுநாளே வன்முறை வெடித்தது. குகி சமூகத்தினர் அதிகம் வசிக்கும் சுராசந்த்பூர் மாவட்டம் முழுவதும் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

இந்நிலையில் மணிப்பூரின் உக்ருல் மாவட்டம் லிட்டன் பஜார் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வன்முறை வெடித்தது. இதில் பல வீடுகளுக்கு வன்முறை கும்பல் தீ வைத்தது. இதையடுத்து அருகருகே உள்ள லிட்டன், மாங்கோட் கிராமங்களில் டாங்குல் நாகா மற்றும் குகி சமூகத்தினர் இடையே நேற்று மோதல் ஏற்பட்டது. அப்போது ஏற்பட்ட வன்முறையில் 25 வீடுகளும் 4 அரசு குடியிருப்புகளும் தீவைத்து எரிக்கப்பட்டன. வன்முறை மோதல்களை தொடர்ந்து பலர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர்.

இப்பகுதியில் தொடர்ந்து பதற்றம் நீடிப்பதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குகி சமூகத்தை சேர்ந்த சைக்கூல் எம்எல்ஏ கிம்னியோ ஹாவ்கிப், டாங்குல் நாகா சமூகத்தைச் சேர்ந்த உக்ருல் எம்எல்ஏ ராம் முய்வா ஆகிய இருவரும் நேற்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டனர்.

# உ.பி.யில் தொழிலதிபரின் மகன் ஓட்டிய அதிவேக சொகுசு கார் மோதி 6 பேர் காயம்



**கான்பூர், பிப்.11:** உ.பி.யைச் சேர்ந்த பிரபல புகையிலை வணிகர் கே.கே.மிஸ்ராவின் மகன் ஷிவம் மிஸ்ரா. இவர் நேற்று முன்தினம் கான்பூரில் உள்ள விஐபி சாலையில் தனது லம்போர்கினி ரெவுல்டோ சொகுசு காரில் அதிவேகமாக வந்துள்ளார்.

அப்போது கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நின்றிருந்த மக்கள் மற்றும் வாகனங்கள் மீது மோதியது. முதலில் அந்த கார், ஒரு ஆட்டோ மீது மோதி, பிறகு ஒரு பைக் மீது மோதியுள்ளது. மேலும் மோட்டார் பைக்கை சிறிது தூரம் இழுத்துச் சென்று ஒரு மின் கம்பம் மீது மோதி நின்றது. இதில் மோட்டார் பைக்கில் வந்த தவுபிக் என்பவர் 10 அடி உயரத்துக்கு தூக்கி வீசப்பட்டு, பலத்த காயம் அடைந்தார். மேலும் 5 பேருக்கு எலும்பு முறிவும் சிராய்ப்புகளும் ஏற்பட்டுள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

ஷிவம், மதுபோதையில் இந்த விபத்தை ஏற்படுத்தியதாகவும் விபத்துக்கு பிறகு அவர் காரில் தப்ப முயன்றதாகவும் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் கார் கண்ணாடியை உடைத்து ஷிவத்தை வெளியே இழுத்து தாக்க முயன்றனர். இதை பின்னால் மற்றொரு காரில் வந்த ஷிவத்தின் பவுன்சர்கள் தடுக்க முயன்றனர். இறுதியில் போலீஸார் வந்து ஷிவத்தை மீட்டு அவரையும் விபத்தில் காயம் அடைந்தவர்களையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் காரை பறிமுதல் செய்தனர். வடமேற்கு டெல்லியின் ரோகிணியில் பதிவு செய்யப்பட்ட இந்த காரின் விலை ரூ.10 கோடி. ஷிவத்தின் தந்தை கே.கே.மிஸ்ராவின் அலுவலகம் மற்றும் வீட்டில் வருமான வரித்துறை சோதனை கடந்த 2021 பிப்ரவரியில் நடைபெற்றது. இந்த சோதனையில் கே.கே.மிஸ்ரா ரூ.100 கோடி வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

# "பணி நிமித்தமாகவே என் மனைவி பாகிஸ்தான் சென்றார்" - கவுரவ் கோகோய் விளக்கம்

**புதுடெல்லி, பிப்.11:**

அசாம் மாநில காங்கிரஸ் தலைவர் கவுரவ் கோகோய் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது: கடந்த 2013ம் ஆண்டு என் மனைவி எலிசபெத் கோல்பர்ன் பணி நிமித்தமாக பாகிஸ்தான் சென்றிருந்தார். அவருடன் நானும் சென்றேன். அப்போது 10 நாட்கள் அங்கு தங்கி இருந்தோம்.



இது தொடர்பாக விசாரிக்க அசாம் அரசு சிறப்பு விசாரணைக் குழு (எஸ்ஐடி) அமைத்தது. அக்குழு என்னிடம் ஒரு போதும் விசாரணை நடத்தவில்லை. மேலும் எஸ்ஐடி அறிக்கை சமர்ப்பித்து 6 மாதம் ஆகியும் இதுவரை முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா அமைதியாக இருந்தார். ஏனெனில் எங்களுக்கு எதிராக எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் இப்போது இந்த விவகாரத்தில் பொய்யான குற்றச்சாட்டுகளைக் கூறி, மத்திய புலனாய்வு அமைப்பு விசாரிக்க வேண்டும் என கோருகிறார். தவறான தகவலை பரப்பும் அவர் மீது உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா குடும்பத்தினரிடம் 12 ஆயிரம் பிகா நிலம் இருப்பதை காங்கிரஸ் கட்சி அம்பலப்படுத்தியது. இதனால்தான், முதல்வர் சர்மா எங்கள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி உள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மணிப்பூரில் மீண்டும் மோதல்: 163 தடை உத்தரவு பிறப்பிப்பு

**மணிலா, பிப்.11:**

பா.ஜனதாவின் பைரேன்சிங் தலைமையிலான ஆட்சி நடந்து வந்த மணிப்பூரில் கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் மெய்தி, குகி இனத்தினருக்கு இடையே பயங்கர கலவரம் வெடித்தது. இதில் 260-க்கு மேற்பட்டோர் பலியானார்கள். இதனால் பைரேன்சிங் பதவி விலகினார்.

இதையடுத்து மணிப்பூரில் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. 6 மாதங்களுக்கு பிறகு மீண்டும் ஜனாதிபதி ஆட்சி நீட்டிக்கப்பட்டது. இந்த 2-வது ஜனாதிபதி ஆட்சிக்காலம் 12-ந் தேதியுடன் முடிவடைகிறது.

இந்த நிலையில் மணிப்பூரில் மீண்டும் அரசை அமைக்க பா.ஜனதா விரும்பியது. அதன்படி மாநிலத்தில் உள்ள பா.ஜனதா எம்.எல்.ஏ.க்களுடன் டெல்லியில் ஆலோசனை நடந்தது.

இதில், சட்டசபை பா.ஜனதா கட்சி தலைவராக (முதல்-மந்திரி) கெம்சந்த் சிங் தேர்வு செய்யப்பட்டார். மாநிலத்தின் முன்னாள் மந்திரியான அவர், மெய்தி இனத்தை சேர்ந்தவர். அத்துடன் 'குகி' பழங்குடி இனத்தை சேர்ந்த முன்னாள் பெண் மந்திரி நெம்சா கிப்ஜென், துணை முதல்-மந்திரியாக தேர்வானார்.

புதிய அரசு அமைப்பதற்கு வசதியாக மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி வாபஸ் பெறப்பட்டது. பின்னர் தேசிய ஜனநாயக கூட்டணி எம்.எல்.ஏ.க்கள் அடங்கிய குழு ஒன்றுடன் லோக்பவன் சென்று மாநில கவர்னர் அஜய் குமார் பல்லாவை கெம்சந்த் சிங் சந்தித்தார். அப்போது மாநிலத்தில் ஆட்சியமைக்க அவர் உரிமை கோரினார்.

பின்னர் தலைநகர் இம்பாலில் உள்ள லோக்பவனில் புதிய அரசின் பத வியேற்பு நிகழ்ச்சி நடந்தது. இதில் மாநில முதல்-மந்திரியாக கெம்சந்த் சிங்குக்கு, கவர்னர் அஜய் குமார் பல்லா பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். அவரை தொடர்ந்து பா.ஜனதா எம்.எல்.ஏ. நெம்சா கிப்ஜென், நாகா மக்கள் முன்னணி எம்.எல்.ஏ. டிகோ ஆகியோர் துணை முதல்-மந்திரிகளாக பதவியேற்றனர். இதில் நெம்சா, டெல்லியில் இருந்து காணொலி மூலம் பதவியேற்றார். இவர்களை தவிர மேலும் 2 எம்.எல்.ஏ.க்கள் மந்திரிகளாக பதவியேற்றனர்.

இந்த சூழலில் தான் , குகி சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்து எடுக்கப்பட்டத்தற்கு அதே சமூகத்தை சேர்ந்த குகி அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. மேலும், துணை முதல்-மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள நெம்ச்சா கிப்ஜென் புகைப்படத்துடன், "துரோகி" என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியபடி குக்கி சமூகத்தினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனையடுத்து, துய்போங் பகுதியில் போராட்டக்காரர்கள் சாலை மறியலில் ஈடுபடுவது, டயர்களை எரித்து போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இம்பால், மணிப்பூர் மாநிலம் உக்ருல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை இரண்டு பழங்குடியின குழுக்கள் கடுமையான கல் வீச்சில் ஈடுபட்டதால், அங்கு பதற்றம் அதிகரித்து உள்ளது. லிட்டன் கிராமத்தில் மோதிக்கொண்ட குழுக்களை கலைக்க பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசி அப்புறப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், உக்ருல் மாவட்ட லிட்டன் கிராமத்தில் தங்குல் மற்றும் குகி சமூகத்தினரிடையே அமைதி மற்றும் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படும் என்ற அச்சம் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அதே நேரத்தில், இதுபோன்ற இடையூறுகள் அமைதிக்கு கடுமையான இடையூறுகளை ஏற்படுத்தக்கூடும், பொது அமைதிக்கு ஆபத்தை விளைவிக்கும், மேலும் மனித உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும்" என்று கருதி உக்ருல் மாவட்ட நீதிபதி ஆசிஷ் தாஸ், 2023 ஆம் ஆண்டு BNSS இன் பிரிவு 163 இன் துணைப் பிரிவு 1 இன் கீழ் 63 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூரில் மீண்டும் பாஜக ஆட்சி பொறுப்பேற்ற வெறும் நான்கு நாட்களே ஆன நிலையில், மீண்டும் வன்முறை வெடித்துள்ளது.

# பா.ம.க விவகாரத்தில் ஆவணங்களின்படி தேர்தல் ஆணையம் முடிவெடுத்ததற்கு தடையில்லை: தில்லி உயர்நீதிமன்றம்

**புதுதில்லி, பிப்.11:** பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவா யாா? என்ற உள்கட்சி விவகாரத்தில் தங்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தோ்தல் ஆணையம் முடிவு எடுத்ததற்கு எந்த தடையும் இல்லை என தில்லி உயா்நீதிமன்றம் திங்கள்கிழமை கூறியது

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவா் தான்தான் என அக்கட்சியின் நிறுவனா் மருத்துவா் ராமதாஸ் ஒருபுறமும்,அவரது மகன் மருத்துவா் அன்புமணி மறுபுறமும் கூறி வருகின்றனா்.

இந்நிலையில் தோ்தல் ஆணையம் கடந்த ஆண்டு நவம்பா் 27ம் தேதி பா.ம.க நிறுவனா் ராமதாஸ் க்கு எழுதிய கடிதத்தில் கூறியதாவது:

தோ்தல் ஆணையத்தின் பதிவுகளின்படி, பட்டாளி மக்கள் கட்சியின் நிா்வாகிகளின் பதவிக்காலம் 01.08.2026 வரை செல்லுபடியாகும், மேலும் டாக்டா அன்புமணி ராமதாஸ் கட்சியின் தலைவராக உள்ளாா்.

நீங்கள் (பா.ம.க நிறுவனா் டாக்டா் எஸ்.ராமதாஸ்) கட்சியின் தலைவா் என்று கூறிக் கொண்டால், கட்சியின் நிா்வாகிகள் தொடா்பான பிரச்சினையைத் தீா்க்க பொருத்தமான கட்சி மன்றம் அல்லது தகுதிவாய்ந்த நீதிமன்றத்தை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறீா்கள் என தோ்தல் ஆணையம் நவம்பா 27ம் தேதி பாமக நிறுவனா் ராமதாஸ் க்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தது.

இதையடுத்து பாமக நிறுவனரான மருத்துவா் ராமதாஸ் தில்லி உயா்நீதிமன்றத்தை நாடினாா்

அந்த வழக்கில் கடந்த ஆண்டு டிசம்பா் நான்காம் தேதி உத்தரவு பிறப்பித்த தில்லி உயா்நீதிமன்ற நீதிபதி மினி புஷ்கானா, இந்த விவகாரத்தில் சிவில் நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும்,தோ்தல் ஆணையம் பாமக தலைவராக யாரையும் அங்கீகரிக்க முடியாது என உத்தரவிட்டாா

இந்நிலையில் இந்த உத்தரவில் திருத்தம் செய்யக்கோரி தோ்தல் ஆணையம் தில்லி உயா்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது

அந்த மனு நீதிபதி மினி புஷ்கானா முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது

அப்போது தோ்தல் ஆணையம் கூறியதாவது:ஒரு கட்சியிடம் இருந்து வரும் ஆவணங்கள்,கடிதங்கள் அடிப்படையில் அக்கட்சியின் தலைவா், செயலாளா் மற்றும் நிா்வாகிகள் யாா் என்பது தோ்தல் ஆணையத்தால் பதிவு செய்யப்படும்.அதன் பிறகு அந்த கட்சியில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் தொடா்பாக வரும் கடிதங்கள் அடிப்படையில் அதனை தோ்தல் ஆணையம் பதிவு செய்து கொள்ளும்.

அந்த வகையில் பாமகவிற்குள் உட்கட்சி பிரச்சனை எழுவதற்கு முன்பாகவும், இவ்விவகாரம் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு முன்பாகவும் வந்த கடிதங்களின் அடிப்படையில் பட்டாளி மக்கள் கட்சியின் நிா்வாகிகளின் பதவிக்காலம் 01.08.2026 வரை செல்லுபடியாகும், மேலும் டாக்டா அன்புமணி ராமதாஸ் கட்சியின் தலைவராக உள்ளாா என தோ்தல் ஆணையம் அங்கீகரித்தது

தோ்தல் ஆணையத்திடம் உள்ள ஆவணங்களின்படி அவ்வாறு பதிவு செய்ய சட்டத்தில் இடம் உள்ளது இதனை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் பதிவு செய்து திருத்தம் செய்ய வேண்டும் என தோ்தல் ஆணையம் வாதிட்டது

அதற்கு நீதிபதி மினி புஷ்கானா, நீங்கள் உங்களிடம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் முடிவுகளை எடுத்தால் அதனை நான் தடுக்கவில்லை.

உங்களிடம் உள்ள பதிவுகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நீங்கள் தாராளமாக முடிவெடுக்கலாம் அதற்கு எந்த தடையும் இல்லை என தெரிவித்தாா

இதையடுத்து தோ்தல் ஆணையத்தின் வாதம் பதிவு செய்து கொள்ளப்படுவதாக கூறி வழக்கினை நீதிபதி மினி புஷ்கானா முடித்து வைத்தாா். தோ்தல் ஆணையத்திற்கு ஆட்சேபம் தெரிவித்த பா.ம.க நிறுவனா மருத்துவா ராமதாஸ் தரப்பு வாதத்தையும் தில்லி உயா்நீதிமன்றம் பதிவு செய்துகொண்டது.

# பிறந்து ஒரு மணி நேரமே ஆன குழந்தை தீயில் கருகி உயிரிழந்த சோகம்!

**கான்பூர், பிப்.11:** உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் தனியார் மருத்துவமனையில் பிறந்து ஒரு மணி நேரமே ஆன பெண் குழந்தை ஒன்று தீயில் கருகி உயிரிழந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கான்பூரில் உள்ள பக்கர்கஞ்சில் வசிக்கும் அருண் நிஷாத் மற்றும் அவரது மனைவி பிட்டு ஆகியோருக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

பிறந்த குழந்தையின் உடல் வெப்பநிலையைச் சரியாகப் பராமரிக்க உதவும் கருவியில் குழந்தை வைக்கப்பட்டது. அப்போது மின் கசிவு ஏற்பட்டு தீ பிடித்ததில், அதிலிருந்த குழந்தை தீ காயம் ஏற்பட்டு உயிரிழந்திருக்கிறது. இந்த சம்பவத்தைப் பல மணி நேரம் கழித்தே பெற்றோருக்குத் தெரியப்படுத்தியுள்ளது மருத்துவமனை நிர்வாகம். இதனால் ஆத்திரமடைந்த உறவினர்கள் மருத்துவமனைக்கு வெளியே கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.இதையடுத்து இந்த சம்பவத்தை குறித்து விசாரிக்க 3 பேர் கொண்ட குழு அமைத்து காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது.

# சென்னையில் ஆட்டோ, கால்டாக்சி டிரைவர்கள் வேலை நிறுத்தம்



**சென்னை, பிப்.11:** தமிழ்நாடு ஆட்டோ-கால் டாக்சி ஓட்டுனர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் வேலை நிறுத்த போராட்டம் இன்று நடைபெற்றது.

ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உயர்த்த வேண்டும், டூரிஸ்ட் கேப் , மேக்ஸி கேப் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஜிபிஎஸ் கருவியை அரசு செலவில் பொருத்த வேண்டும், ஓலா, உபர், ராபிடோ, போர்ட்டர் போன்ற வாகனங்களை அக்ரிகேட்டர் சட்டத்தின் கீழ் முறைப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த வேலை நிறுத்தம் நடந்தது.

சென்னையில் 30 ஆயிரம் பேர் இந்த வேலை நிறுத்தத் தில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து கூட்டமைப்பு சங்கங்களின் தலைவர் ஜாகிர் உசேன் கூறியதாவது:-

13 ஆண்டுகளாக மீட்டர் கட்டணத்தை உயர்த்தாமல் அரசு கிடப்பில் போட்டுள்ளது. இதனால் ஆட்டோ தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. 2013-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மாற்றி அமைக்காமல் இருப்பது வேதனையானது.

எனவே கட்டணத்தை மாற்றி புதிய கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள வாகனங்களை முறைப்படுத்த வேண்டும் என்பதே எங்களின் பிரதான கோரிக்கையாகும்.

இவற்றை உடனடியாக இந்த அரசு செய்ய வேண்டும் என வலியுறுத்தி பொது வேலை நிறுத்தம் நடக்கிறது. மாலை 4 மணி அளவில் கிண்டியில் உள்ள போக்குவரத்து ஆணையர் அலுவலகம் முன்பு காத்திருப்பு போராட்டம் நடக்கிறது. இதில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொள்கிறார்கள் என்றார்.

# டிஎன்பிஎஸ்சி தேர்வு ரத்தானதற்கு நிர்வாகத் திறமையின்மையே காரணம்

## ஜி.கே.வாசன் குற்றச்சாட்டு



**சென்னை, பிப்.11:** தமாகா தலைவர் ஜி.கே.வாசன் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் டிஎன்பிஎஸ்சி குரூப்-2, 2ஏ தேர்வுகள் பிப்.8-ம் தேதி நடைபெறும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. தேர்வு தேதியை அறிவித்த பிறகு, அதற்கான பணிகளை முறையாக செய்திருக்க வேண்டியது அந்த நிர்வாகத்தின் கடமை. இதை செயல்படுத்த வேண்டியது தமிழக அரசின் பொறுப்பு.

தேர்வர்கள் இரவு பகல் பாராமல் படித்து தங்களை தயார் செய்துகொண்டு லட்சியக் கனவுகளோடு வரும் சூழலில், ‘தேர்வு ரத்து’ என்ற அறிவிப்பு அவர்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது.

தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால் தேர்வு ரத்தாவது, ஒரே எண்ணுக்கு 2 தேர்வு மையங்கள் வருவது போன்ற குளறுபடிகள் ஏற்பட்டுள்ளன. இதெல்லாம் நிர்வாகத் திறமையின்மைக்கு எடுத்துக்காட்டு. டிஎன்பிஎஸ்சி தேர்வு ரத்து செய்யப்பட்டதற்கும், தேர்வர்கள் வேதனை அடைந்ததற்கும் தமிழக அரசே பொறுப்பேற்க வேண்டும். வருங்காலத்தில் இதுபோன்ற குளறுபடிகள் நடக்காமல் இருக்க, தமிழக அரசும், டிஎன்பிஎஸ்சி நிர்வாகமும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

# ஆளுநர் கான்வாயில் பைக்கில் நுழைந்த 2 பேர் கைது

**சென்னை, பிப்.11:** தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி திருவான்மியூரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்றார். பின்னர் அங்கிருந்து கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகைக்கு காரில் புறப்பட்டுச் சென்றார்.

அவரது காருக்கு முன்னும், பின்னும் காவல் துறையின் பாதுகாப்பு வாகனங்கள் சென்றன. அவரது கார், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை அருகே செல்லும் போது பைக் ஒன்று திடீரென அத்துமீறி நுழைந்து ஆளுநர் காரை பின் தொடர்ந்து சென்றது. ஆளுநருக்கு பாதுகாப்புக்காக சென்ற காவல் துறை வாகனங்களையும் முந்திச் சென்றது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த போலீஸார், அவர்கள் இருவரையும் பிடிக்க முயன்றனர்.

ஆனால் இருவரும் பைக்கில் வேகமாக சென்றதால், போலீஸாரால் பிடிக்க முடியவில்லை. இதையடுத்து போலீஸார் ஆளுநர் மாளிகை முன் நின்று கொண்டிருந்த போலீஸாருக்கு வாக்கி டாக்கி மூலம் தகவல் கொடுத்து அந்த பைக்குகளை பிடிக்க உத்தரவிட்டனர். அதன்படி அத்துமீறிய இருவரையும் போலீஸார் பிடித்து, கிண்டி காவல்நிலையத்தில் ஒப்படைத்தனர்.

விசாரணையில் அவர்கள் கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த அன்புராஜ் (22), விழுப்புரத்தைச் சேர்ந்த ஜீவா (22) என்பதும், இருவரும் பெருங்களத்தூர் பகுதியில் தங்கியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதும், விடுமுறை தினம் என்பதால் அடையாறுக்கு வந்ததும், அங்கிருந்து மது அருந்திவிட்டு பெருங்களத்தூருக்கு புறப்பட்டதும் தெரியவந்தது.

மேலும் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை பகுதியில் நடைபெற்ற வாகன சோதனையில் போலீஸாரிடம் பிடிபடாமல் இருப்பதற்காக ஆளுநர் வாகன அணிவகுப்புக்குள் அத்துமீறி நுழைந்திருப்பதும், ஆளுநர் வாகன அணிவகுப்புக்குள் சுமார் அரை கிலோ மீட்டர் பயணித்திருப்பதும் தெரிய வந்தது. இதையடுத்து போலீஸார் இருவரையும் கைது செய்தனர்.

# தமிழகத்தில் காணொலி மூலம் சாட்சி விசாரணைக்கு வரவேற்பு!

**சென்னை, பிப்.11:** தமிழகத்தில் காணொலி மூலம் சாட்சி விசாரணை மேற்கொள்ளும் நடைமுறை முதல்முறையாக அமல்படுத்தப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சியை காவல் துறையினர் வரவேற்றனர்.

தமிழக காவல் துறையிடம் பொதுமக்கள் ஆண்டுக்கு சுமார் 20 லட்சம் புகார்கள் அளிக்கின்றனர். அதன்பேரில் முகாந்திரத்தின் அடிப்படையில் சுமார் 5 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. சிறு குற்ற வழக்குகள், நீதிமன்றங்களால் உடனடியாகத் தீர்க்கப்படுகின்றன. குடும்பங்களுக்கு இடையிலான தகராறு தொடர்பான வழக்குகள், உணர்ச்சிவசப்பட்டு நிகழும் குற்றங்கள் தொடர்பான வழக்குகள் சில மாதங்களில் சமரசம் காணப்பட்டு திரும்பப் பெறப்படுகின்றன.

இருப்பினும் இதுபோன்ற வழக்குகள், காவல் துறையின் பணிச் சுமை, சாட்சிகளையும், தடயங்களையும் ஆஜர்படுத்துவதில் ஏற்படும் தாமதம், நீதித் துறையில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களால் ஏற்படும் தாமதம் போன்றவற்றால் வழக்கு விசாரணையில் தொய்வு ஏற்படுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் உள்ள நீதிமன்றங்களில் மட்டும் சுமார் 7 லட்சம் குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் குற்ற வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்தி, குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலம் சட்டப்படி தண்டனை பெற்றுக் கொடுப்பதில் தமிழக காவல் துறை அண்மைக்காலமாக தீவிரம் காட்டி வருகிறது.

காணொலி விசாரணை

சாட்சி விசாரணையை காணொலிக் காட்சி மூலம் நடத்தலாம் என தமிழக உள்துறை அண்மையில் உத்தரவிட்டது. காணொலி மூலம் சாட்சிகளை விசாரிக்க பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்டம் -2023 பிரிவு 265, 266 சட்டபூர்வ அனுமதி வழங்குகிறது. இதனடிப்படையில் தமிழக உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் தீரஜ்குமார் பிறப்பித்த உத்தரவின்படி, தமிழக காவல் துறையில் மாநிலம் முழுவதும் உள்ள நகர காவல் ஆணையர் அலுவலகம், மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், அனைத்து அரசு மருத்துவமனைகள், மத்திய சிறைகள், மாவட்ட சிறைகள், கிளைச் சிறைகள், தடயவியல் துறை அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சி, நகராட்சி ஆணையர் அலுவலகங்கள், தலைமைச் செயலகத்தில் இருக்கும் அரசு செயலர்கள், ஆணையர் அலுவலகங்கள் ஆகியவை காணொலி மூலம் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகும் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் 2004-ஆம் ஆண்டு முதல் சிறைகளில் இருக்கும் கைதிகளை காணொலி மூலம் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜர்படுத்தும் முறை அமலில் உள்ளது. இந்த நடவடிக்கையால் காவல் துறையினரின் பணிச் சுமை வெகுவாகக் குறைந்தது. மேலும், நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் கைதிகள் தப்பியோடும் சம்பவம், கைதிகள் மீதான தாக்குதல் தூக்குதல் நிகழ்வுகள், சிறைக்குள் சட்ட விரோத பொருள்களைக் கடத்துவது உள்ளிட்ட குற்றங்கள் பெருமளவு குறைந்தன.

இதேபோல 2018-ஆம் ஆண்டு முதல் வழக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு சம்பந்தப்பட்டவர்களின் கைப்பேசிகளுக்கு குறுஞ்செய்தி மூலம் அழைப்பாணை அனுப்பப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டது. இதனால் நீதிமன்ற அழைப்பாணை உத்தரவுடன் சம்பந்தப்பட்டவர்களை காவல் துறையினர் தேடி அலையும் நேரம் குறைந்தது.




# TNPSC தேர்வுகளைக் கூட நடத்த தெரியாதவர், தமிழக முதல்வராக வாய்த்திருப்பது சாபக்கேடு - இ.பி.எஸ்.



**சென்னை, பிப்.11:** அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் பள்ளி வளாகத்தில் புகுந்த விஷப்பாம்பு கடித்ததில் மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகவும் , நாமக்கல் மாவட்டம் குமாரமங்கலத்தில் அரசுப்பள்ளியில் விஷப்பூச்சி கடித்து 3-ம் வகுப்பு மாணவி உயிரிழந்ததாகவும், வரும் செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன.

அம்மாணவர்களின் தாய், தந்தையர்க்கும் குடும்பத்தினர்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திமுக ஆட்சியில், அடிப்படைக் கட்டமைப்போ, சுகாதாரமோ கூட இல்லாத அரசுப்பள்ளிகளின் அவல நிலையால், மாணவர்கள் உயிர் போகும் அளவு சம்பவங்கள் நிகழ்வது என்பது கொடுமையின் உச்சம்.

மேற்கூரை இடிந்து விழுந்து விடுமோ?

சுவர் தன் மீது விழுந்துவிடுமோ?

தரமற்ற உணவால் பாதிப்பு வருமோ?

போன்ற அச்சங்களுக்கு நடுவே தான் மாணவர்கள் அரசுப்பள்ளிகளுக்கு செல்லவேண்டி இருக்கிறது.

இதற்கு நடுவே, கள்ளகுறிச்சி, ரிஷிவந்தியம் அருகே உள்ள கீழத்தேனூர் அரசுப்பள்ளியில் உயர்நிலை நீர்தேக்கத் தொட்டியை மாணவர்களை வைத்து சுத்தம் செய்ததாக வருகின்ற செய்தி மேலும் அதிர்ச்சி அளிக்கின்றது...

இதற்கு கூட ஆட்கள் நியமிக்க வக்கற்ற நிலையில் தான் பள்ளிக்கல்வித்துறை இருக்கிறதா?

அரசுப்பள்ளிக்கு மாணவர்கள் படிக்க வந்தார்களா? அல்லது, உங்களுக்கு வேலை செய்ய வந்தார்களா?

மாணவர்களின் பாதுகாப்பை Compromise செய்து இப்படிப்பட்ட ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்துவது குற்றம் என்பதை இந்த விடியா திமுக அரசு உணருமா?

இந்த நிலைக்கு அரசுப்பள்ளிகளைத் தள்ளிவிட்ட திமுக அரசு, “கல்வியிற் சிறந்த தமிழ்நாடு” என ஆடம்பர மேடை அமைத்து, போலியான சுய விளம்பரம் செய்துகொள்வது வெட்கக்கேடானது.

பள்ளிகளின் பராமரிப்பை, சுகாதாரத்தை உறுதிசெய்ய வேண்டிய தனது தலையாய பணியை தூக்கி எறிந்துவிட்டு, ரீல்ஸ் எடுப்பது, கார் ஓட்டுவது, வாக்கிங் போவது என போட்டோஷூட் எடுப்பது மட்டுமே இருக்கும் ஒருவர், Group II போன்ற அதிமுக்கிய தேர்வுகளைக் கூட முறையாக நடத்த தெரியாதவர், தமிழ்நாட்டுக்கு முதல்வராக வாய்த்திருப்பது சாபக்கேடு.

விஷப் பூச்சி, பாம்புக் கடியால் உயிரிழந்த பள்ளி மாணவர்களின் குடும்பத்தாருக்கு உரிய நிவாரணம் உடனடியாக வழங்கிட வலியுறுத்துகிறேன்.

# பா.ஜ.க ஆக்டோபஸ் மாதிரி எல்லா கட்சிகளையும் விழுங்கி இருக்கிறது- செல்வப்பெருந்தகை



**ஆலந்தூர், பிப்.11:** சென்னை விமான நிலையத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நிருபர்களிடம் கூறியதாவது:-

தமிழக காங்கிரஸ் கட்சியில் புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட தலைவர்கள் அறிமுக கூட்டமும் பயிற்சி முகாமும் டெல்லியில் நடக்கிறது. கூட்டணி பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருக்கிறது.கூட்டணியில் இழுபறி எதுவும் கிடையாது. பேசிக் கொண்டு இருக்கிறோம்.

தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி பற்றி எடப்பாடி பழனிசாமிக்கு என்ன கவலை இருக்கிறது. அ.தி.மு.க. கட்சியை விட்டு விடாமல் பத்திரமாக பார்த்துக் கொள்ள சொல்லுங்கள். பா.ஜ.க ஆக்டோபஸ் மாதிரி எல்லா கட்சிகளையும் விழுங்கி இருக்கிறது. அடுத்து விழுங்க போக இருக்கிற கட்சி அ.தி.மு.க. தான். அ.தி.மு.க.வை முக்கால் வாசி விழுங்கி விட்டது.இன்னும் கொஞ்சம் இருக்கும் கட்சியை விட்டு விடாமல். எடப்பாடி பழ்னிச்சாமி பாதுகாப்பாக வைத்து கொள்வதே பெரிய விசயம்.

அ.தி.மு.க. கூட்டணி மேடை ஏறிவிட்டார்கள் என்கிறீர்கள். கார்ல் மாக்ஸ் சிலை திறப்பு விழாவில் தி.மு.க. கூட்டணி தலைவர்களும் கைகோர்ந்து இருந்தோம். 18-ந் தேதி எல்லாரும் சேர்ந்து மத்திய பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்த உள்ளோம். எல்லாரும் ஒற்றுமையாக இருக்கிறோம்.

பா.ம.க.வை சேர்ப்பது குறித்து முதலமைச்சர் தான் முடிவு செய்வார். பிற கட்சிகளின் பிரச்சினைகளில் காங்கிரஸ் மூக்கை நுழைக்காது. இதை தவறாக பதிவு செய்து உள்ளனர். ஆனால் அதுபோல் எதுவும் சொல்லவில்லை. கூட்டணிக்கு தமிழ்நாடு தலைவராக உள்ள முதலமைச்சர் தான் முடிவு எடுப்பார்.

நாடாளுமன்றத்தில் தான் ஜனநாயகம் பிறக்கிறது. நாடாளுமன்றத்தில் விவாதங்கள் செய்ய அனுமதிக்க வேண்டும். பேசவிட மாட்டோம் என்பது சர்வாதிகாரம். நாடாளுமன்ற பேரவை தலைவர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானத்தை தந்து உள்ளனர்.100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திற்கு ஆதரவாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.கூட்டணிக்காக அதிகாரத்தை காங்கிரஸ் கட்சி மேலிடத்திற்கு தந்து உள்ளோம். கட்சி மேலிடம் பேசி கொண்டு இருக்கிறது. கொஞ்சம் பொறுத்திருங்க்ள்.

இவ்வாறு அவர் கூறினார்.




# மாற்றுத் திறனாளி காணாமல் போன வழக்கில் திடீர் திருப்பம்: கொலை செய்து கழிவுநீர் தொட்டியில் வீசப்பட்டது அம்பலம்




**சென்னை, பிப்.11:** 2 மாதங்களுக்கு முன்பு காணாமல் போன மாற்றுத் திறனாளி வழக்கில் திடீர் திருப்பமாக அவர் கொலை செய்யப்பட்டது தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக இருவரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர் மகேந்திரன் (26). வாய் பேச முடியாத, காது கேளாத மாற்றுத் திறனாளி. இவர் சென்னை புழல் கேம்ப் பகுதியில் தங்கி மாதவரத்தில் உள்ள பிரபல ஜவுளிக் கடைகிடங்கில் சுமை தூக்கும் தொழிலாளியாக வேலை செய்து வந்தார்.

கடந்த டிச.26 முதல் இவர் மாயமானார். இது தொடர்பாக புழல் காவல் நிலையத்தில் உறவினர்கள் புகார் அளித்தனர். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து தேடி வந்தனர். முதல் கட்டமாக மகேந்திரனுடன் வேலை செய்து வந்த திருவள்ளூர் மாவட்டம், புட்லூரை சேர்ந்த லாரன்ஸ் (45) என்பவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இதில் போலீஸாருக்கு எந்த துப்பும் கிடைக்கவில்லை. இந்நிலையில், மாயமான மகேந்திரனின் செல்போன் திருவள்ளூர் மாவட்டம், புட்லூரில் செயல்பாட்டில் இருப்பது போலீஸார் நடத்திய விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து புழல் போலீஸார் அங்கு சென்று மற்றொரு மாற்றுத் திறனாளியான (காது கேளாத வாய் பேச முடியாதவர்) வைத்தியநாதன்(40) என்பவரைப் பிடித்து காவல் நிலையம் அழைத்துச் சென்று, சைகை மொழியில் பேசத் தெரிந்தவர் துணையுடன் விசாரித்தனர்.

அப்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது. கொலைக்கான காரணம் கொலை செய்யப்பட்ட மகேந்திரன், கைது செய்யப்பட்ட லாரன்ஸ் இருவரும் ஒரே இடத்தில் வேலை பார்த்து வந்ததால்நண்பர்களாகி உள்ளனர்.

அடிக்கடி ஒன்றாகச் சேர்ந்து மது அருந்தியுள்ளனர். மேலும் லாரன்ஸ் வீட்டுக்கு மகேந்திரன் அடிக்கடி சென்று வந்துள்ளார். அப்போது லாரன்ஸின் மாற்றுத் திறனாளி மனைவியுடன் மகேந்திரனுக்கு பழக்கம் ஏற்பட்டு இருவரும் நெருங்கியுள்ளனர்.


இதையறிந்த கணவரான லாரன்ஸ், மனைவியைக் கண்டித்துள்ளார். ஆனால் அவர் கேட்கவில்லையாம். இதனால் கணவன்-மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் லாரன்ஸ் மனைவி அவரைப் பிரிந்து மகேந்திரனுடன் புழலில் வீடு எடுத்து தனிக்குடித்தனம் நடத்தினாராம்.

இதனால் ஆத்திரமடைந்த லாரன்ஸ் தன் மனைவியை அபகரித்துச் சென்ற மகேந்திரனை பழிவாங்கத் திட்டம் தீட்டியுள்ளார். இதற்கிடையே மகேந்திரன் தனது மாற்றுத் திறனாளி அடையாள அட்டையை திருநெல்வேலி முகவரியிலிருந்து சென்னைக்கு மாற்ற முயற்சி மேற்கொண்டார். இதற்கு உதவுவதாக லாரன்ஸ் தானாக முன் வந்துள்ளார். மேலும், இருவரும் சமாதானமாகி விடுவோம் என நடித்துள்ளார். இதை மகேந்திரன் உண்மை என நம்பியுள்ளார்.

சம்பவத்தன்று தனது வீட்டுக்கு வரும்படி மகேந்திரனை, லாரன்ஸ் அழைத்துள்ளார். அங்கு, இருவரும் மது அருந்தி உள்ளனர். கூடவே லாரன்ஸின் நண்பர் வைத்தியநாதன் என்பவரும் சேர்ந்து மது அருந்தியுள்ளார். அப்போது லாரன்ஸ், வைத்தியநாதன் இருவரும் சேர்த்து மகேந்திரனை தாக்கி, கழுத்தை நெரித்து கொலை செய்து சடலத்தை வீட்டுக்குப் பின்புறம் உள்ள செப்டிக் டேங்கில் போட்டு மூடியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் வாக்குமூலமாக அளித்ததாக போலீஸார் தெரிவித்தனர். மகேந்திரனின் செல்போனை வைத்தியநாதன் எடுத்துச் சென்று 2 மாதங்களுக்குப் பிறகு தற்போது பயன்படுத்தத் தொடங்கியதால் இந்த கொலைச் சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மகேந்திரனின் உடல் மீட்கப்பட்டது.

# டிஜிபி அலுவலக பெண் அதிகாரி வீட்டில் ரூ.8 கோடி மதிப்புள்ள நகை திருடிய நபர் கைது



**சென்னை, பிப்.11:** தரமணி கானகம், பிள்ளையார் கோயில் தெருவில் வசித்து வருபவர் ஜெயப்பிரதா (45). டிஜிபி அலுவலக நிர்வாகப் பிரிவில் (புலனாய்வு மற்றும் உளவுப் பிரிவான எஸ்பிசிஐடி) அதிகாரியாக உள்ளார்.

கடந்த 23-ம் தேதி காலை ஐ.டி. ஊழியரான கணவர் வேலைக்கும், மகன் கல்லூரிக்கும் சென்ற நிலையில், வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்று மாலை வீடு திரும்பிய போது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

உள்ளே சென்று பார்த்தபோது வீட்டின் பீரோவில் வைத்திருந்த 69 பவுன் (சுமார் ரூ.8 கோடி) எடை கொண்ட 12 தங்க செயின்கள், 3 ஆரம் மற்றும் 3 ஜோடி கம்மல்கள் திருடுபோயிருந்தது தெரிந்தது.

இது தொடர்பாக தரமணி காவல் நிலையத்தில் ஜெயப்பிரதா புகார் அளித்தார். அதன்படி போலீஸார் வழக்குப் பதிந்து அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர்.

இதில், ஜெயபிரதா வீட்டில் திருட்டில் ஈடுபட்டது சென்னை ஆர்.ஏ.புரம், கோவிந்தசாமி நகரைச் சேர்ந்த ஆனந்த் (50) என்பது தெரிந்தது. இதையடுத்து தலைமறைவாக இருந்த அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக நடத்தப்பட்ட விசாரணையில் ஆனந்த், திருவான்மியூர் பகுதியிலும் பூட்டியிருந்த வீட்டின் பூட்டை உடைத்து தங்க நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்து தப்பியதும் தெரிந்தது. இவரிடமிருந்து 54 பவுன் தங்க நகைகள், ரூ.7.5 லட்சம் மற்றும் செல்போன், பைக் பறிமுதல் செய்யப்பட்டன.

# துாய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் விரிவாக்க திட்டம்



## முதல்வர் தொடங்கி வைத்தார்

**சென்னை, பிப்.11:** துாய்மைப்பணியாளர்களுக்கு உணவு வழங்கும் விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளையும் முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று(பிப். 9) வழங்கினார்.

மாநில அளவில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் துாய்மைப் பணியாளர்களுக்கு விரிவாக்கம் செய்யப்பட்ட 3 வேளை உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளையும் முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

இந்த திட்டம் மூலம் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் என மொத்தம் 1.29 லட்சம் துாய்மைப் பணியாளர்கள் பயன் பெறவுள்ளனர்.

திருவள்ளூர் அருகே போலிவாக்கத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் துாய்மைப் பணியாளர்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் உணவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு உணவு வாகனத்தை கொடியசைத்து முதல்வர் தொடக்கி வைத்தார்.

இதனைத்தொடர்ந்து உணவு விரிவாக்க திட்டத்தையும் அவர் தொடக்கி வைத்தார்.

தொடர்ந்து, துாய்மைப் பணியாளர்களுக்கு கல்வி உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து, துாய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கி கலந்துரையாடி குழு புகைப்படம்எடுத்துக்கொண்டார்.

இந்த நிகழ்வில் ஆட்சியர் மு.பிரதாப், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாடுவாழ் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், சட்டப்பேரவை உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், கிருஷ்ணசாமி, டி.ஜே.கோவிந்தராஜன், சுதர்சனம், மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ், ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் வை. ஜெயக்குமார், கூட்டுறவுத்துறை இணைப்பதிவாளர் ஜெயஸிரி, நகர்மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், ஆணையாளர் தாமோதரன், நகர் மன்ற துணைத்தலைவர் சி.சு. ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பகிர்ந்து முதல்வர் ஸ்டாலின் கூறியிருப்பதாவது: இந்தியாவிலேயே முதன்முறையாகத் துாய்மைப் பணியாளர்களின் பசி போக்கும் திட்டம். 2025ம் ஆண்டு நவம்பரில் சென்னை மாநகராட்சியில் 29,455 பணியாளர்கள் பயன்பெறத் தொடங்கப்பட்ட இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் காண்கிறது. மீதமுள்ள, * 24 மாநகராட்சிகளில் 48,768 பேர்,

* 145 நகராட்சிகளில் 29,556 பேர்,

* 479 பேரூராட்சிகளில் 21,910 பேர் என மொத்தம் 1,29,689 துாய்மைப் பணியாளர்களுக்கும் அவர்களது பணிவேளையில் உணவு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.

துாய்மைப் பணியாளர்களுக்கு வீடு, தொழில் முனைவோராகக் கடனுதவி, ஆயுள் காப்பீடு, அவர்களது குழந்தைகளுக்கு உயர்கல்வி உதவித்தொகை என அவர்களின் ஒட்டுமொத்த உயர்வுக்காகப் பாடுபடுவதுதான் திமுக அரசு. இன்னும் பல நலத்திட்டங்களைச் செய்து தருவோம். என்றும் துாய்மைப் பணியாளர்களுக்குத் துணையாக இருப்போம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# மக்காச்சோளம் கொள்முதலை உடனடியாக தொடங்க வேண்டும்: விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்



**சென்னை, பிப்.11:** மக்காச்சோளம் கொள்முதலை தமிழக அரசு உடனடியாக தொடங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ் .மாசிலாமணி கூறியதாவது: பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, அரியலூர், தூத்துக்குடி, நெல்லை, விருதுநகர், தென்காசி, தருமபுரி மற்றும் கோடை சாகுபடியாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் மக்காச்சோளம் சாகுபடி பெரும் அளவு செய்யப்படுகிறது.

தற்போது அறுவடை தொடங்கியுள்ள நிலையில் இதன் விலை குவிண்டால் ரூ.1,600 அளவில் தான் வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு ஏக்கர் மக்காச்சோளம் சாகுபடிக்கு ரூ.20 ஆயிரம் செலவு செய்யப்படுகிறது, ஓரளவுமுறையான உற்பத்தி என்றால் ஏக்கருக்கு சராசரி 15 குவிண்டால் மகசூல் கிடைக்கும்.

ஆனால் தீவிர பருவ மழை, உரிய மழையின்மை, நோய் பாதிப்பு போன்ற காரணங்களால் அதிகபட்சம் ஏழு முதல் ஒன்பது குவிண்டால் மட்டுமே தற்போது சோளம் மகசூல் கிடைக்கிறது.

தற்போது சந்தை விலை ஒரு குவிண்டாலுக்கு சராசரி ரூ.1,600 அளவில் உள்ளது. ஆக ஏக்கர் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் அளவில் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது.

குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டால் ரூ.3,545 என அரசு அறிவித்துள்ளது. அதில் சரிபாதி தான் தற்போது கிடைக்கிறது. வியாபாரிகள் மட்டுமே கொள்முதல் செய்து வரும் நிலையில் இந்த விலை இழப்பை விவசாயிகள் சந்திக்கின்றனர்.

மத்திய அரசு விலையை நிர்ணயித்தால் மட்டும் போதாது. இந்த நெருக்கடியான நிலையில் அரசே மாவட்டங்களில் மக்காச்சோளம் கொள்முதலை உடனடியாக தொடங்க வேண்டும். அரசின் கொள்முதல் மேற்கொள்வதற்கான கட்டமைப்பும், வேளாண் துறையின் மார்க்கெட்டிங் கமிட்டியும் இருக்கிறது.

இதை பயன்படுத்தி விவசாயிகளை பாதுகாக்க அண்டை மாநிலங்களைப் போல இழப்பீட்டு மானியம் வழங்கி ஈடு செய்து விவசாயிகளை காத்திட அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# தீ விபத்து ஏற்பட்டால் விரைந்து அணைக்கும் முறை: தமிழகம் முழுவதும் தனியார் காவலர்களுக்கு பயிற்சி



**சென்னை, பிப்.11:** தீ விபத்து ஏற்பட்டால் விரைந்து அணைப்பது எப்படி என தமிழகம் முழுவதும் தனியார் காவலர்களுக்கு தீயணைப்பு துறையினர் பயிற்சி அளித்தனர்.

தீ விபத்து ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது, தீ விபத்து ஏற்பட்டால் தீயணைப்பு வீரர்கள் விபத்து இடத்துக்கு வருவதற்குள் தீயை கட்டுக்குள் கொண்டு வருவது எப்படி என குடியிருப்புகள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், திரையரங்கம், வணிக வளாகங்கள், பள்ளிகள் போன்றவற்றில் பணிபுரியும் தனியார் காவலர்களுக்கு தீ பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி தமிழகம் முழுவதும் பிப்.9-ம் தேதி நடத்தப்படும் என தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அறிவித்தது.

அதன்படி, சென்னை அசோக் நகரில் உள்ள தீயணைப்பு நிலையத்தில் நேற்று காலை நடைபெற்ற இப்பயிற்சியை தீயணைப்புத் துறை இயக்குநரும், டிஜிபியுமான சீமா அகர்வால் தொடங்கி வைத்தார். இதையடுத்து, தமிழகம் முழுவதும் உள்ள 375 தீயணைப்பு நிலையங்களிலும் இந்த பயிற்சி நடைபெற்றது. சென்னையில் 1,500 பேர் உட்பட தமிழகம் முழுவதும் 5 ஆயிரம் பேருக்கு தீ விபத்து ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்வது எப்படி, தீ விபத்து நடைபெற்றால் அதை விரைந்து அணைப்பது எப்படி என தீயணைப்பு வீரர்கள் பயிற்சி அளித்தனர். இன்றும் இந்த பயிற்சி நடைபெறுகிறது.

# முன்னாள் கூடுதல் டிஜிபி டி.ராதாகிருஷ்ணன் காலமானார்: முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, பிப்.11:** தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்தவர் டி. ராதாகிருஷ்ணன் (73). இவர் கடந்த 1981-ல் தமிழக கேடரில் ஐபிஎஸ் ஆனார். மதுரை காவல் ஆணையர், சென்னை இணை ஆணையர் உட்பட பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றினார். பின்னர் கூடுதல் டிஜிபியாக பணி ஓய்வு பெற்று சென்னையை அடுத்த பனையூரில் குடும்பத்துடன் வசித்து வந்தார்.

இந்நிலையில், அவர் உடல் நலக்குறைவால் நேற்று காலமானார். அவரது உடலுக்கு குடும்பத்தினர், நண்பர்கள், போலீஸ் அதிகாரிகள் நேரில் அஞ்சலி செலுத்தினர். அவரது உடல் பெசன்ட் நகர் மின் மயானத்தில் இன்று எரியூட்டப்படுகிறது.

முதல்வர் இரங்கல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், டி.ராதாகிருஷ்ணன் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன். நான் சென்னை மேயராக இருந்த காலத்தில் சென்னை காவல் இணை ஆணையராக பணியாற்றினார்.

பல்வேறு பொறுப்புகளில் சட்டம்-ஒழுங்கை திறம்பட கையாண்டிருக்கிறார். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், காவல் துறை நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ: இன்று இறுதி ஆய்வு!



**சென்னை, பிப்.11:** பூந்தமல்லி - வடபழனி இடையே மெட்ரோ ரயில் சேவை இயக்குவதற்கு இன்று இறுதி ஆய்வு நடத்தப்படவுள்ளது.

சென்னையில் 2-ஆம் கட்ட மெட்ரோ திட்டத்தில் மெரீனா கடற்கரை கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி சுற்றுச்சாலை வரையிலான வழித்தடம் 26 கி.மீ. தொலைவுக்கு அமையவுள்ளது.

ஏற்கெனவே முதல்கட்ட மெட்ரோ திட்டத்தில் வடபழனி இணைக்கப்பட்ட நிலையில், 2-ஆம் கட்டத்தில் கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி வரையிலான 3-ஆவது வழித்தடமானது வடபழனி மெட்ரோவைக் கடந்து பூந்தமல்லி செல்லும் வகையில் ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

அதில், வடபழனி முதல் பூந்தமல்லி வரையிலான 16 கி.மீ. தொலைவுக்கான மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டுவிட்டது. ரயில் என்ஜின் சோதனையும் நடத்தப்பட்டு ரயில் பாதை வடிவமைப்புக்கான உறுதிச் சான்றும் பெறப்பட்டது.

இதனிடையே, தண்டவாளத்தின் பாதுகாப்பு உறுதித்தன்மை சோதனை செய்யப்பட்டு இந்திய ரயில்வே வாரியமும் ஒப்புதல் வழங்கி பயன்பாட்டுக்கு தயாராகவுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாவதற்கு முன்னதாகவே, பிரதமர் நரேந்திர மோடியும், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினும் இணைந்து பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ சேவையை மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கி வைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், ரயில் தண்டவாளத்தின் தரம், பயணிகள் பாதுகாப்பு, பெட்டிகளின் வசதிகள் உள்ளிட்டவை குறித்து நாளைமுதல் 3 நாள்களுக்கு இறுதிகட்ட ஆய்வை ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம். சௌத்ரி நடத்தவுள்ளார்.

# பறவைக் காய்ச்சல்: ஆஃப் பாயில் சாப்பிட வேண்டாம் என எச்சரிக்கை!



**சென்னை, பிப்.11:** பறவைக் காய்ச்சல் எதிரொலியாக மக்கள் கோழி இறைச்சியை முழுமையாக வேக வைத்து சாப்பிட வேண்டும் என்று தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை அடையாறில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், ‘ஹெச் 5. என் 1’ என்ற பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டது. எனவே, தடுப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தும்படி, தலைமை செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியிருந்தது.

இந்தநிலையில்,சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா. சுப்பிரமணியனிடன் பறவைக் காய்ச்சல் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அப்போது அமைச்சர் பேசியதாவது:

“பறவைக் காய்ச்சல் தொடர்பாக அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய சுகாதாரத்துறை எச்சரிக்கை நோட்டீஸ் அனுப்பியிருந்தது. அந்த தகவல் கிடைத்ததும் காகங்கள் உள்ளிட்ட பறவை இனங்கள் திடீரென்று இறந்தால், அதனை பார்ப்பவர்கள் உடனடியாக ஆழமாக குழித்தோண்டி புதைக்க வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், திடீரென்று உயிரிழக்கும் கோழிகளை சாப்பிட வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கோழி இறைச்சி சாப்பிடுபவர்கள் நன்றாக சமைத்து சாப்பிட வேண்டும். ஆஃப் பாயில் போன்றவற்றை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

தமிழகத்தில் மனிதர்களுக்கு பறவைக் காய்ச்சல் நோய்த் தொற்று இதுவரை ஏற்படவில்லை. மாவட்ட அளவில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது” எனத் தெரிவித்தார்.